விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 204 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 04, வெள்ளிக்கிழமை 19.06.2015

தேனிசை இராகங்கள்
தொடர்பு: 0771013235
பிரதான அனுசரணை:
Rio Ice Cream, Hari Engineers,
ஊடக அனுசரணை: உதயன்

# மஹிந்தவுக்கு கதவடைப்பு

## சு.க. சார்பில் வேட்புமனு வழங்கப்படாது தேசியப் பட்டியல் மூலமும் இடமில்லை அடியோடு மறுத்துவிட்டார் மைத்திரி

கொழும்பு, ஜுன் 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன் றத் தேர்தலில் போட்டியிடுவ தற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்பும் மேற்கொள் ளமாட்டார் என்று, அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம் பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தேசியப் பட்டியலிலும் இடம் வழங் கப்படாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்து விட்டார். அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளர் என்று எவரும் நிறுத்தப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, நாடாளுமன்றத்

பக்.24



## சர்ச்சைக்குரிய கருத்து; முதலமைச்சர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜுன் 19

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தென்பகுதிக்கு அழைக்கப்பட்டுப் பணம் வழங்கப்பட்டதாக முதலமைச்சர் தெரிவித்திருந்த கருத்து சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. இது தொடர்பில் முதலமைச்சரிடம் விளக்கம் கேட்கப்படும் என்று, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா

பக்.24

## விசமிகளால் பனைகள் நாசம்



பக்.21

## கட்டுப்பாடிழந்தது மோ.சைக்கிள் 18 வயது இளைஞர் பரிதாபச் சாவு

### மேலும் இருவர் படுகாயம் வல்லைச் சந்தியில் சம்பவம்

வடமராட்சி,ஜுன் 19

வல்லைச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகக் கூறப்பட்டது.

பக்.24

## மாணவி கொலையை விசாரிக்க பயங்கரவாதச் சட்டம் எதற்கு?

### கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் எம்.பி

யாழ்ப்பாணம், ஜுன் 19

புங்குடுதீவு மாணவியின் படுகொலைக் குற்றவாளிகள் விரைந்து அதி உச்ச தண்டனைக்குள்ளாக் கப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக் கையின் பெயரில், எமது மக்களினால் நிராகரிக் கப்பட்ட பயங்கரவாதச் சட்டத்தை அரசுகையில் எடுத் துள்ளமையை நாம் பார்த் துக் கொண்டிருப்பதா? என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

இந்த விவகாரம், நீதிமன்றத்தின் முன் இருந்தாலும் கூட - அது தொடர்பான சட்டப் போக்குகள், அந்த சட்டப் போக்குகளின் அரசியல் பரிமாணங்கள் ஆகியன குறித்து தமிழர்களின் அரசியல் தலைமைகள் ஒன்று கூடி நுணுக்கமாக, நுட்பமாக ஆராய்ந்து, சில வெளிப்படுத்தல்களை செய்ய வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது.

தமிழ்ப் பேசும் மக்களால் முற்றாக நிராகரிக்

பக்.24

## வாகன வேகம் அறியும் கருவி யாழ்ப்பாணப் பொலிஸாரிடம்



வலி.வடக்கு, ஜுன் 19

யாழ். மாவட்டத்தில் வீதியால் செல்லும் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டை அறியும் கருவி யாழ். போக்குவரத்துப் பொலிஸாருக்குப் பொலிஸ் திணைக்களத்தினால்

பக்.24



## வீடு செல்வதற்கு தயாராகுங்கள்

### அரசுக்கு ஜே.வி.பி எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 19

ஜனநாயகத்தையும் மக்க ளாட்சியையும் நிலைநாட்டுவதற்காகவே மைத்திரி தலைமையிலான புதிய அரசுக்கு ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் ஆணை வழங்கினார்கள்.

பக்.24

## மேலும் 30 பேர் நேற்று பிணையில்

யாழ்ப்பாணம், ஜுன் 19

கடந்த மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த 30 சந்தேக நபர்களை ஐந்து இலட்சம் ரூபா

பக்.21

## நெல்சிப் மோசடியை ஆராய 4 ஆவது குழுவும் நியமிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 19

நெல்சிப் திட்டத்தில் வடக்கில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசார ணை மேற்கொள்ள நான்காவது குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு வடக்கு மாகாணப் பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளது.

நெல்சிப் திட்டம் வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட போது அதில் ஊழல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஊழல் மோசடி குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கடந்த வருடத்தில் கோரிக்கை முன்வைக்கப் பட்டிருந்தது. இது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த விடமும் வேண்டு கோள் முன்வைக்கப்பட் டது.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் இந்த விசாரணையை ஒப்படைத்திருந்தார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் இது தொடர்பில்

பக்.24

## 12 வயது மாணவருக்கு 'மாவா' பொலிஸாரிடம் சிக்கினர் மூவர்

### கொக்குவில் பகுதிப் பாடசாலை ஒன்றில் நேற்றுப் பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜுன் 19

கொக்குவில் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில், 12 வயது மாணவர்களுக்கு 'மாவா' பாக்கு விநியோகித்த சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களிடமிருந்து குறித்த போதைப் பாக்குத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் உப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் நகரப் பாடசாலைகளுக்கு அண்மையாக நடை பெறும் போதைப்பொருள் வியாபாரம் குற்றச் செயல்கள் பாடசாலை மாணவிகளுடன் சேட்டை செய்தல் போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நடவடிக்கைகளை மேற்க் கொண்டுள்ளார். இத்தகைய செயல்களை கண்காணிக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்க் கொள்ளும் வகையிலும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முன்பாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாளாந்தம் சைக்கிள் ரோந்தில் ஈடுபடும் பொலிஸார் காலை மதிய வேளைகளில் பாடசாலை பகுதிகளை கண்காணிப்பதுடன் சந்தேகத்துக்கு இடமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–86)

## இரத்தக் கறையுடன் மோட்டார் சைக்கிள் உடுவிலில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

உடுவிலில் இரத்தக்கறையுடன் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றை சுன்னாகம் பொலிஸார் மீட்டுள்ளனர். அந்த இடத்தில் மோப்ப நாய் உதவியுடன் தேடுதல் நடத்தியும் எதுவும் சிக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை அந்த இடத்துக்கு மோட்டார் சைக்கிள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதில் உள்ள இரத்தக் கறை யாருடையது என்பது தெரியவரவில்லை. குறித்த மோட்டார் சைக்கிள் முன்னர் திருட்டுப் போயிருந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. பெறுமதி வாய்ந்த அந்த மோட்டார் சைக்கிள் மதியம் வரைக்கும் அந்த இடத்திலேயே இருந்ததனால் மக்கள் அது தொடர்பில் ஆராய முற்பட்டு பின்னர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற–4,86)

## பஸ் சேவை இன்மையால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்து கொண்டு திரும்பியவர்கள் நீண்ட நேரம் பஸ் சேவை இன்மையால் பெரும் சிரமமுற்றனர். இ.போ.ச.பஸ் சேவை பகலில் கணிசமான அளவு இடம்பெற்ற போதும், பிற்பகலில் 4 மணியில் போதியளவு பஸ் சேவைகள் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. தனியார் பஸ் வண்டிகளும் பயணிகளை மிகவும் கூடுதலான அளவில் ஏற்றிக் கொண்டு இனி பஸ் சேவை இல்லை என்று கூறி புறப்படுவதற்கு நீண்ட நேரம் தாமதித்துக் கொண்டன.

படகில் இருந்து வரும் பயணிகளையும் தாங்கள் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக தனியார் பஸ்கள் நீண்ட நேரம் தரித்து நின்றுள்ளன. துறைமுகப் பாதைக்கு பயணிகளுடன் வந்த தனியார் பஸ் வண்டிகளும் குறிகாட்டுவான் பஸ் நிலையத்திற்குச் சென்று நிறுத்தி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதிக பயணிகளை ஏற்றிக் கொண்டே பஸ்கள் புறப்பட்டமையால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாக பயணிகள் தெரிவித்தனர். (ற–7)

## வயோதிபரை மோதிய சாரத்திய பயிற்சியாளர் பயிலுநருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நடந்து சென்ற வரை மோதிய சாரதி பயிற்சி கல்லூரியின் பயிலுநர் மற்றும் பயிற்சியாளர் ஆகியோரை தலா 1 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று அனுமதியளித்தார்.

இந்தச் சம்பவத்தில் சரசாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த பேரம்பு நல்லதம்பி (வயது 75) என்பவர் உயிரிழந்தார்.

சாரதி பயிலுநர், பிரேக் பிடிப்பதற்கு பதிலாக அக்ஸிலேட்டரை அழுத்தியமையால், வான் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வயோதிபர் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இது தொடர்பில் விசாரணையை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சாரதி பயிலுநர் மற்றும் பயிற்சியாளரைக் கைது செய்து நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே மேற்படி உத்தரவை நீதிவான் பிறப்பித்திருந்தார். (ற)

# சு.கவுக்குள் பனிப்போர் அம்பலமாகியது நேற்று

## சுசிலின் கருத்துக்கு பந்துல கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 19

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இடம்பெற்றுவரும் பனிப்போர் நேற்று பந்துல குணவர்த்தன ஊடாக பகிரங்கமா கியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி யைச் சார்ந்த எவரும் கட்சித் தலை மையகத்தைத் தவிர்ந்த வேறு இடங்களில் கருத்து வெளியிட முடியாது என கட்சியின் தேசிய அமைப்பாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான சுசில் பிரேம ஜயந்த வெளியிட்ட கருத்துக்கு பந்துல குணவர்தன நேற்றுக் கடும் எதிர்ப்பு வெளியிட்டார்.



நேற்றுமுன்தினம் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த

"சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கட்சித் தலைமையகத்தைத் தவிர்ந்த வேறு இடங்களில் கருத்துகளை வெளியிடக்கூடாது. கருத்து வெளியிடும்சுதந்திரம் அனைவருக்கும் உள்ளது. ஆனால், தனிப்பட்ட முறையில் ஒருவர் வெளியிடும் கருத்து கட்சியின் கருத்தாகாது. கட்சித் தலைமையகத்தில் வைத்து வெளியிடப்படும் கருத்து தான் கட்சியின் அதிகாரபூர்வ கருத்தாக இருக்கும். வாராந்தம் புதன் கிழமை கட்சித் தலைமையகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெறும். கருத்துக் கூற விரும்புபவர்கள் இங்குவந்து கூறலாம். அதைவிடுத்து வெளியில் இருந்து கொண்டு பேசக்கூடாது"– என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்தவின் மேற்படி கருத்துக் குறித்து நாரஹேன்பிட்டியிலுள்ள அபயராம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பந்துல குணவர்தன,

"எனக்கு இது தொடர்பில் எந்த அறிவிப்பும் கிடைக்கவில்லை. கருத்து வெளியிடுவதற்கு எனக்கிருக்கின்ற உரிமையை எவரும் இல்லா தொழிக்க முடியாது. நாம் எந்த இடத்திலும் வைத்து கருத்து வெளியிடுவோம். தேவையேற்பட்டால் வீட்டுக்கு அழைத்தும் கருத்து கூறுவோம்" – என்றார். (ற)

# தேடல் நாடக அரங்கியலுக்கான அறிவு பகிர்வுக் களம் சனியன்று

யாழ்ப்பாணம், ஜூன் 19

நாடகத்துறைசார்ந்த கருத்தாடல்களையும் பகிர்வுகளையும் விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு தேடல் நாடக அரங்கியலுக்கான அறிவுப் பகிர்வுக்களம் ஒன்றை ஈழத்தின் முன்னணி நாடக நிறுவனமான செயல் திறன் அரங்கம் ஆரம்பிக்கின்றது. இதன் முதலாவது நிகழ்வு எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உணர்ச்சி காட்சி – இசை என்ற தலைப்பில். யாழ். பல்கலைக்கழக இசைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான த. றொபேட் உரையாற்றவுள்ளார். ஆற்றுகைக்கலைகளுக்கான இசையமைப்பின் பல்வேறு நாடக நெறியாளர்களுடனும் கலைஞர்களுடனும் தனது அனுபவங்கள் மற்றும் ஆற்றுகைக் கலைகளில் இசை நியதிகள் பற்றியும் அவர் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வை தே.தேவானந்த் தலைமையேற்று நடத்தவுள்ளார். இதில் நாடக அரங்கியல் துறை, இசை நடனத்துறை சார்ந்த மாண வர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கு கொண்டு பயன்பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

# வடக்கில் தொழில் முயற்சிகளை இனம்கண்டு வருமான மூலங்களை அதிகரிக்க நடவடிக்கை

## உள்ளூர் ஆளுகை நிறுவன பொறியியல் ஆலோசகர்

வலி.மேற்கு, ஜூன் 19

புதிய தொழில் முயற்சிகளை இனம் கண்டு புதிய வருமான மூலங்களை அதிகரிக்க வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளை துரிதப்படுத்தவுள்ளோம். – இவ்வாறு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவன பொறியியல் ஆலோசகர் டிலான் பெர்னாண்டோபிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

வடமாகாணத்தில் இதுவரை இனம் காணப்படாத 25 புதிய வருமான மூலங்களை இனம் கண்டு உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கியுள்ளோம்.

இவ்வாறு உணவும் குடிபானமும் தயார் செய்தல், விவசாய உற்பத்தி, கைத்தொழில், கைப்பணி கைத்தொழில், நிர்மாணத்துறை பொருள் உற்பத்தி, விலங்கு வளர்ப்பு ஏற்றுமதிக்கான மீன் உற்பத்தி ,எரிபொருள் நிரப்பு நிலையம் உட்பட 25 புதிய இனம் காணப்பட்ட வருமான மூலங்களில் ஏற்புடையதை தெரிவுசெய்து சபை அனுமதியுடன் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்துக்கும் உள்ளூராட்சி அலுவலகத்துக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

இதில் ஏற்புடைய நிகழ்ச்சித் திட்டங்களை வழிகாட்டல் நடைமுறையூடாக எதிர்வரும் காலங்களில் வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்ளூராட்சி சபைகளில் நிதிசார்ந்த அதிகரிப்பை ஏற்படுத்தி வருமான உயர்ச்சியை ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் முன்னெடுக்கலாம்.– என்றார். (ற–50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகத்தில் ஓடு பிரித்து கத்தி முனையில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 19

சுன்னாகம் பகுதியில் உள்ள ஓய்வு பெற்ற அதிபரின் வீட்டிற்குள் நேற்று அதிகாலை ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்தவர்களைக் கத்தி முனையில் மிரட்டி கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

சுன்னாகம் அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாலையில் உள்ள ஓய்வு பெற்ற அதிபரும் சமாதான நீதிபதியுமான சுசில் சுகந்திரன் என்பவருடைய வீட்டிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அதிகாலை 2.30 மணியளவில் ஓடு பிரித்து உட்புகுந்த திருடர்கள் நித்திரையில் இருந்த ஓய்வு பெற்ற அதிபர் மற்றும் அவரது துணைவியார் ஆகியோரைத் தட்டியெழுப்பி அவர்கள் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையிட்டுள்னர். அதிபரின் மோதிரம், கைத்தொலைபேசி, பணம் 15 ஆயிரம் என்பவற்றுடன் அவரது துணைவியாரின் கழுத்தில் அணிந்திருந்த தாலிக்கொடி மற்றும் சங்கிலி போன்றன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்ட இருவரும் முகத்தை துணியால் மறைத்துள்ளனர்.

இதுகுறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ள நிலையில் சுன்னாகம் பொலிஸார் இது தொடர்பில் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.


(ற-86,101)

# பிஞ்சுகளின் இரத்தத்தால் சிவந்த மண்ணின்மீதே இன்று மாடிக் கட்டடங்கள்

## வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

கொத்துக் குண்டுகள் மூலமும் எறிகணைகள் மூலமும் எமது பிஞ்சுகள் குலைகுலையாக அறுத்து நிலத்தில் வீழ்த்தப்பட்டு அவர்களின் உடல்களில் இருந்து சிந்திய இரத்தத்தினால் சிவப்பேறிய மண்ணில் தான் இன்று மாடிக் கட்டடங்கள் முளைத்து நிற்கின்றன. – இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி மலையாளபுரத்தில் அமைந்துள்ள அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தின் கட்டடத் திறப்பு விழா நேற்று மாலை இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இங்கு மேலும் உரையாற்றுகையில், நான் இந்தப் பகுதிக்குச் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் குறைகேள் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தேன். அப்போது இந்தப் பாடசாலை பற்றிய மிக வேதனைக்குரிய குறிப்பொன்றை, அதிபர் எமக்கு வழங்கி இருந்தார்.

அதாவது 2006 2009 வரையான காலப் பகுதியில் இந்தப் பகுதியில் சுமார் 120 பாடசாலைப் பிள்ளைகள் கொத்துக் குண்டுகள் மூலமாகவும் எறிகணைகள் மூலமாகவும் கொன்று குவிக்கப்பட்டனர் எனவும் 200 பிள்ளைகள் தாய் அல்லது தகப்பனை அல்லது இருவரையும் இழந்த மாணவர்களாகினர் எனவும் 30 பிள்ளைகளின் நிலைமை என்னவென்று இதுவரை தெரியாது என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறு கொத்துக் குண்டுகள் மூலமும் எறிகணைகள் மூலமும் எமது பிஞ்சுகள் குலைகுலையாக அறுத்து நிலத்தில் வீழ்த்தப்பட்டு அவர்களின் உடல்களில் இருந்து சிந்திய இரத்தத்தினால் சிவப்பேறிய மண்ணில்த்தான் இன்று 150 அடி நீளத்தையும் 25 அடி அகலத்தையும் கொண்ட 6 வகுப்பறைகள், ஒரு காரியாலய அறை, ஒரு களஞ்சிய அறை என்பனவற்றைக் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதி மிக அழகாக 6.2 மில்லியன் ரூபா செலவில் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டு இருக்கின்றது.

இறந்து போன அந்தச் சிறார்களை இவ்விடத்தில் மனதில் நிறுத்தி அவர்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று மனதுள் பிரார்த்திப்போமாக! காணாமற்போனவர்கள் இன்னும் உயிரோடிருந்தால் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று அவர்களிடம் ஒரு கோரிக்கையை விடுவோம் – என்றார். (ற-5)

## தடைசெய்யப்பட்ட பாக்குடன் இந்தியர் ஒருவர் நேற்று கைது

### துருவுகின்றனர் பருத்தித்துறை பொலிஸார்

வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் போதை கலக்கப்பட்டதாக சந்தேகிக்கும் 235 க்கு மேற்பட்ட பாக்கு பக்கற்று களுடன் இந்தியர் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

அந்தப் பக்கற்றுகளில் கஞ்சா அல்லது வேறு போதை பொருள்கள் கலக்கப்பட்டதா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் இப்பக்கற்றுகள் மாணவர்களை இலக்கு வைத்து விநியோகிக்கப்பட தயாராக இருந்ததா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.


இந்தியாவிலிருந்து சுற்றுலா விசாவில் வருகை தருவோர் வியா பார நடவடிக்கையை முன்னெடுக்கிறார்களா என்பது தொடர்பில் ஒருவாரமாக பொலிஸார் கண்காணிப்பை தீவிரப் படுத்தியிருந்தனர். இதுதொடர்பான நடவடிக்கையை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் வழி நடத்தியிந் தார். இந்த நிலையில் நேற்றுக் காலை 9 30 மணியளவில் மந்திகை பகுதியில் இந்தியா வியாபாரி ஒருவரிடம் அவரது விசா தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்திய போது அவர் சந்தேகத்துக்கிடமான முறையில் முன்னுக்கு பின் முரணான தகவலை பொலிஸாருக்கு தெரிவித் ததாகக் கூறப்பட்டது.

இதனை அடுத்து சந்தேகமடைந்த பொலிஸார் அவரது பயண பொதி சூட்கேஸினை சோதனையிட்ட போதே 238க்கு மேற்பட்ட பாக்கை ஒத்த பொருள்களுடன் கூடிய பக்கற்றுகளை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பாக்கு இலங்கையில் விற்பனைக்கு தடைசெய் யப்பட்டது என்பதால் அவரை கைது செய்ததாக பொலிஸார் கூறினர். ஆனால் குறித்த சந்தேக நபரிடம் இலங்கையில் வியாபாரம் செய்வதற்கான வியாபார நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அனுமதி விசா இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்

இந்த பாக்கு பக்கற்றுகள் கஞ்சா அல்லது வேறு போதை பொருள்கள் கலக்கப்பட்டதா என்ற கோணத் தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலி ஸார் தெரிவித்தனர். அத்துடன் இப்பாக்குகள் மாணவர் களுக்கு விநியோகிக்கப்பட தயாராக இருந்ததா? இப்பாக்குகள் இங்கு எப்படி கொண்டு வரப்பட்டன? என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக் கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் இந்தியாவின் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த என்.செந்தில்குமார் என்பவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-109)

## மாணவரிடையான முரண்பாடு கத்திக்குத்தில் முடிந்தது



வலி.வடக்கு, ஜூன் 19

யாழ்ப்பாணம் நகரத்துக்கு அண்மையிலுள்ள பிரபல்யமான இந்துக் கல்லூரி ஒன்றில் இரண்டு மாணவர்களுக்கு இடையே எழுந்த முரண்பாட்டைத் தொடர்ந்து பாடசாலையில் வைத்து மாணவன் ஒருவன் கத்தி குத்துக்கு உள்ளாகிய சம்பவம் நேற்றுமுன்தினம் மதியம் இடம் பெற்றுள்ளது.

பாடசாலையில் அதிபர், உப அதிபர்கள் விடுமுறையில் நின்றமையால் அடுத்த நிலையில் இருந்த பதில் அதிபர் எந்த வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலையில் சம்பவம் தொடர்பில் அதிபர் பாடசாலைக்கு வந்த பின்னர் கூறி நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாடசாலைக்குச் சென்று குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். இந்த பிரச்சினையில் தரம் பத்தில் கல்வி கற்கும் மாணவன் கத்தியால் குத்தி தரம் பதினொன்றில் கல்வி கற்கும் மாணவன் முகத்தில் காயத்துக்குள்ளாகியுள்ளான். காயத்துக்கு நான்கு தையல்களும் போடப்பட்டுள்ளன. பொலிஸார் இதன் உண்மையான பின்னணியை ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-86)



## அரச - தனியார் பஸ்களிடையே தொடரும் போட்டியால் முறுகல்

### பயணிகள் நிலையோ திண்டாட்டம்

கிளிநொச்சி, ஜூன் 19

அரச, தனியார் பஸ் சாரதி, நடத்துநரிடையே நேற்றும் கிளிநொச்சியில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் குறித்த பேரூந்தில் பயணித்த மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி 155ஆம் கட்டை ஏ9 வீதியில் போட்டி போட்டு சென்று கொண்டிருந்த இரு பஸ்களின் சாரதி, நடத்துநர்களுக்கு இடையிலேயே இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி 155ஆம் கட்டை சந்தியில் போட்டி போட்டு ஓடிக் கொண்டு வந்த தனியார் பஸ்ஸை அரச பஸ் முந்தி செல்ல முற்பட்டது. அந்த இழுபறியில் இரண்டு பஸ்களும் சிறிய சேதங்களுக்கு உள்ளாகின. அதையடுத்தே அவர்களிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் குறித்த இரண்டு பஸ்களிலும் பயணித்த பொதுமக்கள் தங்களுடைய இடங்களுக்கு குறித்த நேரத்துக்குச் செல்ல முடியாது அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

சம்பவத்தை அறிந்து குறித்த இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி போக்கு வரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அரச மற்றும் தனியார் பஸ்களிடையே இப்படிப்பட்ட பிரச்சினைகள் நாளாந்தம் ஏற்படுவதாகவும் இதனால் பயணிகளே அதிகம் பாதிக்கப்படுவதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

நீண்ட காலமாக வடமாகாணத்தில் அரச தனியார் பஸ்களிடையே முறுகல் நிலை காணப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள். தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன. கடந்த மாதம் 8ம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அரச தனியார் பஸ் உரிமையாளர்களிற்கிடையிலான கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவித்த வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்திருந்தார். ஆனாலும் இது தொடர்பிலான பிரச்சினைகள் இன்னும் தொடர்ந்தவண்ணமே உள்ளது. (ற-21)

## காலம்கடந்து வழங்கப்படவுள்ள மலகூடம் அமைப்பதற்கான நிதி

வலி.தென்மேற்கு, ஜூன் 19

வலி.தென்மேற்குப் பிரதேசசபையால் கட்டுடையில் குடியமர்த்தப்பட்ட நான்கு குடும்பங்களின் நலன் கருதி அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசல கூடங்களை அமைப்பதற்கு யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிதியின் ஒரு பகுதி உரிய காலத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படாது பல மாதங்களின் பின்னர் வழங்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கையை பிரதேச சபை தற்போது முன்னெடுத்துள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் அமைப்பதற்கு பொதுமக்களின் நிதி உதவியுடன் மானிப்பாயில் வாங்கப்பட்ட சிவன் கோயிலுக்குச் சொந்தமான காணியில் சந்ததி சந்ததியாக வாழ்ந்து வந்த நான்கு குடும்பங்கள் பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டுடையிலுள்ள காணியில் குடியமர்த்தப்பட்டன.

சகல வசதிகளும் செய்து தரப்படும் என்று பிரதேச சபையால் கூறப்பட்டதை அடுத்து அந்தக் காணியில் குடியேறிய குடும்பங்கள் மூன்று வருடங்களாக பல வசதியீனங்கள் மத்தியில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத வகையில் வாழ்கின்றனர்.

இவர்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூடத்தை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்திருந்த யுனிசெவ் நிறுவனம் ஒவ்வொரு மலசலகூடம் அமைப்பதற்கு 80 ஆயிரம் ரூபா வீதம் அதற்குரிய பணத்தை கட்டம் கட்டமாக பிரதேச சபைக்கு வழங்கியிருந்தது. மலசல கூடம் அமைப்பதற்கு யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பணத்தில் 70 ஆயிரம் ரூபா வீதம் நான்கு குடும்பங்களுக்கு வழங்கிய பிரதேச சபை மீதிப் பணத்தை வழங்காமல் பல காரணங்கள் கூறி காலம் கடத்தி வந்தது.

கடன்பட்டு மலசலகூடங்களைக் கட்டி முடித்த பயனாளிகள் மீதிப்பணத்தைத் தருமாறு பிரதேச சபையை பல தடவை கோரியிருந்ததுடன் உறுப்பினர்களின் உதவியையும் நாடியிருந்தனர். பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டங்களின் குடும்பங்களின் நிலை குறித்து எடுத்து விளக்கிய உறுப்பினர்கள் பணத்தை தாமதிக்காமல் வழங்குமாறும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் பிரதேச சபையின் ஜூன் மாதக் கூட்டத்தில் பணம் வழங்கப்பட வேண்டிய அவசியம் குறித்து விரிவாக ஆராயப்பட்ட போது சில உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என்றும் ஒரு சிலர் வழங்கவேண்டாம் என்றும் தெரிவித்தனர்.

இதையடுத்து இந்த விடயம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அதிகமான உறுப்பினர்கள் பணம் வழங்க வேண்டும் என்று தெரிவித்ததை அடுத்து இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கமைய பயனாளிகளுக்கு பணத்தைக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது. (ற-115)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு திருமலையில் நடைபவனி

திருகோணமலை, ஜூன் 19
சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று திருகோணமலை மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தால் விழிப்புணர்வு வீதி நடைபவனி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி வ.விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு பேரணியில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்து கொண்டிருந்தனர். திருகோணமலை நீதிமன்றத்திற்கு அருகாமையில் உள்ள ஏகாம்பரம் மைதானத்தில் இருந்து நடைபவனியாக சென்றவர்கள், திருகோணமலை மத்திய பஸ் நிலையம் வரை சென்றனர்.



இவ்விழிப்புணர்வு நடவடிக்கையின் ஓர் அங்கமாக, பாடசாலை மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட தெரு நாடகம் தபால் நிலைய வீதியிலும்,மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலும் நடத்தப்பட்டது.

(ற)

# கிராம சேவையாளர் பிரிவை அதிகரிக்குமாறு கோரிக்கை

## வவுனியா பிரதேச செயலர் பிரிவில்

வவுனியா, ஜூன் 19
வவுனியா பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரிப்பதற்கான முன்மொழிவு வட மாகாண சபை உறுப்பினர் எ.ம்.பி.நடராஜாவால் வடக்கு மாகாண சபையில் பிரேரிக்கப்பட்டுள்ளது. அதிகரித்துள்ள மக்கள் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரிக்க வேண்டும் என்று அவர் முன்மொழிந்துள்ளார்.

தோணிக்கல், கூமாங்குளம், கந்தபுரம், ஆசிகுளம், சாஸ்திரிக்குளாங்குளம், சமளங்குளம், மகாறம்பைகுளம், ஈச்சங்குளம், மரைக்காரம்பளை, ராஜேந்திரன்குளம் ஆகிய கிராமசேவையாளர்பிரிவுகளிலும், வெங்கல செட்டிகுள பிரதேச செயலக பிரிவில் ஆண்டியபுளியங்குளம் கிராமசேவையாளர் பிரிவிலும் கிராமங்களின் எண்ணிக்கையும் அங்குள்ள மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுவதனால் அதற்கேற்ற வகையில் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்து அக்கிராம மக்களின் வளர்ச்சிக்கு உதவி புரிய வேண்டும் என்று அவர் கோரினார்.

தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவில் இரண்டு கிராமங்களும் 3 ஆயிரத்து 983 குடும்பங்களும் 13 ஆயிரத்து 934 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். மகாறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் நான்கு கிராமங்களும் 2 ஆயிரத்து 390 குடும்பங்களும் 8 ஆயிரத்து 027 அங்கத்தவரும் காணப்படுகின்றனர்.

கூமாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 583 குடும்பங்களும் 6 ஆயிரத்து 833 அங்கத்தவர்களும் உள்ளனர். ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் பதின்மூன்று கிராமங்களும் ஆயிரத்து 584 குடும்பங்களும் 5 ஆயிரத்து 732 அங்கத்தவரும் காணப்படுகின்றனர்.

ஈச்சங்குளத்தில் கிராம அலுவலர் பிரிவில் எட்டு கிராமங்களும் ஆயிரத்து 433 குடும்பங்களும் 4 ஆயிரத்து 716 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். மரைக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவில் ஐந்து கிராமங்களும் ஆயிரத்து 236 குடும்பங்களும் 4 ஆயிரத்து 369 அங்கத்தவரும் காணப்படுகின்றனர்.

சமணங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஐந்து கிராமங்களும்1 ஆயிரத்து 093 குடும்பங்களும் 3 ஆயிரத்து 730 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் நான்கு கிராமங்களும்1 ஆயிரத்து 085 குடும்பங்களும் 3 ஆயிரத்து 732 அங்கத்தவரும் காணப்படுகின்றனர்.

ராஜேந்திரன்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஒன்பது கிராமங்களும்708 குடும்பங்களும் 2 ஆயிரத்து 749 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். ஆண்டியா புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஆறு கிராமங்களும் ஆயிரத்து 168 குடும்பங்களும் 4 ஆயிரத்து 353 அங்கத்தவரும் காணப்படுகின்றனர். – என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கேிராம சேவையாளர் பிரிவில் கிராமங்களின் எண்ணிக்கையும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படும் போது கிராம சேவகரால் மக்களுக்கு வழங்கப்படும் சேவையும் கிராம சேவையாளரிடமிருந்து மக்கள் பெற்றுக் கொள்ளும் சேவையும் கேள்விக் குறியாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-402)

## வேலை வாய்ப்பை மேம்படுத்தும் செயற்றிட்டம்

கிளிநொச்சி, ஜூன் 19
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை மேம்படுத்தும் செயற்திட்டத்துக்காக குறித்த இரு மாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர் யுவதிகளை விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் யுவதிகளை இலக்காக கொண்டு அவர்களின் தொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ளவும், அவர்களிடையே உள்ள தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துவதற்காகவும் நோர்வே அரச நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினூடாக அந்தந்த மாவட்ட செயலகத்தினால் பிரதேச செயலகங்களினூடாகவே இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்டுகின்றது.

இந்தச் செயற்திட்டத்தில் இணைய விரும்பும் குறித்த மாவட்டங்களை சேர்ந்த இளைஞர் யுவதிகளை இம்மாத இறுதிக்குள் தங்களது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ற-21)

# சீன நிறுவன உதவியுடன் குடி தண்ணீர் கிணறுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19
வட பகுதிக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கிணறுகளை அமைக்க, இரு சீன நிறுவனங்கள் முன்வந்துள்ளன.



இந்த திட்டத்துக்காக சுமார் 14 ஆயிரத்து 400 அமெரிக்க டொலர்களை வழங்க இரு நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக சீன ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஐந்து குடிநீர் கிணறுகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்கார் வீட்டா எனும் அமைப்பு மனிதாபிமான முறையில் உதவி செய்யுமாறு விடுத்த கோரிக்கைக்கமைய இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அண்மைய வருடங்களில் இலங்கை அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும் வட பகுதியில் சுத்தமான குடிதண்ணீருக்கான பிரச்சினை தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்றது என சீனா துறைமுக இலங்கை பகுதி நிறுவனத்தின் துணை பொது முகாமையாளர் டெங் போ தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனங்கள் இலங்கையர்களின் நன்மைக்காக பல்வேறு வகையிலும் தொடர்ந்தும் பங்களிப்பு செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## புதையல் தோண்டிய நால்வர் கைது

திருகோணமலை, ஜூன் 19
திருகோணமலை, தோப்பூர் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்து என்று கூறப்படும் 6 ஆயிரம் கிலோ தங்கத்தை எடுப்பதற்காக பக்கோரக இயந்திரத்தை பயன்படுத்தி தோண்டிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் நான்கு பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், பக்கோரக இயந்திரத்தை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ற)

## விபத்தில் ஒருவர் காயம்

திருகோணமலை, ஜூன் 19
சேருநுவர பகுதியில் நேற்றுமுன்தினம் வானும் லோறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வான் சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தளவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூதூரிலிருந்து கொழும்பை நோக்கிச் சென்ற வானும் கந்தளாயிலிருந்து மூதூருக்குச் சென்ற லொறியுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் தாதியர் விடுதி அமைக்க கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 19
சாவகச்சேரி மருத்துவமனையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் தமக்கு மருத்துவமனை வளாகத்தில் வதிவிடம் அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவமனையில் கடமையாற்றும் பெண் தாதிய உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர விடுதிக் கட்டடம் இல்லாததால் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து இங்கு கடமையாற்றுவோர் மருத்துவமனை விடுதிகளில் உள்ள அறைகளில் தங்கியுள்ளனர். யாழ்ப்பாணம் மற்றும் தூர இடங்களில் வதியும் தாதிய உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரம் முடிந்து வீடு செல்ல முடியாத நிலை ஏற்படும் வேளைகளில் கடமையாற்றும் விடுதிகளிலேயே தங்கிச் செல்ல வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு, இரத்தினபுரி, கம்பகா மற்றும் பொலநறுவை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர்கள் இங்கு கடமையாற்றுவதால் தாம் தங்கியுள்ள விடுதி அறைகளில் சமையல் செய்யக்கூடிய வசதி இல்லாததால் மூன்று வேளையும் கடைகளில் உணவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை மருத்துவமனையில் கடமையாற்றும் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் நுண்ணியலாளர்கள் மருந்தாளர்கள் போன்றோர் விடுதிகளில் உள்ள அறைகளிலேயே தங்கியுள்ளனர்.

விடுதிகளில் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெறும் வேளைகளில் இவர்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதனால் அடுத்த வருடமாவது பெண் தாதிய உத்தியோகத்தர்களுக்கு சமையலறை வசதிகளுடன் கூடிய வதிவிடங்கள் அமைத்து தருமாறு கோரியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்தடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, முற்றாக அழிக்கப்பட்ட சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்ட போது மருத்துவர்களுக்கு மட்டும் வதிவிட கட்டடங்கள் அமைக்கப்பட்டன் ஏனைய தர உத்தியோகத்தர்களுக்கான வதிவிட கட்டடம் அமைத்துத் தருவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை நிர்மாணிக்கப்படவில்லை.

தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறையாக உள்ளதாலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு விடுதிகளில் காணப்பட்ட அறைகளை தற்காலிகமாக உபயோகிக்க அனுமதித்துள்ளோம். விடுதியில் நோயாளர்கள் அதிகரிக்கும் போது அங்குள்ள அறைகளில் தங்கியுள்ள தாதிய உத்தியோகத்தர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மருத்துவமனை வளாகத்தில் வேறு கட்டட வசதி இல்லாததால் சிரமங்களுக்கு மத்தியிலும் கடமையாற்றி வருகின்றனர்.

மருத்துவமனை ஆளணிக்கேற்ப தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டால் வதிவிட வசதி பெரும் பிரச்சனையாக அமைந்து விடும். இதனைத் தவிர்க்க விரைவில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வதிவிட வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. – என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

## கிழக்கு எதிர்க்கட்சி தலைவராக திஸாநாயக்க நியமனம்

திருணோமலை, ஜூன் 19
பெரும் அமளிதுமளிக்கு பின்னர் கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராக கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க கடந்த செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு, சபைத் தவிசாளர் சந்திரதாச கலபதி தலைமையில் காலை 9.30க்கு கூடியது.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களான எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.சுபைர், விமலவீர திஸாநாயக்க ஆகியோர், எதிர்க்கட்சி தலைவரை நியமிக்குமாறு கோரி கடும் ஆரவாரம் செய்தனர். அதனால், அவையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. அவையை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனதால் அவையை ஒரு மணிநேரத்துக்கு அவைத் தலைவர் ஒத்திவைத்தார்.

சபை அமர்வு மீண்டும் 1.30க்கு ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எட்டுபேரின் ஆதரவுடன் விமலவீர திஸாநாயக்க கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலை வீழ்த்துவதற்கு நாள் குறிக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சிறிபாலடி சில்வா இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 19

தேர்தல் திருத்தச்சட்டத்தை அரசு நிறைவேற்றினால் உடனடியாக பொதுத்தேர்தலுக்குமுகம்கொடுக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி தயாராகவே உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியில் இருந்து வீழ்த்த விரைவில் நாள் குறிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசின் மோசடிகள் மற்றும் மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் அரசின் மீது எமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றோம்.

அதேபோல் நிதி அமைச்சில் நடைபெறும் கொள்ளைகளை வெளிப்படுத்த வேண்டிய தேவையும் எமக்கு உள்ளது. குறிப்பாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவது தொடர்பில் கடந்த சில வாரங்களாகவே நாம் தீர்மானம் எடுத்திருந்தோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பெரும்பான்மை ஆதரவு அமைச்சர் ரவிக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணையை நிறைவேற்றுவதாகவே இருந்தது. ஆனால் ஒவ்வொரு கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இந்த பிரேரணை தொடர்பில் காலம் தாழ்த்தப்பட்டு வந்தது.

ஆனால் மிகவும் போராட்டத்தின் மத்தியில் நாம் அமைச்சர் ரவி கருணாநாயகவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளோம்.

அதற்கு அமைய எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ரவி




கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்படும். இது விசேட தினத்தில் கூட்டப்படும் நாடாளுமன்றம் என்பதையும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே 6ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் நாடாளுமன்ற விவாதம் பிற்பகல் 6.30 மணிவரையில் நடைபெறும். அதன் பின்னர் அமைச்சர் ரவிக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பிலான வாக்கெடுப்பு நடைபெறும்.

அதேபோல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை தொடர்பிலும் நாம் சபாநாயகரிடம் தெரிவித்தோம். ஆனால் பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பில் உடனடியாக விவாதிக்க முடியாத நிலைமை உள்ளது.

குறிப்பாக அவர் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பில் பல வழிமுறைகள் உள்ளன. நம்பிக்கை இல்லாப் பிரேரணையை மூன்று மொழிகளுக்கும் மாற்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு சிறிது காலம் தேவைப்படும். ஆனால் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. அதேபோல் கடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பில் நாம் அழுத்தமான கருத்துக்களை முன்வைத்ததற்கு அமைய அடுத்த மாதம் மூன்றாம் வாரத்தில் இந்த விவாதத்துக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க முடியுமென சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஆகவே அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எடுப்போம். வெகு விரைவில் பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுப்பதற்கான நாள் குறிப்போம்.

இந்த அரசு மக்களின் ஆதரவில் அமையவில்லை. ஜனாதிபதியை மட்டுமே மக்கள் ஆதரித்துள்ளனர். ஆனால் பிரதமர் மக்களின் ஆதரவு இன்றி ஆட்சிக்கு வந்துள்ளார். எனவே இந்த அரசின் ஆட்சியை உடனடியாக கலைக்க வேண்டும் என்பதே எம் அனைவரினது எதிர்பார்ப்பாகும்.

எனினும் நாடாளுமன்றத்தைக் கலைக்க முன்னர் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுதியாக உள்ளது. நாட்டில் ஆட்சி நடத்துவது எப்படி என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெரியவில்லை.

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்டு வருகின்றது. இவற்றை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும். மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் ஆட்சியை பலப்படுத்தி இழந்த அனைத்தையும் மீளவும் நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். – என்றார். (ற)

# தேர்தலைப் பின்தள்ள அனுமதிக்க முடியாது

## ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 19

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை அவசர சட்ட மூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். 20 ஆவது திருத்தத்தைக் காரணம் காட்டி நாடாளுமன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு இடமளிக்க முடியாது.– இவ்வாறு தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை பிற்போடுவதற்கு சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. புதிய முறைமையின் பிரகாரம் தேர்தலுக்குச் செல்வதற்கு நாம் தயாரில்லை என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் சிறுபான்மை அரசு என்ற வகையில் எமது நல்லாட்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு முறையின் பிரகாரம் செயற்படுத்த முடியாமல் உள்ளது. பெரும்பான்மை பலம் எதிர்க்கட்சியிடம் காணப்படுவதால் அரசுக்கு எதிராக சதித்திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன.

இந்நிலையில் தேர்தல் மறுசீரமைப்பு என்பது முக்கியமான அம்சமாகும். எனினும் அந்தக் காரணத்தை முன்னிலைப்படுத்தி நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியாது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு பெரியளவில் இடையூறு விளைவிக்கப்பட் டது.

எனவே தற்போது எதிர்க்கட்சியால் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு எதிராக சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு நாம் உடந்தையாகச் செயற்பட முடியாது. ஜனவரி 8 ஆம் திகதி நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு ஏற்ப நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும்.

எனினும் ஜனவரி 8 ஆம் திகதி நாட்டு மக்களின் ஆணை தொடர்பில் புரியாதவராக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் செயற்படுகிறார். ஏன் மக்களின் ஆணையை புரிந்து கொண்டு நடக்க முடியவில்லை. தேர்தல் மறுசீரமைப்பு மிகவும் அவசியமாகும். எனினும் எதிர்க் கட்சிகள் அதனை நிறைவேற்ற இடமளிக்க மாட்டா.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதைப் பிற்போட்டு விட்டு தேர்



தலை ஏப்ரல் மாதம் நடத்துவதற்கு சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எனவே அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தை காரணம் காட்டி நாடாளுமன்ற தேர்தலை பிற்போட முடியாது. இது காலத்தை வீணடிக்கும் செயலாகும்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட வேண் டுமாயின் குறித்த திருத்தச்சட்டம் அவசர சட்டமூலமாக நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் இந்த திருத் தச்சட்டத்தை இலகுவில் நிறை வேற்ற முடியாமல் போய்விடும்.

எவ்வாறாயினும் பழைய தேர்தல் முறைமையின் பிரகாரமே தேர்தல் நடத்தப்படவேண்டும். புதிய முறைமையின் பிரகாரம் தேர்தலுக்குச் செல்வதற்கு நாம் தயாரில்லை. புதிய முறைமைக்கு அமைவாக தேர்தலுக்கு செல்வதற்கு பல மாதங்கள் தேவைப்படும்.

தேர்தல் முறைமையில் மறுசீரமைப்பு செய்தால் அரசியல்வாதிகளின் பணச் செல்வாக்கு குறையாது. இதனை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்கு பழக்கப்படுத்தி விட்டார்.– என்றார். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பலரும் உங்களை நல்லவிதமாக எண்ணுகின்ற புதிய சூழல் உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில், முன்னேற்றம் ஏற்படும். கொடுக்கல், வாங்கல் சீராகும். குடும்பத்தினருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** ஆரவாரத்தை தவிர்த்து அமைதியாக செயற்பட வேண்டும். தொழில் சிறக்க, நண்பரின் ஆலோசனை உதவும். பணவரவு நன்றாக இருக்கும். அரசியல்வாதிகள் வெகுநாள் எதிர்பார்த்த பலன், முயற்சியால் கிடைக்கும்.

**மிதுனம்:** சிந்தனை மற்றும் செயலில் புத்துணர்ச்சி ஏற்படும். எந்தச் செயலையும் எளிமையாக முடித்து விடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி சிறப்பாக நடக்கும். பணவரவு கூடும். உறவினர்கள் அன்புடன் நடப்பர்.

**கடகம்:** பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வரவேற்பு கிடைக்கும். பழைய கடன் மீளக் கிடைக்கும். கடனில் கொஞ்சம் செலுத்துவீர்கள். பெண்கள் நகை, பணம் வாங்கலாம். சிறப்பான நாள்.

**சிங்கம்:** திட்டமிட்ட செயலை உற்சாகத்துடன் முடிப்பீர்கள். இடையூறுகளை சரி செய்ய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரம் சிறக்க அறிமுகம் இல்லாதவர்களும் உதவுவர். சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். சில நன்மைகளைப் பெறுவீர்கள். அவமதித்தவர்கள் கூட, தங்கள் தவறை உணர்ந்து அன்பு கொள்வர். தொழிலில் உருவான மந்த நிலை மாறும். உடல்நிலை பலம்பெறும்.

**துலாம்:** அலட்சிய சிந்தனை விலகும். திறமைமிகு உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணவரவுக்கு ஏற்ப செலவுகளும் துரத்திக் கொண்டு வரும். உணவு விடயத்தில் கவனம் தேவை. பெண்கள் ஆடை வாங்குவர்.

**விருச்சிகம்:** உங்களை, சிலர் தனக்குச் சாதகமாக பயன்படுத்த நினைப்பர். அவர்களுக்கு துணை போக வேண்டாம். தொழில், உற்பத்தியில் விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் சில சலுகைகளை எதிர்பார்க்கலாம்.

**தனுசு:** சிலர் மீது கொண்ட அதிருப்தி தேவையற்றது எனக்கருதி தவறை உணர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.

**மகரம்:** செயல்கள் இனிதாக நிறைவேறும். மனதில் மகிழ்ச்சியும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தை விருத்தி செய்ய கூடுதல் மூலதனம் செய்வீர்கள். வளர்ச்சியும், வருமானமும் கூடும். உறவினர்களுக்கு உதவுவீர்கள்.

**கும்பம்:** பேசுவதைக் குறைத்து செயலில் கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் ஓரளவுக்கு இருக்கும். சுப நிகழ்ச்சிகள் குறித்த பேச்சுவார்த்தை சுமுகமாக நடக்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத சலுகை கிடைக்கும்.

**மீனம்:** சில வசதிகளைப் பெறுவது குறித்து திட்டம் தீட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும் என்றாலும் இலாபம் உண்டு. அறிமுகமில்லாத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வருவார். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.



## கண்ணாடித் தொலைக்காட்சி

கண்ணாடி வகையிலான தொலைக் காட்சியை அறிமுகம் செய்துள்ளது சாம்சுங் நிறுவனம். தொலைக் காட்சியைப் பயன்படுத்தும் நேரம் தவிர மற்ற நேரத்தில் ஒரு தொலைக் காட்சி இருக்கும் தோற்றமே இருக்காது. இந்தக் கண்ணாடி தொலைக்காட்சி விரைவில் விற்பனைக்கு வர உள்ளது.

## எங்கே போகிறது உலகம்?

செல்போன்களை பயன்படுத்தியவாறே வீதிகளில் நடந்து செல்பவர்களாலும், வாகனங்களில் செல்பவர்களாலும் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட செல்போன் அடிமைகளை பாதுகாக்க நவீன யுக்தி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதாவது, செல்போன் பயன்படுத்தியவாறு செல்பவர்களுக்கு என்று பெல்ஜியத்தின் அன்ட்வெர்ப் நகரில் தனிப் பாதை ஒன்றை செல்போன் நிறுவனம் ஒன்று உருவாக்கி உள்ளது. இந்தப் பாதையில் செல்பவர்கள் செல்போன்களில் பேசிக் கொண்டும், வட்ஸ்–அப், பேஸ்புக் மூலம் குறுஞ் செய்திகளை அனுப்பியவாறும் நடந்து செல்லலாம்.


இதனால் எதிரே வருபவர்கள் அல்லது மின்கம்பங்களில் மோதும் பிரச்சினை எதுவும் இருக்காது. மேலும் இந்த புதிய வழிமுறையால் செல்போன் அடிமைகளிடமிருந்து பிற பாதசாரிகளும் காக்கப்படும் சூழல் ஏற்பட்டு உள்ளது.

## இணையத்தை கலக்கும் ஒளிப்படம்

அமெரிக்காவின் புளோரிடா பகுதியில் முதலை ஒன்றின் மீது ரக்கூன் ஒன்று ஏறிப் பயணம் செய்வது போன்று சுற்றுலாப் பயணி ஒருவரால் எடுக்கப்பட்ட ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரசித்தமாகியுள்ளது.

அமெரிக்காவின் மத்திய புளோரிடாவில் உள்ள காடு ஒன்றுக்குக் குடும்பத்துடன் ரிச்சர்ட் ஜோன்ஸ் என்பவர் சுற்றுலா சென்றுள்ளார். இதன்போது தண்ணீரில் சென்ற முதலை ஒன்றின் மீது ரக்கூன் ஏறிச்செல்வதைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். அரிதான அந்தக் காட்சியை ஒளிப்படம் எடுத்த ஜோன்ஸ் சமூக வலைதளங்களில் பதிவு செய்து உள்ளார்.

இதனையடுத்து சமூக வலைத்தளங்களில் குறித்த ஒளிப்படத்துக்கு மிகுந்த வரவேற்பு கிட்டியுள்ளதோடு குறித்தப் படம் பார்ப்பவரை மற்றையோருடன் பகிர வைக்கு மளவுக்கு ஈர்ப்பைப் பெற்றுள்ளது.



## திரிசாவுக்கு வயது 20

தெலுங்கில் நடித்து வரும் பேய்ப்படம் ஒன்றுக்காக தனது எடையை 6 கிலோ குறைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் நடிகை திரிசா.

விக்ரம், சூர்யா போன்ற நடிகர்கள் தான் படத்துக்குப் படம் தங்களது கதாபாத்திரத்துக்கு ஏற்றவாறு தங்களது எடையைக் கூட்டி குறைத்து நடித்து வருகின்றனர். தற்போது இந்தப் பட்டியலில் நடிகைகளும் சேர்ந்து விட்டனர்.

அனுஷ்கா தனது புதிய படத்துக்காக தனது எடையைக் கூட்டிப் பின் குறைக்க உள்ளார். அந்த வகையில், தற்போது திரிசாவும் தெலுங்குப் படம் ஒன்றுக்காக தனது எடையைக் குறைத்து, கூட்ட இருக்கிறார்.

கோவர்தன் இயக்கத்தில் நகைச் சுவை கலந்த பேய்ப் படமாக வளர்ந்து வரும் இந்தப் படத்தில் இரண்டு கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார் திரிசா. அதில் ஒன்று 20 வயதுப் பெண் கதாபாத்திரம்.

இதற்காக தனது எடையில் 6 கிலோவை அவர் குறைத்து வருகிறார். பின்னர் மற்றொரு கதாபாத்திரத்துக்காக 10 கிலோ எடையைக் கூட்ட இருக்கிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் தொடர்ந்து சீரற்ற காலநிலை

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை



கொழும்பு, ஜுன் 19

மலையகத்தில் தொடர்ந்து நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக அப்பகுதிக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியிலும், ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியிலும் மண்சரிவு ஏற்படும் அபாயம் நிலவி வருகின்றது. வீதி வழுக்கும் தன்மையாக இருப்பதனாலும் பனிமூட்டமான வானிலை நிலவி வருவதனாலும் வாகனச் சாரதிகளை அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் வான்கதவுகளைத் திறந்து விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு வான் கதவுகள் திறந்துவிடப்படும் பட்சத்தில் அதனை அண்மித்த பகுதியில் வாழும் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் பலத்த காற்று வீசுவதனால் மரங்கள் முறிந்து விழும் அபாயமும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், ஹற்றன் நகருக்கு அண்மையில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு செல்லும் பல வீதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால் மக்களின் அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன.(ற)

## பொது இடங்களில் கழிவுகளை கொட்டுவதை தடுக்க நடவடிக்கை

அம்பாறை, ஜுன் 19

சாய்ந்தமருது பிரதேசத்தில் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் பொது இடங்களை கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர், நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

தனக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே கல்முனை மாநகர பிரதி முதல்வர் ஏ.எல்.ஏ.மஜீத், உறுப்பினர்களான எம்.ஐ.எம்.பிர்தௌஸ், ஏ.நிசார்தீன், எம்.எஸ்.உமர் அலி மற்றும் அதிகாரிகள் சகிதம் முதல்வர் அப்பகுதிகளுக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள மீனவர் நூலகம், லீடர் அஷ்ரப் வித்தியாலயம் மற்றும் சில வாடிகளை அண்டிய பகுதிகள் வைத்தியசாலை வீதி, சாஹிராக் கல்லூரி வீதி மற்றும் நூலக வீதி ஆகிய இடங்களிலும் மக்கள் அன்றாடம் குப்பைகளைக் கொட்டுவதால் அப்பகுதிகளில் பெரும் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

இவற்றைக் கருத்தில்கொண்டு மக்களின் இச்செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஆலோசனைகளை மேற்கொண்டதுடன் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் பற்றிய அறிவுறுத்தல்களையும் அதிகாரிகளுக்கு வழங்கினார். (ற)

## உண்டியல் உடைத்த மாணவர்கள் சிக்கினர்

தென்மராட்சி, ஜுன் 19

ஆள்கள் நடமாட்டமில்லாத நேரத்தில் ஆலய உண்டியலை உடைத்து பணம் திருடிய பாடசாலை மாணவர்கள் இருவர் அவ்வழியே வந்த வழிப்போக்கரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் தரம் 10 வகுப்பில் கற்கும் மாணவர்களே இந்தத் திருட்டில் ஈடுபட்டனர் என்றும் மாணவர்கள் என்பதால் அவர்களின் எதிர்கால நலன்கருதி ஆலய நிர்வாகத்தினர் உண்டியலிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தைப் பெற்றுக் கொண்டு எச்சரிக்கை செய்து உறவினர்களிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி வனுவில் நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நடந்துள்ளது. மாணவர்களிடமிருந்து பற்றரியில் இயங்கக்கூடிய றில்லர் ஸ்கூட்றைவர் ஒரு தொகுதி சாவிக் கொத்து ஆகியவையும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)


**காணிகள் விற்பனைக்குண்டு**

மருதடி வீதி, மண்டுவில் (சாவகச்சேரிவடக்கில்) 6 பரப்புக் காணியும், பனங்காட்டு வீதி மந்துவில் மேற்கில் 20 பரப்புக் காணியும் உடனடி விற்பனைக்குள்ளன.

தொடர்பு : 077 203 5271

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச நிறுவனமொன்றுக்கு 2500-3000 சதுர அடி பரப்பளவுள்ள வீடொன்று யாழ் மாநகர எல்லைக்குள் வாகனத் தரிப்பிட வசதியுடன், 2 வருடங்களுக்கு வாடகைக்குத் தேவை

தொடர்பு : 077 386 8567

**மணமகள் தேவை**

யாழ். இந்து, மலேசியா வாசியான மணமாகாத பொறியியலாளராகக் கடமையாற்றும் 56 வயதுடைய மண மகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு:
pnmal1@yahoo.co.uk
T.P: 006 012 2822 117
076 591 2520

**ஓம் சக்தி ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்

**சிவசங்கர் ஜோதிடர்**

உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.

ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.

தொடர்பு: 077 618 7261

காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.


## காணி அமைச்சின் நடமாடும் சேவை

திருகோணமலை, ஜுன் 19

காணி அமைச்சின் நடமாடும் சேவை, வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் இன்று வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளதாக பிரதேச செயலாளர் எம்.தயாபரன் தெரிவித்தார்.

நாளைக் காலை 9 மணிக்குத் தொடங்கும் இந்த நடமாடும் சேவையில் பிரதேசப் பொதுமக்கள் தங்களது காணி சம்பந்தப்பட்ட சகல அலுவல்களையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். இந்த நடமாடும் சேவையில் காணி அமைச்சின் அதிகாரிகளும் மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களத் தின் அதிகாரிகளும் பிரதேச செயலக அதிகாரிகளும் சேவையாற்றவுள்ளனர். (ற)

## ஹெரோயின் வர்த்தகம்: பொலிஸ் கான்ஸ்டபிள் விசாரணைக்குள்

யாழ்ப்பாணம், ஜுன் 19

ஹெரோயின் வர்த்தகத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பேலியகொடை குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு 7 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பெண்ணொருவரும் மற்றுமொரு நபரும் வத்தளைப் பிரதேசத்தில் மூன்று கிலோகிராம் ஹெரோயினுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார். விநியோகிக்கப்பட்ட போதைப்பொருள், குறித்த தொரு நாளில் வழங்கப்படும் என பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு சந்தேக நபர்கள் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டது. பொலிஸ் கான்ஸ்டபிள் குறித்த பகுதிக்கு வருகை தந்த சந்தர்ப்பத்திலேயே அவர் கைது செய்யப் பட்டுள்ளார். அவர் தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணை தொடர்வதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற-4)

## பள்ளிவாசலுக்கு நிதியுதவிகள்

திருகோணமலை, ஜுன் 19

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 14 பள்ளிவாசல்களுக்கு நிதியுதவி வழங்கி வைக்கும் நிகழ்வு, பாலமுனையில் அமைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை மத்திய குழுவின் ஏற்பாட்டில், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல்.எம்.நஸீர், ஆரீப் சம்சுதீன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு பள்ளிவாசல் தலைவர்களிடம் காசோலையை வழங்கினர். (ற)

## போரால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

### அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுகளில்

திருகோணமலை, ஜுன் 19

போர்க் காலத்தில் காணாமல் போனோர்கள், அங்கவீனர்கள் மற்றும் சொத்துக்களை இழந்த குடும்பங்களுக்கு அரசால் நட்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய காணாமல் போனோர்களின் உறவினர்களுடனான சந்திப்பு, திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது காணாமல் போனோர்களது உறவினர்கள், அங்கவீனர்கள் மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு அரசால் வழங்கப்படவுள்ள நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்கள் சம்பந்தமாகவும் உயிரிழப்பு மற்றும் அங்கவீனம், சொத்து இழப்புக்களுக்கான நஷ்டஈடு சம்பந்தமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

உயிரிழப்புக்கு ஒரு இலட்சம் ரூபாவும் அங்கவீனம் மற்றும் சொத்து இழப்புக்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து நட்டஈடு பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை கிராம சேவகர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு பிணை

தென்மராட்சி, ஜூன் 19
மாணவனை சப்பாத்துக் காலால் தாக்கிய ஆசிரியரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்த சாவகச்சேரி நீதிவான் வழக்கை ஜுலை மாதம் எட்டாம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

கடந்த திங்கட்கிழமை வரணி பாடசாலை ஒன்றில் சிரமதானத்தில் பங்குபற்றாத மாணவனை உடற்கல்வி ஆசிரியர் சப்பாத்துக் காலால் தாக்கியதில் மாணவனின் மர்ம உறுப்பிலிருந்து இரத்தம் வழிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஆசிரியரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் ஆசிரியரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை ஜுலை எட்டாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஆசிரியர் சார்பில் சட்டத்தரணி செலஸ்ரின் முன்னிலையாகி பிணைக்கு விண்ணப்பித்திருந்தார்.

(ந-9)

# ‘எல்லைகளைத் தாண்டி’ ஆற்றுகை நிகழ்வு இன்று

கொழும்புத்துறை, ஜூன் 19
மாற்றுத் திறன் கொண்ட உடுவில் ‘ஆர்க்’ நிறுவன சிறார்களையும், அனுராதபுரம் சுனேரா நிறுவன சிறார்களையும் இணைத்து ‘எல்லைகளைத் தாண்டி’ என்னும் ஆற்றுகை கலை நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

சுனேரா நிறுவனமும் திருமறைக் கலா மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்ளவுள்ளார்.

முப்பது ஆண்டுகால இன உறவின் முறிவுகளையும் அதனால் ஏற்பட்ட இடைவெளியையும் கலை என்ற ஊடகத்தால் நிவர்த்தி செய்யும் முயற்சியாக இனம், மதம், சாதி, சமயம், கலை, கலாசாரம் கடந்து சகோதர மன உணர்வுடன் கலைப்பயிற்சியின் ஊடாக உருவான உடல் மொழியால் உணர்வுகளை வெளிப்படுத்தி எம்மாலும் முடியும் என்பதை மாற்று வலுக் கொண் டோர் நிரூபித்துக் காட்டும் நிகழ்வாக எல்லைகளைத் தாண்டி என்னும் அரங்க ஆற்றுகை அமைகின்றது. மூன்று வார காலப் பயிற்சியின் நிறைவாக இன்று மேடையேற்றம் நடைபெறவுள்ளது.

இதற்கு உடுவில் ஆர்க் அருட்சகோதரிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் சுனேரா இணைப்பாளர் கலாபூஷணம் ஜி.பி.பேர்மினஸ் தெரிவித்தார்.

அதேவேளை உடுவில் ஆர்க் மற்றும் அனுராதபுரம் சுனேரா நிறுவன சிறார்கள் இணைந்து அனுராதபுரத்தில் 3 வாரம் பயிற்சி பெற்ற பின்னர் அடுத்த மாதம் 17 திகதி இறுதி நிகழ்வு அரங்கேற்றப்படவுள்ளது.

(ந-135)

# பாதுகாப்பு குழுக்கூட்டம் இன்று

தென்மராட்சி, ஜூன் 19
மாவட்ட பொது மக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இன்று பி.ப 2.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறுமென யாழ். அரசஅதிபர் நா. வேத நாயகன் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (ந-9)


## கண்ணீர் அஞ்சலி



**பரமகுட்டி கனகரட்ணம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)

எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சாந்தினி ஸ்ரீலவன் அவர்களின் அன்புத் தந்தை பரமகுட்டி கனகரட்ணம் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/ மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை
(61079) (9.3)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி நடேசமூர்த்தி**

தோற்றம் 22.07.1954
மறைவு 25.06.2009

நீங்கள் பறந்து போய்
ஆண்டுகள் ஆறு அசைந்து
போனாலும்
அழியாத ஓவியமாய் - என்றும்
எம் நெஞ்சில் நீங்கள்........
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி வள்ளிநாயகிதேவி தியாகராசா**

தோற்றம் 05 * 07 * 1954
மறைவு 24 * 06 * 2009

உள்ளத்தில் உயர்வாகி இதயத்தில் இறையாகி
வானுறையும் தெய்வத்துள் தெய்வமாகிய - எம் அம்மாவே..!!
அன்பு எனும் பாசத்தைத் தந்து எமை வாழ வைத்தாய்!!
நாம் உயர வேண்டும் என்பதற்காக தினம் உழைத்தாய் !!
அம்மா நீங்கள் இல்லாத வீடு இன்று வெறுமையாக உள்ளதம்மா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தம்மனை,
அளவெட்டி மேற்கு.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



**திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம்**

கடந்த 20.05.2015 சிவபதம் அடைந்த திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (19.06.2015) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

81, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்

N.தனபாலசிங்கம் (கணவர்)
லயன் Dr.M.கதிர்காமநாதன் MJF, JP (தம்பி)
லயன் K.M. பத்மநாதன் PMJF (தம்பி)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி மதி ஞானச்சந்திரன்
அவர்களின் பாசமிகு
தந்தையார்
**சின்னப்பு வல்லிபுரம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி.
(சி 16313)(9.3.7)

## 11 ஆம் ஆண்டின் அறிவிலா நினைவுகள்

ஏந்திழையே ! எங்குற்றாய் !



திருமதி
**வசந்தராணி சிவபாலசுப்பிரமணியம்.**

மண்ணில் 13 . 01 . 1964
விண்ணில் 20 . 06 . 2004

திதி : திருதியை (19.06.2015)

அன்புக்கு அம்மா இன்றி
அரவணைக்க துணையின்றி
அந்தரத்தில் எம்மை விட்டுச் சென்ற
எம் குல விளக்கே!
ஏங்கித் தவித்து நிற்கின்றோம்
ஆனாலும் ஆறுகின்றோம் - நீங்கள்
இறைவனுடன் கலந்து விட்டீர்கள் என்று
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

மாதகல் வடக்கு, மாதகல்.
என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 . 02 . 1941
உதிர்வு 11 . 07 . 2013

அமரர்
**விஜயரட்ணம் மகாலிங்கம்**

எங்கள் குடும்பத்தின் தெய்வமே அப்பா !
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டதே.
உங்கள் அன்பு முகத்தைக் காணத் தவிக்கின்றோம். நாங்கள் எந்நாளும்
உங்களை நினைத்துக் கண்கள் கலங்கி ஏங்குகின்றோம்.
நித்தமும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

38 - 3 - 18
Srisumangala Road,
Ratmalana
011 272 1727

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 19

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டிப் பகுதியில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுவதால் கடல்நீர் ஊருக்குள் புகும் அபாயம் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் செய்த முறைப் பாட்டையடுத்து சாவகச்சேரி பொலிஸார் கடந்த சனிக்கிழமை இரவு மறைந்திருந்து மணல் ஏற்றி வந்த வாகனத்தை கைப்பற்றியதுடன் வாகனச் சாரதியையும் கைது செய்திருந் தனர். சாரதியை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

(ற-9)

## சிறுவர்களுக்கு புகைத்தல் பொருள் விற்றோருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 19

21 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 19 வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.


சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் கடந்த வாரம் நடத்திய போதைப் பொருள்கள் ஒழிப்பு வாரத்தில் சங்கத்தானை, மீசாலை, புத்தூர் சந்தி, கொடிகாமம் ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் நடத்திய திடீர்ப் பரிசோதனையின்போது அகப்பட்ட 19 வர்த்தகர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தனித்தனியாக நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. போதைப் பொருள்கள் ஒழிப்பு வாரத்தில் மதுவரித் திணைக்களத்தினர் நடத்திய திடீர் பரிசோதனைகளில் அகப்பட்டவர்களில் இதுவரை 55 வர்த்தகர் களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## போதையில் இடையூறு: ரூ. 2000 அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

பொது இடத்தில் வைத்து மதுபானம் அருந்தி பாதையில் பயணிப்பவர்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு விளைவித்து அநாகரிகமாக நடந்துகொண்ட பொம்மைவெளி, அரியாலை, மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டனர். அவர்களை தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார்.

(ற-103)



அளவெட்டி வடக்கு,
தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்
மன்மத வருஷ மஹோற்சவம் 2015
6ஆம் திருவிழா

விசேட நிகழ்ச்சியாக
தவில் நாதஸ்வர கச்சேரி
இந்தியாவிலிருந்து முதல் முறையாக யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் இஞ்சிக்குடி சகோதரர்கள்
E.M. சுப்பிரமணியம் (ஐயப்பன்)
E.M. மாரியப்பன்



இவர்களுடன்
அளவெட்டி லயஞானகுபேரபூபதி
தெட்சிணாமூர்த்தியின் புதல்வர்
உதயசங்கர்

N. பிரசன்னா | M.S. தெட்சனா
P.S. செந்தில் | M.S. துளசிபரன்

19.06.2015 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணிக்கு — 6 ஆம் திருவிழா உபயகாரர்

(61052)(18.6.3)

## வேலைவாய்ப்பு

யாழ் நகர்ப் பகுதியில் இயங்கும் Medical clinic(மெடிக்கல் கிளினிக் )இற்கு பின்வரும் தகைமை உடையோர் தேவை.

01. கணக்காய்வாளர்(Account Clerk)(பெண்- முன்அனுபவம். கணினி அறிவு விரும்பத்தக்கது)
02. Ambulance Driver (அன்புலன்ஸ் சாரதி) (45 வயதிற்கு மேற்பட்டோர்)
03. மருந்து வியாபாரத்தில் அனுபவமுள்ளவர் (பெண்)
04. குழந்தைகளின் பொருள்கள், ஆடைகளின் விற்பனையில் அனுபவமுள்ளவர் (பெண்)
05. இரவு நேர காவலாளி (50 வயதிற்கு மேற்பட்டோர்)

நேர்முகத்தேர்வு

இடம் : சன்றைஸ் மெடி கிளினிக், 388,வைத்தியசாலைவீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 21.06.2015

நேரம்: 9.00 மணி

தொ.இல: 021 222 6069

(61039)(3.7.5)

## பொதுக் கூட்ட அறிவித்தல்

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம்
பொதுக்கூட்டம் 2015
இடம்: வயாவிளான் மத்திய கல்லூரி மண்டபம்
காலம்: 05.07.2015 முற்பகல் 10.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

* அகவணக்கம்
* தலைவர் முன்னுரை
* சிறப்பு பிரதிநிதி உரை
* அங்கத்தவர்களை இணைத்தல்
* புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு
* சபையின் யாப்பு அங்கீகாரம்
* பிரேரணைகள்
* எதிர்கால செயற்பாடுகள் பற்றி ஆராய்தல்
* புதிய தலைவர் உரை
* நன்றி உரை

ஆலய நிர்வாகத் தெரிவு முக்கியத்துவம் கருதி வயாவிளான் பொதுமக்களை அன்று உரிய நேரத்தில் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. ஜெயச்சந்திரகுமார் - 077 922 4334
ம.ஜெகநாதன் (ஜெக்கி) - 077 226 7956

(61077)
(45.5.6.7)

## வரைவுள்ள நல்லூர் பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் விசேடபொதுக்கூட்டம்

காலம்: 25.06.2015(வியாழக்கிழமை) பிற்பகல் 1.30

1983 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கத்தையும் 1992 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கத்தையும் கொண்ட கூட்டுறவுச் சங்கத் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும். 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 2ஆவது பிரிவினாலும் 1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் (வடமாகாணம்) எனக்கு அளிக்கப்பட்ட 28.05.2015 ஆம் திகதிய கடிதத்திற்கமைய, திருமதி சித்திரகுமாரி கணேசு ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கிணங்க, வரைவுள்ள நல்லூர் பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின்விசேட பொதுக்கூட்டத்தை மேற்போந்த கூட்டுறவுச் சட்டத்தின் 61 ஆவது பிரிவிற்கிணங்க உருவாக்கப்பட்டுள்ள 93/5 ஆம் இலக்க 1974.01.10 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கூட்டுறவுச்சட்ட விதிக்கோவையின்18(1) விதிக்கிணங்க என்னால் கூட்டுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி கூட்டம் 2015.06.25 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் நல்லூர் கால்நடைவளர்ப்போர் வைத்தியசாலை மண்டபத்தில் பின்வரும் நிகழ்ச்சி நிரலுக்கமைய நடைபெற உள்ளது. இக் கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களினதும் முகவரிகள் பெறமுடியாதுள்ளமையால் இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

### நிகழ்ச்சி நிரல்

*01.இறைவணக்கம்*
*02. தலைமை உரை*
*03.சங்கத்தின் நிலைமை பற்றி ஆராய்தல்*
*04.நிர்வாகத் தெரிவு*
*05.நன்றியுரை*

திருமதி சித்திரகுமாரி கணேசு
கூட்டுறவுச்சட்ட விதிக்கோவை18(1) இன் கீழ்
அதிகாரம் அளிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர். (61076) (9.3.7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம் புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள்

### ஆரம்பம் - 2013 / 2014

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு கல்வியாண்டு 2013/2014இல் கலைமாணிப்பட்டக் கற்கை நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுப் பதிவை மேற் கொண்ட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் (Orientation Programme) 29/06/2015 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடை பெறும்.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு மாணவர்கள் கைலாசபதி கலையரங்கத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விடுதி வசதி தேவைப்படும் வெளிமாவட்ட மாணவர்கள் 28.06.2015 முதல் விடுதிக்கு சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

மாணவர்கள் நிகழ்ச்சி நிரலை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையிலோ, www.jfn.ac.lk/arts எனும் இணையத்தளத்திலோ பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
11.06.2015

(சி.16311) (45.3.7)

Microsoft Certifications
MCP
MTA
MCSA
MCSE
Cisco Certifications
CCNA
CCNP
SUN Certifications
Java
Oracle
Android Apps Development
Sri Lanka UGC
அங்கீகாரமுடைய பட்டதாரியாகும் வாய்ப்பு ............
Top up Program
HND or 2 வருட டிப்ளோமா தகைமையுடன் ......
விண்ணப்பிக்கலாம்
B.Sc. in Comp.Sc.
B.Com. with Comp. App
B.Sc. in Civil Eng.
B.Sc.in Q.S

உங்கள் நம்பிக்கையின் சிகரமாக விளங்கும்
NORTH LANKA IIT இன்
ஆலோசனை சபையினர்

பேராசிரியர் பு.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

பேராசிரியர் டாக்ரர் T.வேல்நம்பி
பீடாதிபதி வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

திரு.S.அமிர்தலிங்கம்
தலைவர்.யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

திரு.P.விக்நேஸ்வரன்
முன்னாள் கல்விப்பணிப்பாளர்
வடமாகாணம்

திரு.குமரன்
யாழ் பிரபல பௌதிகவியல் ஆசான்

ஆலோசனை சபையினர் வழிகாட்டலுடன் பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்

O/L அல்லது A/L தகமையுடன்
B.Sc. in Computer Science
B.Com with Computer App.
Any Degree தகைமையுடன்
P.G.Dip.in Comp.Sc.>>M.Sc. MBA >> DBA
P.G.D in Ed. >> M.Ed.
மேலதிக விபரங்களுக்கு,
NORTH LANKA IIT
Top Floor People's Bank Building, Stanley Road, Jaffna.
Phone - 0214927156, 0214545123, 0777592666
LANKA CITY CAMPUS
Kodikamam Road
Near NSB , Nelliyadi
0214927087. 0771016524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 03 . 04 . 1931

இறப்பு 16 . 06 . 2015

### வைத்திலிங்கம் சபாரெத்தினம்(காந்தி)

வேலணை கிழக்கு, நாலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சபாரெத்தினம்(காந்தி) 16.06.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புக் கணவரும் யோகநாதன் (பிரான்ஸ்), ஜெகநாதன் (கனடா), தவமலர்,சோதிமலர் (யாழ்ப்பாணம்), சபாநாதன் (பிரான்ஸ்), ராசமலர்(பிரான்ஸ்)ராசேந்திரன்(கனடா),ராசகுமார்(பிரான்ஸ்), கோமளாதேவி(கனடா)ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன். தியாகராஜா (டென்மார்க்),பொன்.அமிர்தலிங்கம்(பிரான்ஸ்),பொன்.சந்திரன் (கொழும்பு)ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானேஸ்வரி, தயாளினி, காலஞ்சென்ற யோகராஜா மற்றும் பாலசுப்பிரமணியம், தர்ஷினி, தர்மகுணராஜா, திருமகள், விஜயகலா, காண்டீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும்.காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் தவமணிதேவி, வீரலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்புச் சகலனும் தர்மிலா, கமலராசன், ஜெர்மிலா, சன்ஜீவன், கீர்த்திகா, ஆராதிகா, சந்திகா, சயனுதா, இந்துஜா,சரணியா,ஜானுர்ஷ், சாருஜன், நிரோஜன்,விஸ்ணுகாருணி,ரிஷோபன்,ரிசாணியா,ரிதுயன்தர்ஷிகா,ரிசிகேசன், பிரகேஷன்,தனுஸ், யதி, ஹரிஷ்,விகாஷ், கனுஷி, ஒவியா,துர்கா ஆகியோரின் அன்புப் பேரனும்.கிறிஸ், சாருஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2015) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு தகனகிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.20.மனோத்தரைவீதி,
பரமேஸ்வராச்சந்தி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
பாலா (கவிகா ரேற்சென்ரர்)
பரமேஸ்வராச்சந்தி,
யாழ்ப்பாணம்
021 720 0070, 077 310 7601

திருமதி

### டெய்சிமேரி அக்னஸ் குமரையா



யாழ்ப்பாணம், பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும், 99/6, கச்சேரி கிழக்கு, சந்தான மாதா கோயில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டெய்சி மேரி அக்னஸ் குமரையா 16.06.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற E.K குமரையா (கட்டட மேற்பார்வையாளர் கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொனவஞ்சர் -லூர்த்தம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயராணியின் ஆசைச் சகோதரியும், காலஞ்சென்ற தேவராஜன் (மக்கள் விற்பனைத் திணைக்களம்) மற்றும் ரவீந்திரகுமார் (இளைப்பாறிய சுங்க உத்தியோகத்தர்), சாந்தினி (ஹொலன்ட்), ஜெயந்தினி, கிறிஸ்ரி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயும், மங்களா (UK), காலஞ்சென்ற பற்றீசியா நவமணி (இளைப்பாறிய ஆசிரியை) மற்றும் ராஜன் (ஹொலன்ட்), யூலியன் (இளைப்பாறிய நீர்வழங்குசபை மன்னார்), டெய்சி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும், டீன் - ஜெசி, சசி - நிருபா, யாழினி - பிரசாந் (UK), சிந்துஜா, பேடின், ரஜீவன், கிறிஷாந்தி, வினோச் வினித் (டென்மார்க்) ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், ஷன்ரல், சன்செஷ், ஷவேறோ, ரயன், ஜெசன், யடன், றெனோான், ரிஷா (UK) ஆகியோரின் செல்லப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (19.06.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு. பின்பு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல.99/6, கச்சேரி கிழக்கு,
சந்தான மாதா கோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 397 1362 (61070) (45.7.3) தகவல்: குடும்பத்தினர்.

## சட்டவிரோத மணல் ஏற்றிய இருவருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜூன் 19

சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றத்துக்காக கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவருக்கு ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ. வஹாப்தீன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அனுமதிப்பத்திரங்கள் எதுவும் இன்றி சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றினார்கள் என்ற குற்றச்சாட்டிற்காக கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வெவ்வேறு சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ வஹாப்தீன் முன்னிலையில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது குற்றவாளிகள் தம்மீதான குற்றத்தை ஒப்பு கொண்டதன் காரணமாக ஒருவருக்கு ஒருலட்சம் ரூபா தண்டப்பணமும் கட்டத்தவறின் சாதாரண சிறைத் தண்டனையும் வழங்குமாறும் இரண்டாவதாக அதே குற்றச்சாட்டிற்காக பொலிஸாரால் முற்படுத்தப்பட்ட மற்றைய குற்றவாளிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ வஹாப்தீன்.

(ந-21)

## குப்பைகளை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 19



நுவரெலியா பிரதேச சபைக் குட்பட்ட தலவாக்கலை வட்டகொடை, பூண்டுலோயா பகுதி வீதிகளில் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதால் அது அந்தப் பகுதி சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வட்டகொடை நகரிலுள்ள வீடுகள் மற்றும் கடைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்கள் அப்பகுதி வீதிகளில் போடப்படுகின்றன. அவ்வாறு போடப்படும் குப்பைகளை கால்நடைகள் கிளறி முழு வீதியையும் குப்பை கூழமாக்கி வருகின்றன.

அத்துடன் தற்போது மலையகத்தில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற நிலையில், சூழல் பெரிதும் மாசடைந்துள்ளதுடன், துர்நாற்றம் வீசி வருவதால் அப்பகுதியூடான மக்கள் போக்குவரத்துக்கும் இது பாரிய இடையூறாக அமைந்துள்ளது.

அத்துடன் இதனால் நுளம்புத் தொல்லையும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில், இங்கு கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உடனடியாக அப்புறபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நுவரெலியா பிரதேச சபை அதிகாரிகளுக்கு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ந)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கச்சியம்பாள் தில்லைநடராசா



இலகடி, அல்வாயைப் பிறப்பிடமாகவும், வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநடராசா தங்கச்சியம்பாள் 17.06.2015 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தில்லைநடராசாவின் அன்பு மனைவியும், கௌரியம்பாள், சுமதி, அமுதா, கேதீஸ்வரி, கௌரிமோகன் ஆகியோரின் அன்புத் தாயும், தில்லையம்பலம், ஸ்ரிபன்சன் ஜோசெப், பாஸ்கரன், பரமானந்தன், புவனரதி ஆகியோரின் அன்பு மாமியும், தர்சினி, ரூபன், அபிராம், நிலா சஞ்சை, அபிராமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்திரி வளவு,
வதிரி, கரவெட்டி.
தொ.பே. 021 226 3556

தகவல்: குடும்பத்தினர்.

## விபத்தில் தம்பதிகள் காயம்

தென்மராட்சி, ஜூன் 19

பஸ் நிலையத்துக்குள் நுழைய முயன்ற தனியார் பஸ், வீதியில் பயணித்த சைக்கிள் மீது மோதியதில் அதில் பயணித்த தம்பதியினர் காய மடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக ஏ - 9 வீதியில் இடம்பெற்றது.

மீசாலையில் இருந்து சைக்கிளில் பயணித்த குறித்த தம்பதியினர் ஏ - 9 வீதியில் சென்று கொண்டிருந்த வேளையில் அதே திசையில் வந்த தனியார் பஸ்,பஸ் நிலையத்துக்குள் செல்வதற்கு திருப் பியபோது முன்னால் சென்று கொண்டிருந்த சைக்கிள் மீது மோதியது. அதில் தம்பதியர் தூக்கி வீசப்பட்டு காய மடைந்தனர்.

காயமடைந்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த நாராயணபிள்ளை சிவஞான சுந்தரம் (வயது - 65) அவரது மனைவியான சிவஞானசுந்தரம் நகுலராணி (வயது - 64) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ந-9)

## ஆசிரிய பயிலுநர் கல்விக் கண்காட்சி இன்று

வலி.வடக்கு, ஜூன் 19

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய பயிலுநர்களின் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

கற்றல் வளங்களை ஆசிரிய பயிலுநர்களுக்கு அடையாளப்படுத்தும் நோக்குடன் இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான கற்பித்தல் உபகரணங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. ஆர்வமுள்ள எவரும் இந்தக் கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட்டுப் பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-86)

## கசிப்பு வைத்திருந்த கச்சாய் வாசிக்கு அபராதம்

கசிப்பு வைத்திருந்த கச்சாய் வாசி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கச்சாய்ப் பகுதி வீடொன்றைச் சுற்றி வளைத்த பொலிஸார் கசிப்பைக் கைப்பற்றியதுடன் அதனை வைத்திருந்த நபரையும் கைது செய்தனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த செவ் வாய்க் கிழமை விசாரணைக்கு எடுக்கப் பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

(ந-9)

## காலாவதியான பொருள் விற்பனை: இரு வர்த்தகர்களுக்கு அபராதம்


தென்மராட்சி, ஜூன் 19

திகதி காலாவதியான சுகாதாரப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரு வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் தலா 9ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதி வான் இருவருக்கும் தலா 9ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MS Office மென்பொருள் தொகுப்பு அன்ட்ராய்ட்டில்



கடந்த வருடம் MS Office மென்பொருள் தொகுப்பை Apple கணினியில் இயங்கும் வகையில் வடிவமைத்து வெளியிட்டிருந்த மைக்ரோசாப்ட் நிறுவனம் அனேக Apple சாதனங்களிலும் தனது மென்பொருள் வேலை செய்யும் வகையில் உருவாக்கி இருந்தது.

இந்த நிலையில், MicroSoft நிறுவனம் புதிய முயற்சியாக கூகுளின் Play Store இல் தனது MS Office மென்பொருள் தொகுப்பைப் பதிவேற்றம் செய்துள்ளது. விண்டோஸ்போனில் தனது Gmail App ,Google Drive என எந்தச் சேவையும் கிடைக்காத வண்ணம் தடை போட்டுள்ள கூகுள் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் மத்தியில் தனது மென் பொருளை கிடைக்கும் வகையில் மைக்ரோசாப்ட் எடுத்துள்ள இந்த முடிவை பல அன்ட்ராய்ட் பயனர்களும் வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## புதிய தொழில்நுட்பங்களுடன் மீளுருவாக்கப்படும் Cheetah ரோபோ

உலகில் வெவ்வேறான முறையில் வளர்ச்சி கண்டு வரும் இந்தத் தொழில்நுட்ப உலகில் கடந்த வருடம் MIT நிறுவனம் Cheetah எனப்படும் நவீன ரக ரோபோவை அறிமுகம் செய்திருந்தது.

இந்த ரோபோவானது, போர் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பிரதான நோக்கத்துடன் அறிமுகம் செய்யப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

இந்த நிலையில், இந்த ரோபோவில் தற்போது மேலும் சில புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

அதாவது தடைகள் இருப்பின் அவற்றைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், வேகமும் மணிக்கு 28.3 கிலோமீற்றர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அல்ட்ரா கொம்பாக்ட் கம்ப்யூட்டரை வெளியிட்ட மைக்ரோசொப்ட்




உலகின் முன்னணி மின்சாதன விற்பனையாளராக விளங்கும் மைக்ரோசொப்ட் மற்றும் இன்டெல் நிறுவனம் இணைந்து அல்ட்ரா கொம்பாக்ட் கொம்ப்யூட்டர் ஒன்றை இந்தியாவில் வெளியிட்டுள்ளன. நியுபிசி என்று அழைக்கப்படும் இந்த கொம்ப்யூட்டர் விண்டோஸ் 8.1 மூலம் இயங்குகின்றது.

நியுபிசி 19V 3.42A DC அடப்டர் மூலம் சக்தியூட்டப்படுவதோடு ஹெச்டிஎம்ஐ போர்ட் மற்றும் மைக், ஹெட்போன்களுக் காக 3.5 எம்எம் ஜாக் வழங்கப்பட்டுள்ளது. கீபோர்ட், மவுஸ் மற்றும் மொனிட்டர் இல்லாத விலை தான் இதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கல்விச் சுற்றுலா மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த மன்னார் அல்மினா மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் உதயன் பணிமனைக்கு வந்திருந்தனர். (ற)

## மூன்று அம்சங்களை வைத்து நிதி ஒதுக்கீடு செய்யுங்கள்

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.துரைரட்ணம் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 19

கிழக்கு மாகாண சபையினூடாக ஒதுக்கப்படும் நிதியானது மக்களின் வறுமை நிலை, மக்கள் தொகை மற்றும் நிலப்பரப்பு ஆகிய மூன்றம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் சரி சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.துரைரட்ணம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது, கிழக்கு மாகாண சபையினூடாக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் வெளிப்படைத் தன்மை இல்லையெனத் தெரிவித்து தனிநபர் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபையினூடாக ஒதுக்கப்படும் நிதி தமிழ் பகுதிகளுக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை. இது கண்டிக்கத்தக்கதாகும். ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இன, மதரீதியாக எமது பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.- என்றார். (ற)

## புங்குடுதீவு மாணவியின் கொலையைக் கண்டித்து கிழக்கு மாகாண சபையில் பிரேரணை முன்வைப்பு

திருகோணமலை, ஜூன் 19

யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த மாணவியின் கொலையைக் கண்டித்தும் கொலையாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் கிழக்கு மாகாண சபையில் பிரேரணை முன்வைக் கப்பட்டது.



கிழக்கு மாகாணசபையின் அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோதே, இந்தப் பிரேரணையை மாகாண முதலமைச்சர் செய்னு லாப்தீன் நஸீர் அஹமட் முன்வைத் தார்.

மாணவியின் கொலையோடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு அதிகபட்சமான தண்டனை கால தாமதமின்றி வழங்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் தெரி வித்தார்.

அதேவேளை, கொலை செய்யப்பட்ட மாணவியின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. மாணவியைக் கொலை செய்தவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை இந்த நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபடும் அனைவருக்கும் [illegible] என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (ற)



இணுவில் இந்துக் கல்லூரியில் மீள் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் ஓய்வுநிலை அதிபருமான க.கனகசபாபதி சிலையைத் திறந்து வைத்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜோர்ஜியா நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் நகரங்களுக்குள் படையெடுத்துள்ள காட்டு விலங்குகளை வெளியேற்றும் நடவடிக்கையில் மீட்புக்குழுவினர் (ஐ)

# இதய நோய்களில் மோசமான நாடு ஜேர்மனி

பெர்லின்,ஜூன் 19

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பின் கணக்கெடுப்பின்படி ஜேர்மனியில் இதய நோயால் உயிரிழப்பவர்களின் சதவிகிதம் உயர்ந்துள்ளது. இந்த அமைப்பின் தகவலின்படி இதய நோயால் உயிரிழப்பவர்களின் பட்டியலில் ஜேர்மனி 8 ஆவது இடம் பிடித் துள்ளது.



அங்கு இதய நோயால் 1 லட்சம் பேருக்கு 310 பேர் உயிரிழக்கின்றனர். அமெரிக்காவைப் பொறுத்த வரை 256 பேரும், இங்கிலாந்தில் 245 பேரும் சராசரியாக இதய நோயால் உயிரிழக்கின்றனர். ஆண்களின் இறப்பு விகிதம் பெண்களை விட அதிகம் உள்ளது. 1 லட்சம் பேரில் 374 ஆண்களும், 269 பெண் களும் சராசரியாக இறக்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் கடந்த 50 வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஒரு லட்சத்துக்கு 800 பேராக இருந்த இறப்பு விகிதம் அரைவாசிக்கும் மேலாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தீவிரவாதிகள் முகாமில் குண்டுகள் வெடிப்பு

## பொதுமக்கள் 63 பேர் சாவு

நைஜர்,ஜூன் 19

கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் சரிசமமாக வாழும் நைஜீரிய நாட்டில் முஸ்லிம் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அங்குள்ள போகோ ஹாரம் தீவிரவாதிகள் நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏராளமான மாணவிகள், சிறுமிகள் மற்றும் இளம்பெண்களை கடத்தி வைத்துள்ள அவர்கள் அரசுக்குப் பல நிபந்தனைகளை விதித்துள்ளனர். இது தவிர நாட்டின் பல பகுதிகளில் அடுக்கடுக்காக மனித வெடி குண்டுத் தாக்குதல்களையும் நடத்திப் பொதுமக்களைக் கொன்று குவித்து வருகின்றனர்.



நைஜீரியாவின் புதிய ஜனாதிபதியாக அண்மையில் பொறுப்பேற்றுள்ள முஹம்மது புஹாரி இந்தத் தீவிரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கையை விரைவுப்படுத்தியுள்ளார். இதையடுத்து, நாட்டின் பல பகுதிகளில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் வடகிழக்கு நைஜீரியாவின் - மோன்குனோ நகரில் உள்ள போகோஹாரம் முகாமை நேற்று இனம் கண்டுபிடித்த இராணுவ வீரர்கள் அந்த முகாமின் வாசலில் கிடந்த ஒரு சாக்கு மூட்டையைப் பிரித்துப் பார்க்க முனைந்தனர். அதன் போது அந்த மூட்டைக்குள் இருந்த நாட்டு வெடி குண்டுகள் வெடித்துச் சிதறியதில், அருகாமையில் நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்த அப்பாவிப் பொது மக்கள் 63 பேர் உயிரிழந்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஒருமாதத்தில் போகோ ஹாரம் தீவிரவாதிகள் நடத்திய வெடி குண்டு மற்றும் தற்கொலைப் படைத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த ஆறாண்டுகளில் சுமார் 13 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். 15 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ.எஸ்.இயக்கத்தில் இணைந்த பெண்கள்

லண்டன்,ஜூன் 19

ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் இணைந்ததாகச் சந்தேகிக்கப்படும் 3 பெண்களின் கணவர்மார் அவர்களை மீளத் திரும்புமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரிட்டனின் பிராங்போர்ட் பகுதியைச் சேர்ந்த சுக்ரா தாவுத், சொஹ்ரா தாவுத், மற்றும் காதிஜா தாவுத் ஆகிய மூவரும் தங்களது குழந்தைகளுடன் கடந்த மாதம் மெதினாவுக்குப் புனித யாத்திரை சென்றனர்.

இந்த நிலையில் அவர்கள் கடந்த 9ஆம் திகதி விமானமூலம் துருக்கியின் இஸ்தான்புல் நகருக்கு சென்று இருக்கலாம் என கூறப்படுகிறது. அவர்களது தம்பி சிரியாவில் உள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களும் ஐ.எஸ். அமைப்பில் இணைந்திருக்கலாம் என்று அச்சம் எழுந்துள்ளது.

இது குறித்து லண்டனில் 3 சகோதரிகளின் கணவன்மார் ஊடகங்களுக்குப் பேட்டியளித்துள்ளனர். நாங்கள் உங்களை நேசிக்கிறோம். உங்களை இழந்து தவிக்கிறோம் திரும்பி வாருங்கள் என உருக் கமாக அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.(ஐ)

# பாகிஸ்தானில் இராணுவத்துடன் மோதல்


## தீவிரவாதிகள் 25 பேர் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், ஜூன் 19

பாகிஸ்தானில் பழங்குடியின மக்கள் பெருமளவில் வாழுகின்ற வடக்கு வாஜிரிஸ்தான் பகுதி, தீவிரவாதிகளின் சொர்க்க புரியாகத் திகழ்ந்து வருகிறது. அங்கு தீவிரவாதிகளை ஒடுக்க பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், அங்கு –வால் தாலுகா பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும், பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் மோதல் ஏற்பட்டது.

இரு தரப்புகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச்சண்டையில் 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களில் 3 பேர் முக்கிய தளபதிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)




# மோடி - ஷெரிப் சந்திக்க வாய்ப்பு

புதுடில்லி, ஜூன் 19

பாகிஸ்தானுடனான உறவில் இணக்கமான சூழல் ஏற்படுத்துவதற்கான முயற்சியில் பிரதமர் மோடி ஈடுபட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்தியாவில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் மீனவர்களை விடுவிக்கும் மோடியின் முடிவு பாகிஸ்தானுடனான உறவில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

அதன் மூலம் ரஷ்யாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி, நவாஸ் ஷெரிப்பை சந்திப்பதற்கான வாய்ப்புகள் உள்ள தாக இரு நாட்டு தூதரக வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளின் தூதர்களும் கடந்த வாரம், தற்போதுள்ள சூழ்நிலையில் இரு தலைவர்களும் சந்திக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்திருந்த நிலையில், கடந்த இரு நாள்களில் இரு தரப்புகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ரம்ழான் மாதம் தொடங்குவதை முன்னிட்டு பிரதமர் மோடி, நவாஸ் ஷெரிப்புக்கு வாழ்த்து தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மெர்ஸ் வைரஸ் தாக்கத்தால் சாவு எண்ணிக்கை உயர்வு

சியோல், ஜூன் 19

தென்கொரியாவில் புதிய வகை "மெர்ஸ்" என்ற மூச்சுத்திணறல் நோய் பரவி வருகிறது. அதனால் அங்கு பலர் உயிரிழந்து வருகின்றனர்.



இந்த நோயின் தாக்கத்தால் அங்கு இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் அந்த நாட்டில் 160 பேர் "மெர்ஸ்" நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதப்படும் 6 ஆயிரத்து 700 பேர் அவர்களின் வீடுகளிலும், மருத்துவமனைகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஒரு மருத்துவமனையைச் சேர்ந்த 25 இற்கும் மேற்பட்ட நோயாளிகள், ஊழியர்கள் மற்றும் மருத்துவமனைக்கு வருகை தந்தவர்களுக்கும் மெர்ஸ் நோய் தொற்று ஏற்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிகளைத் துன்புறுத்தியதாக ஊழியர்கள் பணியிடை நீக்கம்


வொஷிங்டன், ஜூன் 19

அமெரிக்காவில் உள்ள பண்ணை ஒன்றில் கோழிகள் மற்றும் கோழிக் குஞ்சுகளைத் துன்புறுத்தியதாக 5 ஊழியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



பாஸ்டர் பண்ணைகள் எல்.எல்.சி. என்பது அமெரிக்காவில் உள்ள முக்கிய கோழிப் பண்ணை நிறுவனம் ஆகும். இந்த நிறுவனத்தின் கலிபோர்னியா மற்றும் ப்ரெஸ்னோ பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளில் உள்ள கோழிகள் மற்றும் கோழி குஞ்சுகளை ஊழியர்கள் துன்புறுத்துவதை ரகசிய கமரா மூலம் விலங்குகள் நல அமைப்பு ஒன்று படம்பிடித்துள்ளது. மேலும் கோழிகளை உயிருடன் கொதிக்கும் தண்ணீரில் போட்டு அதன் இறக்கைகளை அகற்றுவதும் அதில் தெரியவந்துள்ளது. இதனை அடுத்து குறிப்பிட்ட பண்ணைகளில் பொலிஸாரால் . விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக கருதப்படும் 5 ஊழியர்களை தற்காலிக பணியிடை நீக்கம் செய்துள்ளதாக பாஸ்டர் பண்ணை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)



இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள இஸ்திகால் என்ற மசூதியில் பெண்கள் றம்ழான் பெருநாளுக்கான தொழுகையில் ஈடுபட்டபோது . (ஐ)



## தேவாலயத்தில் துப்பாக்கிச் சூடு

வொஷிங்டன், ஜூன் 19

அமெரிக்காவில் கறுப்பின மக்கள் பிரார்த்தனையில் ஈடுபடும் வரலாற்றுச் சிறப்புமிக்க தேவாலயம் ஒன்றில் மர்மநபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அதில் சிலர் உயிரிழந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. எனினும் இது குறித்து உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. 21 வயதுடைய அந்த மர்மநபர், நேற்று முன்தினம் இரவு புகழ்பெற்ற இமானுவேல் ஏ.எம்.இ. தேவாலயத்துக்குள் புகுந்து, பிரார்த்தனையில் ஈடுபட்டவர்களைத் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோடிவிட்டதாக சார்ல்ஸ்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதையடுத்து விரைந்து வந்த பொலிஸார் துப்பாக்கியால் சுடப்பட்டவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

துப்பாக்கியால் சுட்ட நபரை தீவிரமாகத் தேடி வந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். (ஐ)

## "ஜின்" னைக் குடித்த 70 நைஜீரியர்கள் சாவு

லோகோஸ், ஜூன் 19

எண்ணெய் வளமிக்க நைஜீரியாவின் தெற்குப் பகுதியில் வீட்டில் காய்ச்சப்பட்ட ஜின்னைக் குடித்ததால் 70 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரபியா எனப்படும் பனை மரங்களிலிருந்து வடிக்கப்படும் சாற்றின் மூலமாக உருவாக்கப்படும் "ஒகோகொரோ" என்ற மதுபானம் நைஜீரியாவில் காய்ச்சப்படுவது வழக்கமானதும், அங்குள்ளவர்களிடம் பிரபலமானதும் ஆகும். அதில் 30 முதல் 60 சதவீதம் வரை அற்கோல் இருக்கும்.

அங்குள்ள ரிவர் ஸ்டேட் என்ற இடத்தில் இது போன்ற 5 இடங்களில் காய்ச்சப்பட்ட ஜின்னைக் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்திருப்பதாக சுகாதாரத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# 2.5 லட்சம் சிறுவர்கள் பட்டினியில்; தெற்கு சூடானில் தொடரும் அவலம்

நியூயோர்க், ஜூன் 19

உள்நாட்டுப் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடான தெற்கு சூடானில் 2.5 லட்சம் சிறுவர்கள் பட்டினியால் வாடுகின்றனர் என அதிர்ச்சியான தகவலை ஐ.நா. வெளியிட்டுள்ளது.

ஐ.நா. வெளியிட்டுள்ள தகவலின் படி கடந்த 18 மாதங்களாக மோசமான உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள சூடானில் மூன்றில் ஒரு சிறுவர்கள் ஊட்டச்சத்து பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த நாட்டில் சுமார் 2.5 லட்சம் சிறுவர்கள் போதிய உணவு கிடைக்காமல் பட்டினியால் வாடுகின்றனர் என்றும் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் உதவியை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.



மேலும் 4.5 மில்லியன் மக்கள் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர். அவர்களுக்கு உதவ மொத்தமாக 1.63 பில்லியன் டொலர் நிதியுதவி தேவைப்படுகிறது.

இந்த நிதிக்காக நன்கொடையாளர்களை எதிர்நோக்கியுள்ளோம் எனக் கூறியுள்ள ஐ.நா. அங்கு உணவு, மருந்துப் பொருள்கள் என சுமார் 113 மில்லியன் டொலர் மதிப்புள்ள மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது. (ஐ)

# யேமனில் தொடர்ந்து இடம்பெறும் தீவிரவாதிகளின் வெறியாட்டம்



சனா, ஜூன் 19

யேமன் நாட்டில் அரச படைகளுக்கும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் வலுத்து வருகிறது. அரசுக்கு ஆதரவாக சவுதி கூட்டுப்படையினர் கடந்த 2 மாதங்களாகப் போரிட்டு வருகின்றனர். ஈரானின் துணையுடன் கிளர்ச்சியாளர்கள் எதிர்த் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவ்வப்பொழுது போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், இருதரப்பினர்களுக்கும் இடையே சண்டை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

யேமனில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ள நிலையில், லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர். யேமனில் தங்கியிருந்து வேலைசெய்து வந்த வெளிநாட்டை சேர்ந்தவர்கள், தத்தமது தாயகம் திரும்பி விட்டனர். யேமனில் தற்போது அசாதாரண சூழல் நிலவி வருகிறது. தலைநகர் சானா, ஏடன் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் இருந்து கிளர்ச்சியாளர்களை விரட்ட சவூதி அரேபியக் கூட்டுப்படையினர் தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றனர். கிளர்ச்சியாளர்களும் தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர். இந்நிலையில், [illegible] தலைநகர் சனாவில் ஷியா பிரிவினரின் மசூதிகள் உள்ள இடத்தில், நேற்று முன்தினம் ஐ.எஸ். தீவிரவாதிகள் அடுத்தடுத்து நடத்திய 5 கோரமான குண்டு வெடிப்புகளால் 31 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

ஹவுத்தி ஆதரவாளர்கள் அதிகம் உள்ள ஹடல் மாவட்டத்தில் அமைந்திருக்கும் அல்–குபா அல்–கத்ரா மசூதி, அல்–ஜிரா மாவட்டத்தில் உள்ள அல்–கிப்ஸி, மற்றும் அல்–தயாசிர் மசூதிகளிலும், மேலும் ஒரு வீட்டின் மீதும் கார் வெடிகுண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் பலர் படுகாயமடைந்துள்ள நிலையில் சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. (ஐ)

## அமெரிக்காவில் ஒன்லைனில் தாய்ப்பால் விற்பனை

அமெரிக்கா போன்ற மேலை[illegible]நாடுகளில் பல ஆண்டுகளுக்கு மு[illegible]னர் தங்களின் முன்னழகை பாது[illegible]க்க விரும்பிய பணக்காரப் பெண்க[illegible] அடிமைப் பெண்களை வேலைக்கு அ[illegible]த்தி தங்களது குழந்தைகளுக்குத் [illegible]ப் பாலை ஊட்டி வளர்க்க வைத்[illegible]னர். மருத்துவக் குணாம்சத்தை [illegible]ர்த்தைகளால் வர்ணிக்க இ[illegible]த மகத்துவம் நிறைந்த தாய்ப்[illegible] சேகரித்து வைக்கும் வங்[illegible]ள் வெளிநாடுகளில் ஏராளமா[illegible]ள் என. நாகரிக மாற்றத்துக்[illegible] அனைத்தும் மாறிப்போன தற்[illegible]த்தில் தாய்ப்பால் வங்கிகளும் [illegible]ன் லைன் மூலம் விளம்பரப்படுத்தி [illegible] வியாபாரத்தை பெருக்கி வருகி[illegible]ன. இவ்வாறு பெருகிவரும் இந்த [illegible] பாரமானது, பிரசவத்தின்[illegible] தாயை இழந்த குழந்தை[illegible] மட்டும் வாழவைக்கவில்லை[illegible] உடற்கட்டை பெருக்கிக் க[illegible] துடிக்கும் ஆணழகர்கள் [illegible] தடகள வீரர்கள் அதிக வலி[illegible], தெம்பும், உற்சாகமும் பெற[illegible] காக ஒன்லைன் மூலம் தாய்ப்[illegible] வாங்கிப் பயன்படுத்தி வரு[illegible] மருத்துவ ஆய்வாளர்கள் [illegible] தெரிவித்துள்ளனர். இதனால் [illegible] நோக்கமின்றி செயல்படும் [illegible] பால் வங்கிகள் இழுத்து மூட[illegible] அபாயமும், அவற்றை நம்பி[illegible]கும் பல குழந்தைகள் ஊட்[illegible] கிடைக்காமல் உயிரிழக்கும் [illegible]தும் காத்திருக்கின்றன [illegible] வாளர்கள் தெரிவித்துள்ள[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.எஸ்.ஏ.அரியறட்ணம்
ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர்.

# இந்த நாள் அன்றுபோல் இன்பமாய் இல்லையே!

## ரேடியோ சிலோனினால் தேசிய சேவையில் ஒலிபரப்பான காலத்தால் அழிக்க முடியாத நாடகங்களும் ஏனைய நிகழ்ச்சிகளும்

1957 ஆம் ஆண்டு நான் ஐந்தாம் வகுப்பில் கல்வி பயின்றபோது எனது பெற்றோர்கள் ஒரு வானொலிப் பெட்டி வாங்கினார்கள். எனக்குச் சினிமாப் பாடல்களில் நல்ல விருப்பமிருந்தது. எமது குடும்பத்தினருக்கும் வானொலியில் ஒலிபரப்பான சகல நிகழ்ச்சிகளிலும் அலாதிப் பிரியமிருந்தது. அந்தக் காலத்தில் "ரேடியோ சிலோன்" இரு சேவைகளை நடத்தி வந்தது. ஒன்று தேசிய சேவை, மற்றையது வர்த்தக சேவை இந்த இரு சேவை. களும் ஒரு குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் ஒலிபரப்பானவை. காலை 6.30 மணிக்கு தேசிய சேவை ஆரம்பமாகும். அதில் செய்திகள் மற்றும் மரண அறிவித்தல்கள் ஆகியன ஒலிபரப்பானது. இவை முடிவடைந்ததும் மு.ப. 10 மணி முதல் 11 மணிவரை வர்த்தக சேவையில் சினிமாப் படப்பாடல்கள் ஒலிபரப்பாகும். பின்னர் நண்பகல் 12 மணிக்கு "சித்திர கானம்" இடம்பெறும். இந்த நிகழ்ச்சி 12.45 வரை நீடிக்கும்.

இதிலும் படப் பாடல்கள் இடம் பெறும். 12 மணிக்கு தேசிய சேவை யில் செய்திகளும், மரண அறிவித்தல்களும் இடம்பெறும். பி.ப. ஒரு மணிக்கு இந்தச் சேவை முடிவுறும். பி.ப.3 மணி முதல் மாலை 5 மணி வரை வர்த்தக சேவையில் சினிமாப் படப்பாடல்கள் ஒலிபரப்பாகும். விளம்பரங்களும் ஒலி பரப்பாகும்.

சனிக்கிழமைகளில் தேசிய சேவையில் இரவு 9 மணிக்கு லண்டன் கந்தையா" என்ற மிகப் பிரபல்யமான நாடகம் ஒலி பரப்பாகும். இது மறு ஒலிபரப்பாகவும் இடம்பெறும். எல்லோரும் புகழ்ந்து ரசித்துக் கேட்கும் நாடகம் இதுவாகும். சண்முகநாதன் என்று பெயர் கொண்ட "சானா" என்பவர் லண்டன் கந்தையாவாக நடித்து ரசிகர் களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டார். அவரது தாயாக நடித்த வசந்தா அப்பாத்துரை என்பவரும் தனது நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்தார். இவர்கள் இருவருமே நாடகத்தின் முக்கிய பாத்திரங்கள். மம்மி மம்மி" என்ற "சானா" தமது லண்டன் வாழ்க்கை பற்றிக் கூறுவது இன்றும் என் மனதை விட்டு அகலவில்லை அதுபோலவே "விதானையார் வீடு", "சிறாப்பர் குடும்பம்" ஆகிய நாடகங்கள் தேசிய ஒலிபரப்பில் இடம்பெற்று ரசிகர் களின் நெஞ்சங்களைக் கவர்ந்தன. திருமதி செந்தில்மணி மயில்வாகனம், விதானையாரின் மனைவியாக சிறப்பாக நடித்தார். இவர் மிகச் சிறந்த அந்த நாள் அறிவிப்பாளரின் மனைவியாவார். இன்றும் இவர் கள் இருவரையும் மறக்க முடியாது. மயில்வாகனம் என்றால் அவர் தான் அறிவிப்பாளர் என்று பொருள். "சனா" வை நான் "நிர்மலா" திரையில் பார்த்து மகிழ்ந்தேன்.

கோமாளிகள் கும்மாளம் நாடகம் வானொலியில் ஒலிபரப்பானது. இதுவும் ரசிகர்களைக் கவர்ந்த ஒரு நாடகமாகும். இது "கோமாளிகள்" என்ற பெயரில் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு வெளியானது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலையரசு சொர்ணலிங்கம் என்ற புகழ் பெற்ற கலைஞர் நல்ல தரமான நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றுவார். ரசிகர்கள் எல்லோரும் கூடிக் குவிந்து அவரது நாடகங்களைப் பார்த்து ரசிப்பார்கள். இவையே எமது அந்த நாள் பொழுது போக்குகள். இன்று அந்த நிலை மாறிவிட்டது. இப்படிப்பட்ட தரமான நாடகங்களை இன்று பார்த்து ரசிக்க முடியுமா? இன்றைய நாடகங்கள் அந்த நாள் நாடகங்களுக்கு ஈடாகுமா? அந்த நாள் ஞாபகங்களை நினைத்தாலே மனதில் இனிக்கிறது. இந்த நாள் அன்று போல் இன்பமாய் இல்லையே.



# வரிக்குப் பின்னரான இலாபமாக சி.டி.பிக்கு 701 மில்லியன் ரூபா

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி நிறுவனமானது கொழும்பு பங்குச்சந்தையின் இடைக்கால அறிக்கையின் பிரகாரம், வரிக்குப் பின்னரான இலாபமாக 701 மில்லியன் ரூபாவை பெற்று 25 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

சி.டி.பி நிறுவனத்தின் ஐந்தொகைக் குறிப்பு 38.01 பில்லியன் ரூபாவாக பதிவாகி கடந்த வருடத்தை விட 13 வீத வளர்ச்சியையும், கடன் புத்தகம் 14 ஆல் சரிந்து ரூ.29.38 பில்லியன் வளர்ச்சியையும் காட்டிய அதேசமயம், வைப்புகள் மற்றும் சேமிப்பு இலாகாவானது 10 வீத வளர்ச்சியுடன் 27.07பில்லியன் ரூபாவாக பதிவு செய்து அதன் செயற்றிறனை வளர்ச்சியை தொடர்ந்து முன் னெடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

தேறிய சொத்துக்கள் 20 வீத வளர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் ரூ.4.30 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. வருமானம் 9 வீத வளர்ச்சியைக் காட்டிய அதேவேளை குறைந்த வட்டி காரணமாக தேறிய வட்டி வருமானம் 2.87 பில்லியன் ரூபாவாகப் பதிவாகி 23 வீத வளர்ச்சியை எட்டியிருந்தது.

மேலும் நிதிச் சேவைகள், காப்பீட்டு தீர்வை, தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் வருமான வரி மீதான 'வற்' வரிக்கு முன்னரான இலாபமானது மைல்கல் பதிவான ஒரு பில்லியன் ரூபாவை முறியடித்து, 33 வீத வளர்ச்சியைப் பிரதி பலிக்கும் வகையில் 1.04 பில்லியன் ரூபா பதிவாகியுள்ளது. வருமான வரியில் 48 வீத அதிகரிப்பை பதிவு செய்த போதிலும், இந்த நிறுவனமானது வரிக்கு பின்னரான இலாபத்தில் 701 மில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது.

பங்கொன்றுக்கான வருமானம் ரூ.12.92 ஆகவும், பங்கொன்றுக்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ.79.22 ஆகவும் பதியப்பட்டுள்ளது.

சி.டி.பியின் சொத்து ஆதரவு கடன் புத்தகம் உள்ளடங்கலாக வழக்கமான பணப் பாய்ச்சல் மற்றும் வருவாய் ஈட்டித்தரும் சொத்துக்கள் ஆகியவை ஐந்தொகைச் சொத்துக்களில் 90 வீததத்தைப் பிரதிபலித்து அதன் திரவத்தன்மை நிலைமை மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

நிதிச்சேவைகள் துறையில் மாத்திரமன்றி, அதன் முற்போக்கான கலாசார இணக்கம் மற்றும் மக்கள் சார்ந்த மூலோபாயங்கள் ஆகியவற்றின் சிறப்புத்தன்மைக்காக இலங்கை மற்றும் சர்வதேச ரீதியில் பல்வேறு தொழில் முறை நிறுவனங்களிடமிருந்து சிடிபி அங்கீகாரம் பெற்றுள்ளது.

சிடிபி ஆனது, அதன் சமூக பொறுப்புணர்வு திட்டத்தினூடாக கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு ஊடாக இளைஞர்களை மேம்படுத்தி வருகிறது. புத்தளம் கதயமொட்ட சிங்கள வித்தியாலயத்துக்கு சமகாலத்துக்கேற்ற தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை அன்பளிப்பாக வழங்கியிருந்ததுடன், சாதாரண தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய குறைந்த ஆதாயம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 58 மாணவர்களுக்கு சிடிபி சிசுதிரி புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் காப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவை எதிர்கால தலைமுறையினரின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதில் நம்பிக்கை கொண்ட சிடிபி, அதன் மிஹிகத ஆதரென் திட்டத்தின் கீழ் கனேலிய வனப்பகுதியில் காலி மாவட்டத்தின் 7 பாடசாலை களைச் சேர்ந்த மாணவர்களுக்காக சுற்றுச்சூழல் விழிப்புணர்வுத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

கிராமிய பொருளாதாரம், நகர்ப்புற நிதி மற்றும் கிராமிய நிதி வசதிகள் ஆகியவற்றுக்கான தேறிய கடன் வழங்குநராகத் திகழும் சிடிபி கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கை ஏற்க வழிவகுத்துள்ளது. இருப்பினும், வைப்பு மற்றும் சேமிப்புத் திரட்டு மற்றும் கடனளிப்பு ஆகிய வற்றில் அதன் மதிப்பு மற்றும் நிலை தொடர்பில் கவனம் செலுத்தி வரும் முன்னோடியான வங்கிகளுடன் போட்டியிடும் சிடிபி தொடர்ந்து அதன் செயற்றிறனை நிலைநிறுத்தி வருகின்றது. ஸ்திரத்தன்மை மற்றும் வலிமை ஆகியவற்றுக்கான திடமான அடித்தளத்தைக் கொண்டுள்ள சிடிபி, சந்தேகத்துக்கு இடமின்றி தேசிய அபிவிருத்தி நோக்கி செயற்றிறன் மிக்க பங்களிப்பை வழங்கத் தயாராகவுள்ளது. (த)

# புகைப்படப் போட்டியை நடத்துவதன் மூலம் சுற்றாடல் தினத்தை கொண்டாடும் லங்கெம்

லங்கெம் ரொபியலக் நிறுவனம், இயற்கையின் வர்ணங்களை ஆராதிக்கும் வகையிலமைந்த ஒரு அற்புதமான புகைப்படப் போட்டியை நடத்துவதன் மூலம் உலக சுற்றாடல் தினத்தை இந்தமாதம் கொண்டாடுகின்றது. இயற்கை புகைப்படப் போட்டி என்று அழைக்கப்படும் இந்தப் போட்டிக்கு ரொபியலக் பேஸ்புக் பக்கத்தில் 2015 ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது புகைப்படங்களை தரவேற்றம் செய்யுமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

ஒவ்வொரு பங்குபற்றுநரும் மொத்தமாக ஐந்து புகைப் படங்களைச் சமர்ப்பிக்க முடியும். அனைத்துப் புகைப் படங்களும் இயற்கையுடன் தொடர்புபட்டதாக இருப்பதுடன், இயற்கையின் வர்ணங்களை ஆராதிப்பதாகவும் அமைய வேண்டும். இலங்கை புகைப்படவியலாளர்களின் தேசிய ஒன்றியத்தைச் சேர்ந்த தகுதிவாய்ந்த நடுவர்கள் குழுவினரால் முதல் மூன்று அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அவர்கள் நற்சான்றிதழ்கள் மற்றும் ரொபியலக் வர்ணப்பூச்சை கொள்வனவு செய்வதற்கான பெறுமதிவாய்ந்த வவுச்சர்களைப் பரிசாக பெறுவார்கள்.

இந்தப் போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் கணனி மென்பொருள்களைப் பயன்படுத்தி மோசடியான முறையில் மாற்றியமைக்கப்பட்டதாக இருக்கக் கூடாது என பங்குபற்றும் விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. அதேவேளை சமர்ப்பிக்கப்படும் புகைப் படங்களில், பங்குபற்றுநர்களின் பெயர்கள் அல்லது ஏனைய விவரங்கள் காணப்படக் கூடாது. போட்டிக்காகச் சமர்ப் பிக்கப்படுகின்ற புகைப்படங்களின் ஒட்டுமொத்த பதிப்புரிமை அதனை தரவேற்றம் செய்கின்றவர்களுக்கே உரியதாகும். பதிப்புரிமை தொடர்பான எந்தவொரு விடயத்துக்கும் லங்கெம் நிறுவனம் பொறுப்பாளியாக மாட்டாது.

லங்கெம் சிலோன் பி.எல்.சி. நிறுவனத்தின் பணிப்பாளர் றுவான் ரீ. வீரசிங்க இதுபற்றிக் கூறுகையில்; இயற்கை எனும் தாய் மனிதகுலத்துக்கு நன்கொடையாக அளித்த வர்ணத் தட்டுடன் இணைந்து பணியாற்றுவதே எமது வணிகத்தின் ஒரு முக்கிய பகுதியாகக் காணப்படுகின்றது. உலக சுற்றாடல் தினம் இந்த மாதம் கொண்டாடப்படுகின்ற சூழ்நிலையில், இயற்கையின் வர்ணங்களை ஆராதிக்கவும் சுற்றாடலுக்கு பொருத்தமான கௌரவ அந்தஸ்தை வழங்குவதற்கும் நாம் தீர்மானித்தோம். இதனை எமது பொறுப்பாக நாம் கருதுகின்றோம் என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வீதி, கழிவு நீர் சேரும் குளமா?, எனக் கேட்கிறார்கள் கந்தர்மடம் மணல்தரை வீதியில் வசிக்கும் மக்கள்

**யாழ்.**கந்தர்மடம் ஆலடி முச்சந்தியிலிருந்து ஆரம்பிக்கும் மணல்தரை வீதிக்கு தார் ஊற்றித் தருமாறு கடந்த 10 வருடத்துக்கு முன்பிருந்தே யாழ்.மாநகர சபைக்கு அந்த வீதியில் வசிக்கும் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்க ளால் கையெழுத்திட்டு 10 இற்கும் மேற்பட்ட தட வைகள் வேண்டுகோள் நேரிலும் எழுத்து மூலமும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் விசனப்படுகிறார்கள்.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக அந்த வீதி புனரமைக்கப்படாமலிருக்கும் அதேவேளை, கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திருநெல்வேலியிலிருந்து பலாலி வீதியின் இரு மருங்கிலும் சுமார்3 கிலோ மீற்றருக்கு அமைக்கப்பட்ட நீர் வழிந்தோடும் கால்வாய்களையும் குளத்திற்கு திருப்பாமல் குறித்த மணல் தரை வீதிக்குத் திருப்பி விட்டதன் காரணமாக மழை ஓய்ந்த பின்னரும் கூட ஒரு மணிநேரத்திற்கும் அதிகமாக மழை நீர் வீதியை வந்தடைந்த வண்ண மேயிருப்பதால் குறித்த மணல்தரை வீதி ஒரு குளம் போன்று சாதாரண மழை நேரங்களில் கூட தோற்றமளிப்பதுடன் அந்த வீதியால் மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள்.

அத்துடன் மழை நீருடன் யாழ். வைத்தியசாலை மற்றும் நொதேர்ன் சென்றல் வைத்திய சாலைக் கழிவுகளும் ஏனைய பலாலி வீதியின் கழிவுகளும் வந்தடைவதுடன், நுளம்புகள் பெருகும் ஒரு இட மாகவும் திகழ்கிறது. தொற்று நோய்கள் பரவும் அபாயமிருப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக் கிறார்கள். ஏனெனில் இந்த வீதியில் நீண்ட நாள் களாக மழை நீர் தேங்கி நிற்பதே இதற்கான காரண மாகும். இதைப் பற்றி சுகாதாரப் பரிசோதகர் களுக் குத் தெரியப்படுத்தியும் உரிய நடவடிக்கைகள் இது வரை எடுக்கப்படவில்லை எனவும் சுகாதாரப் பரி சோதகர்களே இந்த வீதிக்குச் சமுகமளிப்ப தில்லை எனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின் றார்கள்.

எனவே பலாலி வீதியின் இரு மருங்கிலும் சுமார் 3 கிலோ மீற்றருக்கு அமைக்கப்பட்ட நீர் வழிந்தோடும் கால்வாய்களையும், அருகிலிருக்கும் குளத்திற்குத் திருப்பி விடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா றும், குறித்த மணல்தரை வீதிக்கு தார் ஊற்றித் தருமாறும் யாழ்.மாநகர சபையினதும், யாழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் அதிகாரிகளை உரிய நடவடிக்கைகளை எடுக்கும் படியும் அந்தப் பகுதிவாழ் மக்கள் வேண்டி நிற்கிறார்கள்.

இதற்குத் தீர்வாக வீதியின் இரு மருங்கிலும் சுமார் 3 கிலோ மீற்றருக்கு அமைக்கப்பட்ட நீர் வழிந்தோடும் கால்வாய்களையும், நொதேர்ன் சென்றல் வைத்திய சாலையுடன் நிறுத்தி அதை சிவன் அம்மன் வீதியின் ஊடாகத் திருப்பி வேறு குளங்களுடன் அல்லது கடலுக்குச் செல்லும் கால்வாய்களுடன் இணைத்து விடலாம். அதைவிடுத்து தாழ்வான பகுதியாகவுள்ள மணல்தரை வீதிக்குத்திருப்பி விட்டுள்ளமை எந்த விதத்தில் நியாயம் என இந்த வீதி வாழ் மக்கள் சம்பந் தப்பட்டோரைக் கேட்கும் அதேவேளை விரைந்து இனி யாவது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிநிற்கின்றார்கள்.

## கொடியவர்களின் தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் ஜனாதிபதி அக்கறை செலுத்துவது மனதுக்கு ஓரளவு ஆறுதலை அளிக்கின்றது.

கொடியவர்கள் சிலரால் அந்த ஒன்றுமறியாத இளம் பிஞ்சு குரூரமான வகையில் கொலை செய்யப்பட் டதை அறிந்ததும் இந்த நாட்டில் மட்டுமல்ல வெளிநாடு களிலும் அதிர்ச்சி அலைகள் அலைமோதின.

தற்போது அந்த கொடிய சம்பவத்துடன் தொடர் புடைய ஒன்பது பேர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரு கின்றனர். இதற்கான உத்தரவை ஜனாதிபதியே பிறப்பித்ததாகத் தெரிய வருகின்றது.

கடந்தகால ஆட்சியில் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் தண் டனையை அனுபவிக்காது தப்பித்துக் கொள்ளும் போக்கே காணப்பட்டது. இதற்கு அன்றைய ஆட்சியாளர்களின் தவறான செயற்பாடுகளே காரணமாக இருந்துள்ளன. இதற்கு எதிர்மாறான வகையில் தற்போதைய ஜனா திபதி நடந்து கொள்கின்றமை மக்களுக்கு ஆறுதலை அளிப்பதாக உள்ளது.

ஒரு நாடு அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டுமா னால் அங்கு நல்லாட்சி மலர வேண்டும். குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் புங்குடுதீவு மாணவியின் அவலச் சாவு தொடர் பான செய்திகளை உதயன் பத்திரிகை ஆரம்ப நாள் முதலே வெளியிட்டு வந்தது. இதன் மூலமாக அந்த அவலச் சம்பவம் தொடர்பாகப் பலரும் அறிந்து

### வாசகர் திருமுகம்



கொள்ளக்கூடியதாக இருந்தது. இந்த வகையில் உதயன் பத்திரிகைக்கு எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இந்தக் கொலை வழக்குத் தொடர்பான செய்திகளை உதயன் பத்திரி கையில் தொடர்ந்து படித்து வருகின்றோம்.

அந்தக் கொடியவர்கள் தண்டனை அனுபவிக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

மா. ரஞ்சினி, வேலணை.

## சிறிதும் தடம் புரண்டு விடக்கூடாது மைத்திரி

ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலின் பின்பு மஹிந்தவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவரும் முயற்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் சுதந்திரக் கட்சியிலும் உள்ள மஹிந்த ஆதரவா ளர்களால் மிகவும் திட்டமிட்டு மேற்கொள் ளப்பட்டு வந்தன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக பிரதமர் வேட்பாளராக மஹிந்தவைக் களமிறக்கிப் பொதுத் தேர்தலில் வெல்வது இவர்களது திட்டம். சில வாரங்களுக்கு முன்னர் மைத்திரியை மஹிந்த சந்தித் ததும் இவர்களது திட்டத்தின் ஓர் அங்கம் என்றே கருதப்படுகிறது. தற் பொழுது இரண்டாவது கட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவரை இடம்பெற்ற முயற்சிகளில் இது முன்னேற்றகரமானது. ஏனெனில் மைத்திரியையும் மஹிந்தவையும் ஒற்றுமைப்படுத்த, முதல் தடவை யாகக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதுவும் மைத்திரி கலந்து கொண்ட கூட்டத்தில் மைத்திரியின் ஒப்புதலுடன் இந்தக் குழு அமைக் கப்பட்டிருப்பதுதான் ஆச்சரியமளிக்கிறது.

இப்படியான ஓர் இக்கட்டான நிலைமையை மைத்திரி எதிர்பார்க்க வில்லை. குழு அமைக்கப்பட்ட வுடன் கூட்டத்திலிருந்து அவர் வெளி யேறிச் சென்று விட்டார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன. எது எப்படியிருந்தாலும், சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப் பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட மிகவும் முக்கியமான கூட்டத்துக்கு மைத்திரிக்கு அழைப்பு விடுத்தவர்கள் அதற்கு முன்னரே அவரை மடக்கு வதற்கு கச்சிதமாகத் திட்டம் வகுத்திருக்கலாம். அவ ரது மிருதுவான சுபாவத்தை தமக்கு சாதக மாகப் பயன்படுத்திக்கொண்டுவிட்டனர் மஹிந்த ஆதர வாளர்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யினதும் தலைவராகச் செயற்படு கிறார் மைத்திரி. அதனால் சுதந்திரக் கட்சி வேட்பாளராக மஹிந்த போட்டியிட மைத்திரியின் ஒப்புதல் தேவை. மைத்திரியையும் மஹிந்த வையும் சந்திக்க வைத்த மஹிந்த ஆதர வாளர்களது உள்நோக் கமே பிரதமர் வேட்பாளராக மஹிந்த வைக் களமிறக்குவ தற்கான ஆதரவைப் பெற்றுக்கொள்வதுதான். இந்தச் சந்திப்பு ஆளும் தரப்பில் அதிருப்தியை ஏற்படுத்தியது. அதன் பின்னர் மஹிந்தவை இனியும் சந்திக்கப் போவதில்லை என்று மைத்திரி கருத்து வெளியிட்டிருந் தார். ஆனால் அமைக்கப்பட்ட குழு மூலம் மீண்டும் இவர் கள் சந்திப்பதற்கான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகா சூரர்கள்.

ஆட்சி மாற்றத்துக்கும் நல்லாட்சிக்கும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு மைத்திரி துரோகம் செய்யமாட்டார் என்ற நம்பிக்கை மஹிந்த எதிர்ப்பாளர்களுக்கு இன்னும் உள்ளது. அவர்க ளது நம்பிக்கையை நியாயப்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. ஏனெனில் போராட்டங்கள், உயிர் அச்சுறுத்தல்கள், காட்டிக்கொடுப்புகள், கழுத் தறுப்புகள் மத்தியில் ஜனவரி –8 இல் வெற்றிபெறப்பட்டது. வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த இந்த வெற்றி வெறும் கேலிக்கிடமாகி விடக்கூடாது.

மைத்திரியையும் மஹிந்தவையும் ஒற்றுமைப்படுத் துவதன் மூலம் தென்னிலங்கை கிராமங்கள் உள்ளிட்ட கீழ்மட்ட மக்களின் ஆதர வையும் தமிழ்–முஸ்லிம் சிறுபான்மை மக்களின் ஆதரவையும் ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குப் பெற்றுக் கொடுத்து பொதுத் தேர் தலில் அமோக வெற்றிபெறமுடியும் என்று மஹிந்த ஆதரவாளர்கள் தப்புக்கணக்குப் போடுகிறார்கள். ஜனவரி–8 தேர்தலில் மைத்திரிக்கு கிடைத்த வாக்குகள் ஆட்சி மாற்றம் வேண்டி அளிக்கப்பட்ட வாக்குகள், மஹிந்த எதிர்ப்பு வாக்குகள். மைத்திரி தடம் புரளுவாரானால் இந்த வாக்குகளை எதிர்பார்க்க முடியாது. இலங்கை அரசியலில் தற் பொழுது உருவாகி வரும்சூழ்நிலை மிகப் பயங்கரமானது. மஹிந்த பல மடை வதும் மைத்திரியின் நிலைப்பாட்டில் தளம்பல் காணப் படுவதும் ஆட்சி மாற்றத்துக்கும் நல்லாட்சிக் கும் வாக்களித்த மக்களைக் குழப்பத் தில் ஆழ்த்தி விட்டுள்ளது. மைத்தி ரியை அதிகாரத் துக் குக் கொண்டு வந்த சக்தி கள் மீண்டும் துரித மாகச் செயற் படவேண்டிய நேரம் இது.

பத்தி எழுத்து

### கேலிச் சித்திரம்

நன்றி: மவ்பிம




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மண்ணுக்குள் வெட்டிப் புதைக்கப்படும் மக்கள் நலன்கள் இந்நாட்டில்

மக்களுக்கென அரசினால் ஒதுக்கப்பட்ட நிதி மூலமும், அவர்களது நலனோம்பு நிதி வளங்களும் கடந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் சார்ந்த தேவைகளுக்கும் அரசியல் கட்சிகளின் தேவைகளுக்காகவும் செலவிடப்பட்டன.

இந்த மக்கள் விரோதச் செயல்கள் குறித்து உயர் அதிகாரி ஒருவர் மனம் வெதும்பித் தகவல் தெரிவித்துள்ளார்.

வடக்கில், மிகக்குறிப்பாக யாழ். மாவட்டத்தில், இத்தகைய சுரண்டல்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் கேட்பார், தடுப்பார் இன்றி மிதமிஞ்சி இடம்பெற்றமை குறித்த செய்திகள் மக்களின் காதுகளில் விழுந்தன. ஆனால் அவற்றை ஊர்ஜிதப்படுத்தி வெளிப்படுத்தும் சூழ்நிலை அப்போது நிலவவில்லை.

"இம்" என்றால் சிறைவாசம், "ஏன்" என்றால் வனவாசம் போன்ற அர்த்தமுள்ள வரிகள் அந்தக் கட்சிகளின் அதிகாரப் பித்துக்கும் ஏகாதிபத்தியப் போக்குக்கும் உவமானம் சொல்லப் பொருத்தமானவை.

அதனை இப்போது வெளிப்படுத்துவது தவிர்க்க இயலாததாகும். அதனையே இப்பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வகையில், அரச உயர் அதிகாரி -- யாழ். மாவட்டத்தின் மேலதிக அரச அதிபர் ப.செந்தில்நந்தனன் புட்டுக்காட்டி உள்ளார்.

போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலத்தில் மக்கள் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் மிகவும் வீழ்ச்சி கண்டிருந்தனர்.

அவர்களின் வாழ்வு மீண்டும் புத்துணர்ச்சி பெறுவதற்கு அரச நிதி ஒதுக்கீட்டுடன் ஆலயங்கள், சங்கங்கள், புலர்பெயர் அமைப்புக்கள், எமது பிரதேச நிறுவனங்கள் போன்றவை வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்றும்--

அத்தகைய உதவிகள், மக்களின் வாழ்க்கையில் நீண்ட காலத்துக்கு நிலைத்து நின்று பயன் தரக் கூடியதாக அமைவது அவசியம் என்றும் -- மேலதிக அரச அதிபர், மிகப் பொருத்தமாக எடுத்துரைத்துள்ளார்.

அண்மையில், வடக்கில் ஊடகங்கள் வாயிலாக செய்திகள் வெளியிடப்பட்டு, மீள்குடியமர்வுக்கான நிவாரண நிதி பெறுவதற்கென அழைக்கப்பட்டவர்களிடம் பணக்கொடுப்பனவுப் பத்திரங்களில் ஒப்பம் பெறப்பட்டதோடு அவர்களின் வங்கிக் கணக்கின் புகைப்படப் பிரதிகள் பெறப்பட்ட போதிலும் -- சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படவில்லை -- என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

இதேவேளை --

முந்தைய அரசின் மோசடிகள் மற்றும் ஊழல்கள் கொழும்பில் -- தெற்கில் -- பல வடிவங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படுவோர், நாளாந்தம் ஊழல் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும் (FCIDக்கும்) இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கும் "இழுத்துச்" செல்லப்படுகின்றனர்.

அவ்வாறு கூட்டிச் செல்லப்படுவோரில் மிகப் பலர், தாம் ஒன்றும் அறியாத அப்பாவிகள் என்று ஒப்புக்குத் தெரிவிக்கின்றனர்.

கைவிலங்குகள் பூட்டப்பட்ட நிலையிலும், பலர் சிரித்தவாறு ஊடகங்களுக்குப் பேட்டிகளை வழங்குகின்றனர்.


மக்களுக்குச் சேவை ஆற்றப்போவதாகத் தேன் ஒழுகப் பேசிவரும் அரசியல் பிரகிருதிகள், மக்கள் சேவைக்கும் அதிகமாக தமது நலன்களை முன்னிறுத்திச் செயற்படுவது இந்த நாட்டின் பெரும் சாபக்கேடுகளில் முதல் இடம் வகிக்கிறது.

ஆட்சியில் பங்கேற்று, பதவிக்கு ஆசைப்பட்டு அரசியலுக்கு வருவது மக்களுக்குச் சேவை ஆற்றுவதற்கு அன்றி, தமது சட்டைப் பைகளை நிரப்பவும், தமக்கு வேண்டியவர்களைப் பலவகை அதர்மச் செயல்களில் ஈடுபடத் தூண்டியும், தாமும் சுவறுவதற்கே என்பது எமது நாட்டில் சர்வ சாதாரணம். அதர்மங்களில் அதுவே முதல்இடம் பெறுகிறது. இது எப்போது தரிக்கும் என்றால், விடை எதிர்மறை நிலை சார்ந்தே தெரிகிறது.

இந்த நாட்டில் மக்கள் நலன் மண்ணுக்குள் வெட்டிப் புதைக்கப்படுகிறது என்பதே அதன் அர்த்தம்.

# 20 ஆவது திருத்தம்

## ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றா?



■ அசோக ஓபயசேகர– ரஜீபன்

20 ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளமை மூன்று கேள்விகளை எழுப்பியுள்ளது.

சிறிய கட்சிகள் பாதுகாக்கப்பட்டுள்ளனவா? சிறிய கட்சிகளை பாதுகாக்கலாமா? தற்போதைய சீர்திருத் தங்கள் சர்வதேச தராதரத்தில் அமைந்துள்ளனவா? என்பனவே இந்த மூன்று கேள்விகளுமாகும்?

சிறிய கட்சிகள் பாதுகாக்கப்படவில்லை, சர்வதேச தராதரம் பின்பற்றப்படவில்லை என என்னால் உறுதியாகத் தெரிவிக்க முடியும்.

**சிறிய கட்சிகள் பாதுகாக்கப் பட்டுள்ளனவா?**

20 வது திருத்தம் வாக்காளர்கள் தங்கள் தொகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான ஒரு வாக்கை வழங்குகின்றது. இது வாக்காளர்களுக்கு தந்திரோபாய ரீதியில்ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது.

2010 ஜனாதிபதித் தேர்தலில் வட பகுதி வாக்காளர்கள் வாக்களித்த விதத்தை தந்திரோபாய வாக்களிப்புக்கு உதாரணமாக முன்வைக்கலாம்.

வடபகுதி வாக்காளர்கள் முன்னாள் இராணுவத் தளபதியை விரும்பாத போதிலும் –மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போட்டியிடுபவர்களில் நம்பகத் தன்மை மிக்கவர் என்ற வகையில் அவருக்கு வாக்களித்தனர். தாங்கள் அறிந்த இரண்டு தீய சக்திகளில் ஆபத்து குறைவானசக்திக்குத்தான் அவர்கள் வாக்களித்தனர்.

அவர்கள் விக்கிரமபாகு கருணாரத்னவுக்கு வாக் களித்திருக்கலாம், அதுவே பொருத்தமானதாகக் காணப் பட்டிருக்கும்,ஆனால் அவர் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதால் அவர்கள் சரத் பொன் சேகாவுக்கு வாக்களித்தனர்.

இந்த அடிப்படையையே பொதுத் தேர்தலில் பொதுமக்கள் சிறிய கட்சிகள் விடயத்தில் பின்பற்றக்கூடும்.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளுக்கு மத்தியில் தமது கட்சி எது என்பதை உணரும் ஜே.வி.பி. வேட்பாளர்கள் வடபகுதியில் 2010 ஜனாதிபதி தேர்தலில் மக்கள் பின்பற்றிய அதேதந்திரோபாயத்தைப் பின்பற்றலாம்.

**இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு?**

சிறிய கட்சிகளைப் பாதுகாக்கக் கூடிய அதேவேளை மக்களுக்குத் தமது தொகுதிவேட்பாளரை தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை அளிக்க கூடிய கலப்புத்தேர்தல் முறைமையே இதற்கான தீர்வாகும். இம் முறைமையின் கீழ் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இரட்டை வாக்குகள் காணப்படுகின்றன.

இந்த முறைமையின் கீழ் வாக்காளர்களுக்கு பெரிய சந்தர்ப்பமொன்று வழங் கப்படுகின்றது. வாக்காளர்கள் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதுடன்,கட்சிக்கும் வாக்களிக்க முடி யும்,இரண்டு தெரிவும் ஒரு குறிப் பிட்ட கட்சிக்கானதாக அமைய வேண்டிய அவசியமில்லை, நீங்கள் தந்திரோபாய அடிப்படையில். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருக்கும், கட்சி என்ற அடிப்படையில் ஜே.வி.பிக்கும் வாக்களிக்கலாம்.

நாடாளுமன்றத்தின் இறுதிவடிவம், கட்சிக்குக் கிடைக்கும் ஆசனங்கள் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது.

**இலங்கை அரசு முன்னெடுக்கும் சீர்திருத்தங்கள் சர்வதேச தரத்திலானவையாகக் காணப்படுகின்றனவா?**

சர்வதேச அளவில் ஒவ்வொரு தேசிய அளவிலான நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இரட்டை வாக்கு காணப்படுகின்றது.ஜேர்மனியையும், நியுஸிலாந்தையும் இதற்கு உதாரணங்களாகக் காட்டலாம். ஆசியாவில் தாய்வான் இதற்கு சிறந்த உதாரணம்.

ஜனாதிபதி சிறிசேனவின் ஆதரவாளர்கள் புதிய தேர்தல் முறைமைக்கு ஆதரவளித்து கருத்து தெரிவித்து வருகின்றனர். எனினும் இதில் இரட்டைவாக்கு இல்லாத தால் இது அடிப்படையில் பலவீனமானதாகும். வாக்காளர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தக் கூடியது.

உலகின் பலபகுதிகளில் காணப்படும்,விகிதாசாரத் தன்மையைக் காப்பாற்றும் இரட்டை வாக்கு முறையை அரசு ஏன் கொண்டுவரத் தயங்குகின்றது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்,

இதற்கு விளக்கமளிக்காவிட்டால், 20 ஆவது திருத்தத்துக்காக குரல் கொடுப்பவர்கள், உலக நாடுகளில் காணப்படும் மிகச் சிறந்த நடைமுறையை இந்த அரசு பின்பற்ற ஏன் தயங்குகின்றது எனக் கேள்வி எழுப்ப வேண்டும், அவர்கள் சர்வதேச தரத்திலானதாக அமையாத தேர்தல் சீர்திருத்த முறைகளுக்கு ஏன் தாங்கள் ஆதரவளிக்கின்றனர் என்ற கேள்வியைத் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் அரசியல் பன்முகத் தன்மையைக் கெடுக்கும் சீர்திருத்தங்களை அனுமதிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாது. எங் களுக்கு தற்போதைய விருப்புவாக்குகள் முறை தேவையில்லாத அதே வேளை 20 ஆவது திருத்தமும் தற்போதைய வடிவில் அவசிய மில்லை.

எங்களுக்கு இரட்டைவாக்கு கலப்பு முறையே தேவை என்பதுடன்,அவசியமுமாகும்.அது விகிதாசாரத் தன்மையைப் பேணுவதாகவும், பிரதிநிதித்துவம் மற்றும் வாக்காளர்களுக்கு அதிகதெரிவை வழங்குவதாகவும் அமைய வேண்டும்.

**இந்த முறையின் கீழ் வாக்காளர்களுக்கு பெரியதொரு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. வாக்காளர்கள் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதுடன்,கட்சிக்கும் வாக்களிக்க முடியும்,இரண்டு தெரிவும் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கானதாக அமைய வேண்டியது அவசியமில்லை மக்கள் தந்திரோபாய அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வேட்பாளருக்கும்,கட்சி என்ற அடிப்படையில் ஜே.வி.பிக்கும் வாக்களிக்கலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சேரலாதன்

# கொள்கைகளை மாற்றுகின்றாரா ஜனாதிபதி மைத்திரி?

அண்மைக் காலமாகவே ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் நடவடிக்கைகளில் மாற்றம் தெரிகின்றது. ஐ.தே. கவுடன் தான் எந்தவிதமான ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லையென அவர் கூறியிருப்பது தாம் சார்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யினரைச் சமாதானப்படுத்தும் ஒரு செயலெனவே எண்ணத் தோன்றுகின்றது. மேலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபஷவுடன் அவர் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவிருப்பதாக வெளிவந்த செய்திகள் அவரது நேர்மையைச் சந்தேகிப்பதற்கு ஏதுவானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டது.


கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கணிசமான தொகையினர் மஹிந்தவுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். இதன் காரணமாகவே 58 லட்சம் வாக்குகளை அவரால் பெற முடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய முழு அளவிலான ஆதரவு காரணமாகவே மைத்திரியால் ஜனாதிபதிக் கதிரையில் அமர முடிந்தது. ஆனால் இன்று அவர் அவற்றையெல்லாம் மறந்து விட்டவர் போன்று நாடகமாடுகிறார். மேலும் மைத்திரி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று விட்டால் ரணில் தான் பிரதமர் என்பது அன்று முடிவு செய்யப்பட்ட ஒன்றாகவே இருந்துள்ளது. இந்த நிலையில் ஐ.தே. கவுடன் ஒப்பந்தம் எதுவும் இல்லையென ஜனாதிபதி தற்போது கதை விடுகின்றார்.

மஹிந்த மீதும் அவரைச் சார்ந்தவர்கள் மீதும் ஊழல், மோசடிக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. இந்த நாட்டு மக்களது நிதியில் பெரும் பகுதியை அவர்கள் ஏப்பம் விட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இந்த நிலையில் மஹிந்தவையும், அவரைச் சேர்ந்தவர்களையும் ஜனாதிபதி எந்த வகையில் அனுசரித்துச் செல்லப் போகின்றார் என்பது புரியவில்லை.ஊழல், மோசடிக் குற்றச் சாட்டுக்கள் கிடப்பில் போடப்படப் போகின்றனவா என்ற சந்தேகமும் எழுகின்றது. அவ்வாறு நடந்து கொண்டால் ஊழல் மோசடிக் காரர்களுக்கு ஜனாதிபதி ஆதரவு தெரிவிக்கிறார் என்பதாகவே கொள்ள முடியும். அவ்வாறாயின் நேர்மையாளர் என்ற இவர் பற்றிய கருத்துரு கலைந்துவிடாதா?



ஜனாதிபதிக்கு பல்வேறு வகையிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளமை உண்மைதான். உயர் பதவிகளில் இருப்பவர்கள் நெருக்கடிக்கு முகம் கொடுக்காது இருக்க முடியாது. இதுதான் தற்போது ஜனாதிபதிக்கும் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவர் இதற்காகத் தமது கொள்கைகளை விட்டுக் கொடுப்பதை ஒருபொழுதுமே ஏற்றுக் கொள்ள முடியாது.

**மைத்திரி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று விட்டால் ரணில் தான் பிரதமர் என்பது அன்று முடிவு செய்யப்பட்ட ஒன்றாகவே இருந்துள்ளது. இந்த நிலையில் ஐ.தே. கவுடன் ஒப்பந்தம் எதுவும் இல்லையென ஜனாதிபதி தற்போது கதை விடுகின்றார்**



சில நிறைவேற்று அதிகாரங்கள் பறிக்கப்பட்ட நிலையில் தற்போது ஜனாதிபதி உள்ளார். இதனால் முன்னாள் ஜனாதிபதிகள் போன்று அவரால் செயற்பட முடியாது. மேலும், இனிமேல் நாடாளுமன்றமும், பிரதம மந்திரியும் அதிக அதிகாரங்களைக் கொண்டிருக்கப் போகின்ற நிலையில் பிரதமர் பதவி மீது பலரும் கண் வைத்துள்ளனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் அந்தப் பதவி மீது ஒரு கண் உள்ளது. தாம் பிரதமர் பதவியில் அமர்ந்து கொண்டால் ஊழல், மோசடிக் குற்றசாட்டுக்களிலிருந்து விடுபட முடியுமென அவர் எண்ணியிருக்கலாம். மேலும், தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களைப் பழிவாங்குவதற்கும் அவர் திட்டமிட்டிருக்கலாம். அவரது நோக்கம் நிறைவேறுவதற்கு ஜனாதிபதி உதவுவது எந்த வகையிலும் நியாயமான ஒன்றாகத் தெரியவில்லை.

மேலும் சிறுபான்மையின மக்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் மஹிந்த ஆட்சியில் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். இதன் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலின்போது அவர்களது வாக்குகள் ஒட்டுமொத்தமாக மைத்திரிக்குக் கிடைத்தன. அவரது வெற்றியும் இந்த வாக்குகளாலேயே உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் மஹிந்தவை மீண்டும் உயர் பதவியொன்றில் அமர்த்துவதற்கு மைத்திரி உதவுவாராயின் அது தமக்கு வாக்களித்த சிறுபான்மையின மக்களுக்குச் செய்கின்ற பெரிய துரோகமாகவே அமைந்து விடும்.

என்னதான் பிரச்சினைகள் ஏற்பட்ட போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை அரவணைத்துச் செல்லும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அவர் இதுவரை மீறியதும் இல்லை. ஆனால் பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெற்றால் தாம் தலைவராக இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதில் அவர் குறியாக உள்ளமை தெரிகின்றது. அரசியல் ரீதியாகப் பார்க்கும் போது இதில் தவறொன்றும் இருப்பதாகத் தெரிய வில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த மட்டில் கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஊழல், மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்பில்லாதவர்கள் தேர்தலில் நின்று பதவிக்கும் வர முடியும். ஆனால் மஹிந்தவை முன்னிறுத்தி தேர்தலை எதிர்கொள்ள நினைப்பதுதான் தவறான தொன்றாகக் காணப்படுகின்றது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரி தவறு செய்வதாகவே தோன்றுகின்றது. மஹிந்தவைப் பற்றி நன்கு அறிந்து கொண்ட அவர் இவருக்கு இடம்கொடுப்பது கொடிய விஷத்தைக் கக்குகின்ற பாம்புக்கு பால் வார்த்துப் பாதுகாப்பதாக அமைந்துவிடப் போகின்றது.

இலங்கையின் அரசியல் எதிர்காலம் சிக்கல்கள் நிறைந்ததாகவே அமைந்துவிடப் போகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 850 | 800 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 600 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 650 | 600 | 600 | 500 | 700 | 550 |
| பாரை | 650 | 450 | – | 600 | 600 | 370 |
| சுறா | 600 | 500 | – | 800 | – | – |
| சீலா | 300 | 450 | 500 | 400 | 400 | – |
| விளை | 600 | 400 | 400 | 500 | 600 | 550 |
| மூரல் | 300 | 350 | 400 | 450 | 400 | 300 |
| கும்பிளா | 350 | 350 | 400 | 400 | 600 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 400 | 450 | 200 | 500 |
| ஒரா | 350 | 400 | 300 | 300 | – | – |
| திரளி | 200 | 300 | 200 | 250 | 200 | – |
| நகரை | 150 | 350 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 200 | 300 | – | 250 | 300 | 200 |
| திருக்கை | 100 | 350 | 100 | 250 | 200 | 150 |
| பாலை | 300 | 300 | 300 | 400 | 400 | – |
| வாளை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 80 | 150 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 100 | 300 | 200 | 200 | 200 | 150 |

# சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 8 | 5 | 6 | 1 | 2 |
| 2 | 1 | 5 | 7 | 6 | 9 | 8 | 3 | 4 |
| 8 | 6 | 4 | 2 | 1 | 3 | 9 | 5 | 7 |
| 6 | 5 | 2 | 9 | 3 | 4 | 7 | 8 | 1 |
| 7 | 3 | 8 | 6 | 2 | 1 | 5 | 4 | 9 |
| 4 | 9 | 1 | 5 | 7 | 8 | 2 | 6 | 3 |
| 5 | 2 | 3 | 8 | 4 | 7 | 1 | 9 | 6 |
| 1 | 8 | 6 | 3 | 9 | 2 | 4 | 7 | 5 |
| 9 | 4 | 7 | 1 | 5 | 6 | 3 | 2 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 2 | 1 | | | 6 | 4 |
| | | | | | 5 | | | 1 |
| | | 3 | 8 | | 6 | | | |
| | 4 | 1 | | | | | 9 | |
| 8 | | | | 2 | | | | 3 |
| | 5 | | | | | 6 | 8 | |
| | | | 3 | | 1 | 9 | | |
| 9 | | | 4 | | | | | |
| 6 | 1 | | | 7 | 2 | 4 | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங் குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ஆன்மிகச் சிந்தனை

ஞானச்சுடர்



எம்மால் இயன்ற உதவியை மற்றவர்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் செய்து வாழ்வது ஜீவகாருண்யம் எனப்படும். இதயத்தில் இறைவனைக் கோயில் கொள்ளச் செய்து, மக்களை இறைவனாகக் கருதி, கைகளால் தொண்டு புரிய வேண்டும். பிறருக்கு நன்மை செய் யும் நிலையில் நாம் இருக்கும்போது, அவ் விதம் நன்மை செய்யும் வாய்ப்பை நாம் தவற விட்டு விடக்கூடாது. நாம் வாழும் வாழ்க்கை பிறருக்கு இல்லாமையாலும் கல்லாமையாலும் பாதிக்கப்பட்ட மக் களுக்கு ஏதேனும் ஒரு விதத்தில் உதவுவதாக இருக்க வேண்டும். பிறர் நலப் பணியே இறை பணி என்பது சுவாமி விவேகானந்தரின் கொள்கை.

## வேதங்கள் போதுமே...

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



சாதாரண வழிகாட்டுதலுக்கு வேதங்களே போதுமானவை. ஆன்மிக வாழ்வைப் பொறுத்தவரையில் அதில் உள்ளதைவிட அதிகமாகச் சொல்லவும் முடியாது, அதிகமாக அறிந்து கொள்ளவும் முடியாது. அறிந்து கொள்ள வேண்டிய அனைத்தும் அங்கே சொல்லப்பட்டுள்ளன. ஆன்மா நிறைநிலையை அடைவதற்குத் தேவையான உபதேசங்கள் அனைத்தும் ஸ்மிருதிகளில் முழுமையாக உள்ளன. அவற்றின் விளக்கங்களைக் காலத்துக்குக்காலம் ஸ்மிருதிகள் தருகின்றன.

## முதுகு வலியிலிருந்து எப்படித் தப்பிக்கலாம்?

(நேற்றைய தொடர்ச்சி)

மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த உடற் பயிற்சியையும் செய்ய வேண்டாம். முதுகுவலி இருப்பவர்கள் நிற்கும்போது முழங்கால்களை இறுக்கமாக வைத்துக்கொள்ளாமல், தளர்வாக வைத்துக் கொள்வது நல்லது. குதி உயர்ந்த காலணிகளை மற்றும் சப்பாத்துக்களைத் தவிர்க்க வேண்டியது மிக முக்கியம். எப்போதாவது அணிந்து கொள்ள லாமே தவிர தினமும் அணிதல் கூடாது. தவிர அதை அணிந்து கொண்டு நீண்ட நேரம் நிற்பதோ, நடப்பதோ கூடாது. நீச்சல் பயிற்சி செய்யலாம். ரென்னிஸ், ஏரோபிக்ஸ் போன்ற பயிற்சிகள் தவிர்க்கப்பட வேண்டும். மல்லாக்கா கப்படுத்துத் தூங்குவதே நல்லது. குப்புறப் படுத்து தூங்குவது முதுகு வலிக்கு வழி செய்வதோடு, உங்கள் முகத் தசைகளையும் சீக்கிரம் முதுமை யாக்கி விடும். மெத்தென்று இருக்கும் படுக்கை யில் படுக்க வேண்டாம். கடினமான படுக்கையே நல்லது. அதுதான் முதுகுக்கு இதமளிக்கும். மென்மையான படுக்கையில் படுத்தால், முதுகின் அடிப் பகுதி அதிகம் பாதிக்கப்படும். தலைக்கு கூடிய வரை தலையணை இல்லாமல் தூங்கலாம். முடியாத பட்சத்தில் மிக மெல்லிய தலையணை போதும். திடீரெனக் குனிவது, உடலைத் திருப்புவது போன்ற ஏடாகூடமான அசைவுகள் தவிர்க்கப்பட வேண்டும். நிற்கும்போது உடலில் எடையை இரு கால்களும் சம அளவு தாங்கியிருக்கும்படி நிற்க வேண்டும். பைசா கோபுரம் கணக்கில் சாய்ந்து நிற்கும் வேலை வேண்டாம்.

## நாளை

**ஆனி-05**

**சனிக்கிழமை**

**20.06.2015**

**திதி:** சதுர்த்தி மு.இ. 09.52 வரை

**நட்சத்திரம்:** பூசம் மு.ப.09.52 வரை

**சுபநேரம்:** 02.54-4.24 வரை

**இராகுகாலம்:** 08.54-10.24 வரை

சதுர்த்தி விரதம்

## கண்களை பாதுகாக்க குறிப்புக்கள்

உடல் உறுப்புக்களில் மிக முக்கியமானது கண். சாதார ணமாக நாம் பார்ப்பதால் கண்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால், கண்களுக்கு மிக அருகில் அதிக ஒலியுடன் கூடிய கணினி யைத் தொடர்ந்து பல மணிநேரங்கள் பார்த்துக் கொண்டிருப்பதால் கண் பாதிக்கப் படுகிறது. கண்களுக்கு ஓய்வு கொடுக்க வேண் டும் என்றால் கண்களுக்கு இருளைக் கொடுக்க வேண்டும். கண்களுக்கு இருளைக் கொடுப்பது மட்டுமல்லாமல், மனதின் சிந்தனையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் கண்களுக்கு ஓய் வளிக்க பல ஆசனங்கள் உள்ளன. கண்களுக்கு அதிக இரத்த ஓட்டம் அளிக்க சிரசாசனம் உள் ளது. சிரசாசனம் செய்வதால் கண்களின் பார்வை வலு அதிகரிக்கும். மேலும், கண்களுக்கு திராடகம் என்ற ஒரு பயிற்சி உள்ளது. அதாவது, ஒரு இருளான அறையில் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து அதைப் பார்த்துக் கொண்டே இருந்தால் கண் களுக்கு அதிகமான சக்திக் கிடைக்கும். சூரியநமஸ் காரம் செய் வதாலும் கண் பார்வை அதிகரிக்கும். அதற்குத் தான் கண் கெட்ட பிறகு சூரியநமஸ் காரமா என்று கேட்பார்கள். எனவே சூரியநமஸ் காரம் செய் வதால் கண் பார்வை வலு அதிகரிக்கும். பொதுவாக சூரியநமஸ்காரத்தை அதிகாலை யில் சூரியன் உதயத்துக்கு முன்பாக செய்ய வேண்டும். சூரிய நமஸ்காரத்தை வெவ்வேறு வேளைகளில் செய்வதால் வெவ்வேறு பயன்கள் கிட்டும். முக்கிய மான விடயம் என்ன வென்றால், தினமும் 8 மணி நேரம் நிம்மதியாகத் தூங்க வேண்டும். அதுவும் மிகவும் இருளான ஓர் அறை யில் தூங்குவதே கண்களுக்கு ஒரு நல்ல ஓய் வாக அமையும். சீக்கிரமாகத் தூங்கி அதி காலை யில் எழுவதால் உடலுக்குப் புத்துணர்ச்சி கிட்டும். அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இடையில் உங்கள் கண்களுக்கு ஓய்வு தேவைப்படும்போது, உள்ளங்கைகள் இரண் டையும், கண்களில் அழுத்தி சிறிது நேரம் வைத்திருந்து மூச்சை உள்ளிழுத்து வெளிவிட் டால் நல்ல [illegible] போது உள்ள[illegible] கழித்து மெதுவாக கண்களைத் திறக்க வேண்டும்.

(தொடரும்)



# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 120 | 60 | 80 | 80 | 80 | 50 |
| கத்தரி | 50 | 60 | 50 | 60 | 50–80 | 40 | 80 | 30–35 |
| கரட் | 150 | 180 | 160–300 | 180 | 250 | 240 | 220 | 260 |
| மரவள்ளி | 50 | 60 | 60 | 50 | 60 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 160 | 120 | 140 | 120 | 180–200 | 160 | 120 | 100 |
| பாகல் | 170 | 160 | 160 | 160 | 280 | 160 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 80–100 | 140 | 160 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 150 | 160 | 140 | 140 | 200 | 180 | 130 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30 | 40 | 60 | 25 |
| தக்காளி | 80 | 80 | 80–100 | 80 | 80 | 120 | 80–100 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 50 | 60 | 80 | 40–50 |
| கீரை | 20 | 20 | 40 | 10 | 20 | 30 | 35–40 | 15–20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 120 | 140 | 160 | 300 | 200 | 120–140 |
| புடோல் | 70 | 100 | 60 | 80 | 100 | 100 | 80 | 70 |
| கோவா | 80 | 100 | 100 | 100 | 80 | 100 | 100–120 | 80 |
| வெண்டி | 120 | 120 | 100–200 | 120 | 150–160 | 80 | 120 | 70 |
| போஞ்சி | 160 | 140 | 240 | 180 | 240 | 300 | 260 | 200 |
| லீக்ஸ் | 180 | 160 | 160 | 160 | 160 | 240 | 160 | 160 |
| தேங்காய் | 50 | 30–40 | 60 | 50 | 40–50 | 60 | 35–45 | 30–45 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 | 100–120 | 120 | 120 | 100–140 |
| தேசிக்காய் | 140 | 120 | 160 | 120 | 140 | 100 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 40 | 20 | 20 | 10 |
| [illegible]மிளகாய் | 100 | 160 | 120 | 160 | 220 | 240 | 180 | 150 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 120 | 100–120 | 120 | 120 | 90 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 500 | 300 | 350 | 600 | 200 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாத எண் சோதிடப் பலன்கள்

9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறந்த உங்களுக்கு இந்த மாதம் திடீர் யோகம் உண்டாகும். கல்வியியலாளர்களின் தொடர்பு கிடைக்கும். புதிய பதவிகள் தேடி வரும். பல முறை முயன்றும் முடிக்க முடியாத காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படு வீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. மகளின் கூடா நட்பு விலகும். வெளி வட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். உடன்பிறந்தவர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவீர்கள். இளைய சகோதர வகையில் நன்மை உண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்திகள் வரும். வெள்ளிப் பொருள்கள் வாங்குவீர்கள். பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். மாதத்தின் மையப்



பகுதியில் பொறுப்புகளும், வேலைச்சுமையும் அதிகரிக்கும். அவசரப்பட்டு வாக்குறுதி அளித்துவிட்டு பிறகு அவதிப்படவேண்டாம்.

மனைவிக்கு மருத்துவச் செலவுகள், சிறுசிறு விபத்துகள், அலைச்சல் வந்துப் போகும். யோகா, தியானம் என மனம் செல்லும்.

## பிறந்த மாதத்தில் எந்த நோய் தாக்கும்

- **ஜனவரி** மாதத்தில் பிறந்தவர்கள் "ஹைப்பர் டென்சன்" என்னும் உயர் இரத்த அழுத்தத்தினால் அவஸ்தைப்படுவர்.
- **பெப்ரவரி** மாதத்தில் பிறந்தவர்கள் இதயம் சம்பந்தப்பட்ட நோயான, விரைவான மற்றும் ஒழுங்கற்ற இதயத் துடிப்பால் கஷ்டப்படுவர்.
- **மார்ச்** மாதத்தில் பிறந்தவர்களின் இதயச் சுவர்களில் கொழுப்புக்கள் தேங்கி தடித்து, அதனால் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது.
- **ஏப்ரல்** மாதத்தில் பிறந்தவர்களின், இதயத் தசைகளுக்கு இரத்த ஓட்டம் குறைந்து, அத்னால் கடுமையான நெஞ்சு வலியைச் சந்திக்கக்கூடும்.
- **மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட்** ஆகிய இந்த மாதங்களில் பிறந்தவர்கள் சற்று வலிமையானவராக இருப்பதுடன், அவ்வப்போது சிறு சிறு உடற் கோளாறுகளைச் சந்திக்கக்கூடும்.
- **செப்ரெம்பர்** மாதத்தில் பிறந்தவர்கள் ஆஸ்துமா என்னும் சுவாச நோயால் பாதிக்கப்படுவர்.
- **ஒக்ரோபர்** மாதத்தில் பிறந்தவர்கள் கவனக்குறைவு அதியியக்கக் கோளாறு என்னும் நடத்தைக் கோளாறால் பாதிக்கப்படுவர்.
- **நவம்பர்** மாதத்தில் பிறந்தவர்கள் வைரஸ் நோய்த்தொற்றுகளால் பாதிக்கப்படுவர்.
- **டிசெம்பர்** மாதத்தில் பிறந்தவர்கள் கடுமையான மூச்சுக் குழாய் அழற்சியால் பாதிக்கப்படுவர்.



# அன்புதான் பெண்ணின் பலம்!

இறைவன் பெண்களைப் பல உன்னதமான உடல் மற்றும் மன இயல்புகளுடன் படைத்துள்ளான். பெண் ஆணை விடப் பலமானவளும் இல்லை பலவீனமானவளும் இல்லை. பல வேறுபாடுகளுடன் சமமானவள். பெண்களுக்கு இயல்பாகவே பல மென்மையான உணர்வுகள் உண்டு.

கலை, அன்பு, அழகுணர்ச்சி, தாய்மை, கருணை, காதல், பரிவு போன்ற உணர்வுகள் சற்றே கூடுதலாகத்தான் இருக்கும். அதனால் தான் அவள் உடல் அமைப்பிலும் ஒரு மென்மையைக்காண முடிகிறது. ஆனால் மென்மையான ஒன்று வலிமையற்ற தாய் இருக்க வேண்டிய அவசியமில்லை. மென்மையாகவும் அதே நேரம் வலிமையாகவும் இருப்பவள் தான் பெண். ஆனால் இன்றைய கால கட்டத்தில் பெண்களிடம் மென் மையும், வலிமையும் குறைந்திருப் பதையே பல நிகழ்வுகள் காட்டுகின்றன.

# குடும்பத்தில் சகிப்புத்தன்மை

இன்றைய பெண்கள் படிப்பு, மேற்படிப்பு, வேலை, உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் என்று பல துறைகளிலும் இருக்கிறார்கள். இதனால் குடும்பத்தில் மற்றவர் எதிர்பார்க்கும் பராமரிப்பை, கவனிப்பை கொடுக்க முடியாமல் போகலாம். ஆனால் குடும்பமே ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பையும், மகிழ்ச்சியையும், நிம்மதியையும், அங்கீகாரத்தையும் வழங்கும் முக்கிய இடம். இங்கு பெற்றோர், கணவர் மற்றும் குழந்தைகளிடம் போதுமான அன்பையும், அனுசரணையும் வழங்க பெண்கள் எப்போதும் தயங்கக் கூடாது. மற்றவர் மனமறிந்து விட்டுக்கொடுத்து, சிறு தவறுகளை மன்னித்து பொறுப்பாய் நடக்க தவறக் கூடாது. அதே நேரத்தில் கணவரோ, குழந்தைகளோ தமது பெற்றோர் மற்றும் கணவரின் பெற்றோரோ தவறு செய்தாலும் அதைத் தட்டிக் கேட்கத் தயங்கக்கூடாது. பெரியவர்களின்தவறைபட்டும்படாமலும்சுட்டிக் காட்ட வேண்டும். குழந்தைகளின் தவறை புத்திசாலித்தனமாய் அணுக வேண்டும்.

சகிப்புத்தன்மையை வளர்த்துக்கொண்டால் அன்பான குடும்பத்துக்கு தலைவியாகவும் நல்ல சமுதாயத்துக்கு வித்திடுபவராகவும் தனது குழந்தைகளுக்கு நல்ல முன்மாதிரியாகவும் பெண்கள் திகழலாம். இளம் பெண்கள், படிப்பு, வேலை, குடும்பச் சூழல் காரணங்களால் இயல்பாக இருக்க முடியாமல் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். பதற்றம், பயம், சந்தேகம், தன்னம்பிக்கையின்மை போன்ற காரணங்களால் மன அழுத்தம் ஏற்பட்டு அதனால் உடலின் ஹார்மோன்கள் பாதிக்கப்படுகின்றன. அதேபோல் கர்ப்பவதியான பெண்கள் அமைதியான, மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும்போதுதான் ஹார்மோன்கள் சரியாக இயங்குகின்றன. மேலும் பிரசவத்தின் போது பயம், சந்தேகம், பதற்றம் போன்ற உணர்வுகள் மேலோங்கியிருந்தால் கருப்பை வாய் நெகிழாமல் இறுக்கமாகி விடுவதுடன் தானாய் திறப்பதும் இல்லை. இதனாலேயே இன்று பல பெண்களுக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படு கிறது.

தன்னம்பிக்கை, பிறர் மேல் நம்பிக்கை, அன்பு, மகிழ்ச்சிபோன்ற உணர்வுகள் நிரம்பியிருப்பதுடன், விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மையை வளர்த்துக்கொள்வதாலும் இந்தமாதிரியான பல பிரச்சினைகளிலிருந்து பெண்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம். அன்பாய், கருணையாய்இருப்பது என்பது பெண்களின் இயல்பான குணம் என்பதால் அதை விட்டு விட்டால் தான் வலிமையாய் இருக்க முடியும் என்று நினைப்பது தவறு. மென்மை யும் வலிமையும் சேர்ந்தே இருப்பதும் பெண்களின் இயல்பு தான். எனவே பெண்களே! அன்பை விட்டுக்கொடுக்காமல் வலிமையாய் வாழலாம் வளரலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க





# நம்பிக்கை மோசம்



ஊரெல்லாம் கடன் வாங்கி அதைத் திருப்பித் தராமல் ஏமாற்றிக் கொண்டிருந்தான் ஒரு டம்பப் பேர்வழி. முல்லாவிடம் ஒரு பெருந்தொகையை கடனாக வாங்கி அவரை ஏமாற்ற அந்த டம்பன் தீர்மானித்தான். நிச்சயம் முல்லாவை ஏமாற்றி பெரும் பொருளைக் கடனாக வாங்கி வருவதாக பலரிடம் கூறி மார்தட்டிக் கொண்டான். அந்த டம்பன் சாமர்த்தியமாகச் செயற்பட திட்டமிட்டான். முல்லா தன்னை நம்பிப் பெருந் தொகை கொடுக்கமாட்டார் என்று அவனுக்குத் தெரியும், அதனால் தன் மீது அவருக்கு நம்பிக்கை ஏற்பட ஒரு நாடகம் நடிக்க எண்ணினான். ஒரு நாள் அவன் முல்லாவிடம் சென்றான். 'முல்லா அவர்களே எனக்கு ஒரே ஒரு வெள்ளிக்காசு கடனாகத் தர முடியுமா?' என்று கேட்டான். 'நம்பிக்கை மோசம் செய்யாத யாருக்கும் நான் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கடன் கொடுக்கத் தயங்க மாட்டேன். நீ ஒரு வெள்ளிக் காசுதானே கேட்கிறாய். இதிலே நீ நம்பிக்கை மோசம் செய்யாமல் இருந்தால் பத்தாயிரம் காசுகள் கேட்டாலும் கொடுப்பேன் என்று கூறி டம்பனுக்கு ஒரு வெள்ளிக் காசை கடனாகக் கொடுத்தார். டம்பன் நாலைந்து நாள்கள் கழித்து முல்லா கொடுத்த ஒரு காசு எடுத்துக் கொண்டு அவரிடம் வந்தான். 'முல்லா அவர்களே தாங்கள் கடனாகக் கொடுத்தது அற்பப் பொருள்தான் என்றாலும், மிகுந்த நாணயத்தடன், பொறுப்புடன் திரும்பிக் கொடுத்து விடுவது என்று வந்திருக்கிறேன். பண விடயத்திலே நான் மிகவும் நேர்மையானவன் என்பதை தாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்' என்று கூறிவாறு டம்பன் அந்த ஒரு வெள்ளிக் காசை முல்லாவிடம் திரும்பிக் கொடுத்தான். முகத்திலே மலர்ச்சியில்லாமல், ஏதோ உபாதைப்படுபவர் போல வாங்கிக் கொண்டார் முல்லா. டம்பன் அந்த இடத்தை விட்டு அகலாமல் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான். 'என்ன சமாச்சாரம்?' என்று முல்லா கேட்டார். 'ஐயாயிரம் பொற்காசுகள் கடனாகத் தரவேண்டும். நாணயமாக ஒரு காசைப் திருப்பிக் கொடுத்தது போல ஐயாயிரம் பொற்காசுகளையும் திரும்பித் தந்த விடுவேன்' என்றான் டம்பன். 'உனக்கு இனி நான் ஒரு காசு கூடக் கடனாகக் கொடுக்க முடியாது' என்று முல்லா கோபமாகச் சொன்னார். 'முதலில் நான் வாங்கிய ஒரு காசைத் தான் திரும்பத் தந்து விட்டேனே' என்று ஒன்றும் விளங்காமல் கேட்டான் டம்பன்.

நீ ஒரு வெள்ளிக் காசு கடன் வாங்கிய விடயத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டாய் –என்றார் முல்லா. டம்பன் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்தான். 'முல்லா அவர்களே நான் வாங்கிய தொகையைத் திரும்பிக் கொடுத்திருக்கும் போது நம்பிக்கை துரோகம் செய்ததாக எவ்வாறு கூறுகிறீர்கள்?' என்று திகைப்போடு கேட்டான். 'நம்பிக்கை மோசம்ந்தான் செய்து விட்டாய். நான் கொடுத்த ஒரு காசை நீ திருப்பி கொடுக்காமல் ஏமாற்றி விடுவாய் என்று நம்பினேன். நீயோ திருப்பிக் கொடுத்து விட்டாய். அதாவது நான் என்ன நம்பினேனோ அதற்கு மாறாக நடந்த விட்டாய். ஆகவே இதுவும் நம்பிக்கை மோசம்தான். அதனால் ஒரு காசு கூட உனக்குக் கடன் தரமாட்டேன்' என்று கூறியவாறே முல்லா வீட்டுக்குள் எழுந்து சென்று விட்டார்.

# பொது அறிவுத்தகவல்கள்

- குழந்தைப் பாடல்களை இயற்றிய முதல் கவிஞர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.
- மனித கருவை ஆய்வுக்கு அனுமதித்த உலகின் முதல் நாடு இங்கிலாந்து.
- குதிரையின் கண் எதிரெதிர் திசையில் அசையும்.
- ஐம்பது வயதுக்கு மேல் சுவை உணரும் ஆற்றல் குறையும்.
- எலிகள் இசையை விரும்புகின்றன.
- உலகின் பெரிய பூச்சி 'கோலியாத்' வண்டுதான்.
- அடிபட்ட கழுகு உயிர்போகும் வரை போராடும்.
- கார்ப்ஸ் மீனின் ஆயுள் ஐம்பது வருடம்.
- வெள்ளாடு பசுவைவிட அதிக பால் தரும்.
- உலகின் மிகப்பெரிய எரிமலை கொடபாக்சி.
- பச்சோந்தியின் நாக்கு அதன்உடலின் நீளத்தைப்போல் இரு மடங்கு இருக்கும்.
- விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் விலங்கு நாய். அதன் பெயர் லைகா.
- தரையில் முதுகு படும்படி உறங்கும் ஒரே விலங்கு மனிதன்தான்.
- யானையின் வெட்டுப் பற்களே அதன் தந்தங்கள்.
- நெருப்புக்கோழியின் ஒரு முட்டை 22 கோழி முட்டைகளுக்குச் சமம்.
- நீலத் திமிங்கிலத்தின் இதயம் ஒரு மனிதன் உயரத்துக்கு இருக்கும்.



# நல்ல நட்புக்கான அம்சங்கள்

**நாம்** எப்போதும் எளிதாக நினைவில் வைத்துக் கொள்ளக்கூடியவர்களில் நல்ல நண்பர்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். நம்மைச் சுற்றி நாம் மகிழும் வண்ணம் எதையாவது செய்து கொண்டு நம்மை முடிவில்லா உற்சாக மூட்டக்கூடிய இவர்க ளது செயல்கள் காலப் போக்கில் மேலும் அதிகரிப்பதாகவே இருக்கும். இப் போது நாம் நல்ல நட்பின் அடையாளங்களைப் பற்றிப் பார்க்க விருக் கிறோம்.




இவற்றை நல்ல நண் பர்கள் பற்றிய உண்மையான விடயங்களாகவும் எடுத்துக் கொள்ளலாம். எல்லாரும் நல்ல நண்பர்கள் என நாம் சொல்வதில்லை.

நல்ல நண்பர்கள் என்ற அடையாளத்தைப் பெற வித் தியாசமாக வரையறுக்கத்தக்க குணாதிசயங்கள் அவசியம். இதை மனதில் கொண்டு அருமையான நண்பர்களின் குணங்களை இப்போது நாம் பார்க்கலாம். இந்த அம்சங்களை நல்ல நட்பில் மட்டுமே நீங்கள் காண முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நல்ல நட்பின் எட்டு அம்சங்கள் உங்களுக்காக இதோ...!

**மன்னித்தல்**

சில சமயங்களில் நீங்கள் அவர் மீது கோபம் கொண்டு கத்தியிருக்கலாம்.

நீங்கள் பயன் படுத்திய கடுஞ்சொற்கள் ஒரு பதட்டமான சூழ்நிலையை உரு வாக்கியிருக்கலாம். ஆனால், அதை சற்றும் பொருட்படுத்தாமல் உங்களை உடனேயே மன்னிக்கும் குணத்தை ஒரு நல்ல நண்பனிடத்தில் மட்டுமே எதிர் பார்க்க முடியும்.

உங்களுக்குப் பிடித்த எதையும் செய்ய அவர்களுக்கு எந்தத் தடையும் இல்லை. நாம் பெரும்பாலும் பல சூழ்நிலைகளுக்கு மத்தியில் தான் எமது முடிவுகளை எடுக்க வேண் டியுள்ளது. ஆனால் எமக்கு மிகவும் பிடித்த செயலைச் செய்ய நல்ல நண்பன் எப்போதுமே துணையாக இருப் பார்.

குறிப்பாக உங்களுக்குப் பிடித்தமானதைச் செய்ய நீங் கள் விருப்பப்படுவீர்கள் என்பதை அவர்கள் அறி வார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெதுப்பகத்துக்குள் புகுந்து வாள் வெட்டு

கரவெட்டி சாமியன் அரசடி பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்றில் அத்துமீறி உள்நுழைந்த இனம் தெரியாதவர்கள் வாள்வெட்டை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்த வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த வெதுப்பக வாசலில் ஒருவர் மோட்டார் சைக்கிளை இயங்கிய நிலையில் வைத்திருக்க மற்றையவர் கையில் வாளுடன் வெதுப்பக முன்வாசல் வழியாக உள்நுழைந்து அங்கு வெதுப்பக வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 20 வயதுடைய இளைஞனின் கழுத்துப் பகுதியை நோக்கி வாள் வீச்சு மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுதாகரித்துக்கொண்ட இளைஞர் தனது கையால் தடுக்க முற்பட்டபோது கையில் வெட்டுவிழுந்துள்ளது. அத்துடன் அவர் ஓட முற்பட்டவேளை மற்றைய கையிலும் வாளால் வெட்டி விட்டு தாக்குதலாளி அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞன் இரத்தம் வெளியேறிய நிலையில் தனது நண்பனின் உதவியுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று மாலை வரை எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. (த–ரி)

## மேலும்

பெறுமதியான இரண்டு ஆட்பிணையாளிகளின் பிணையில் விடுவிக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 47 சந்தேக நபர்கள் கடந்த மாதம் 21 ஆம் திகதி யாழ்.நீதிவான் நீதிமன்றில் இரண்டு வழக்குகளின் கீழ் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

கடந்த தவணை இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 17 சந்தேகநபர்களுக்கு நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டது. ஏனைய சந்தேகநபர்களை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

நேற்று அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளால் பொலிஸாரின் பாதுகாப்புடன் சந்தேக நபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். சந்தேக நபர்களுக்காக முற்பட்ட சட்டத்தரணிகள் கைது செய்யப்பட்டவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

இதற்கு பதிலளித்த பொலிஸார், சந்தேகநபர்களுக்கெதிரான விசாரணைகள் முடிவுறவில்லையெனவும், எனினும் மன்று பொருத்தமான பிணையில் சந்தேகநபர்களை விடுவிக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிவான் பெ.சிவகுமார், சந்தேகநபர்கள் எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது எனவும், நன்நடத்தை பேணவேண்டும் எனவும், ஏதாவது குற்றச் செயல்களில் ஈடுபட்டால் வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும்வரை விளக்கமறியலில் இருக்கவேண்டுமெனவும் எச்சரித்து தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான கிராம சேவகரினதும், பிரதேச செயலகரினதும் சான்றிதழை முற்படுத்தும் இரண்டு பிணையாளிகளின் பிணையில் விடுவித்ததுடன், மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் அனைவரையும் முற்பகல் 9 மணிக்கும் நண் பகல் 12 மணிக்கும் இடையில் யாழ். தலைமைப் பொலிஸ் நிலை யத்தில் கையொப்பம் இடுமாறு உத்தரவிட்டார். இவ்வழக்குகள் ஜூலை மாதம் 27 ஆம், ஓகஸ்ட் 04 ஆம் திகதிகளுக்கு மேலதிக விசாரணைகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.(த–103)

## விசமிகளால்

வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியில் நேற்று மாலை விசமிகளின் செயலால் 150 க்கும் மேற்பட்ட பனைமரங்கள் தீயில் கருகி நாசமாகின. கேவில் பகுதியில் உள்ள பனந்தோப்பு ஒன்றில் நேற்று மாலை 5 மணியளவில் திடீரெனத் தீ பற்றிகொண்டது. காற்று அதிகமாக இருந்ததால் அதிவேகமாக அங்குள்ள பனை மரங்களில் தீ பரவி காட்டுத்தீ போல கொளுந்துவிட்டெரியத் தொடங்கியது. பனந்தோப்பையும் தாண்டி அருகில் இருந்த குடியிருப்புப் பக்கமாகவும் பரவிய தீயில், ஆட்டுக்கொட்டில்கள் சிலவும் எரியுண்டன. ஆயினும் அந்தப்பகுதி மக்கள் விரைந்து செயற்பட்டு தீயைக் கட்டுப்படுத்தியதால், குடியிருப்புகளுக்கு ஏற்படவிருந்த சேதம் தவிர்க்கப்பட்டது. ஆயினும் இந்தத் தீயினால் சுமார் 150 க்கும் மேற்பட்ட பயன்தரு பனைமரங்கள் நாசமாகின என்றும், விஷமிகளின் செயலே இந்த தீ விபத்துக்குக் காரணம் எனவும்அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (த)


**பழைய மாணவர் சங்கம்**
**யா/மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பழை**

**பொதுக்கூட்டம் 2015**

காலம் :- 05.07.2015
நேரம் :- காலை 10 மணி
இடம் :- துரையப்பாபிள்ளை மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

- இறைவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- புதிய நிர்வாகக்குழு தெரிவு
- வேறு விடயங்கள்

• பிரேரணைகள் இருப்பின் 28.06.2015இற்கு முன்பதாக செயலாளர், பழைய மாணவர் சங்கம், மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

• ஆயுட்கால அங்கத்தவர்கள், அங்கத்துவம் பெற்றுக்கொள்ளாதவர்கள் 021 321 4004 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு தங்களின் ஆயுட்கால அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இணைச்செயலாளர்கள்
சி.சிவகரன்
இ.பிரதாபசர்மா

தலைவர்
ம.மணிசேகரன் (அதிபர்)
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை



**TRADE FINANCE & INVESTMENTS PLC**
(Licenced by the Monetary Board of the Central Bank of Sri Lanka Under the Finance Business Act.No.42 of 2011)
No. 459, Union Place, Colombo 02
Telephone: 2688421/2688422/2698818 Fax : 2699226 e-mail : tradefi@sltnet.lk

**பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு**

| MODEL | REG.NO | CHASIS NO |
|---|---|---|
| DISCOVER 125 | NP BAH-3750 | MD2A15BZ6DWA49228 |
| PLEASURE | NP BAK-8179 | MBLJF16EFDGCO4243 |
| SPLENDER NXG | NP BAH-9903 | MBLHA12ESC9L00587 |
| XL-R 125 | NP BAG-6578 | LTMJD2193D5102763 |
| PASSION PRO | NP BAQ-7305 | MBLHA10AXDGK03897 |
| CBZX-TREME | NP XA-6085 | MBLKC12EEBGJ02286 |
| DISCOVER | NP BBK-6690 | MD2A57AZXEWE41227 |
| ROAD MATE | NP QY-3949 | LSRHCKL11B1300097 |
| PLEASURE | NP BBN-5616 | MBLJF16EHEGC04093 |
| ROAD MATE | NP QY-3830 | LSRHCKL11A1C00308 |
| DISCOVER 125 | NP XE-9816 | MD2DSJZZZUWE82168 |
| HARVESTER | | DF11070235DF |

**ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வேஸ்ட்மென்ற்**
பி.எல்.சி, A9 வீதி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சிக் கிளையில் பார்வையிடலாம்.
நிபந்தனைக்குட்பட்டது.

மேலதிக விவரங்களுக்கு:
021 228 0110, 021-228 0108
077 166 1648, 077-109 2236


## மரண அறிவித்தல்

### குமாரசாமி தில்லைநாதன்

(முன்னாள் ஊழியர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தில்லைநாதன் 17.06.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் (ராசம்மா) பாசமிகு கணவரும், ரஜனி (லண்டன்), ரமணன் (லண்டன்), றஜிதா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றூபதாஸ் (லண்டன்), சுதர்சினி (லண்டன்), விஜயபாலா (நோர்வே) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் சகலனும், கந்தவனம், சண்முகலிங்கம், பாக்கியலட்சுமி, வசந்தகுமார், பாஸ்கரன், கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும், உதயகுமாரி (கிளி), கமலாதேவி ஆகியோரின் மாமனும், ராசாத்தி, தயாநிதி, இரட்ணசேகரம், செல்வராணி, கலாராணி ரஜனி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், நிக்ஷி, கபின், டிவிசன், விதுஸ், பவிஷ்னா, சலோஜன், சஜினா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

77, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (61081)(10.6.3)

தகவல்:
மனைவி 021 221 6411
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி கந்தையா



ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கந்தையா நேற்று (18.06.2015) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.


அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், வைரமுத்து-சோதி தம்பதியரின் அன்பு மகளும், இளையவன்-செல்வி தம்பதியரின் பாசமிகு மருமகளும், குணவதி, நாகராஜா, பகவதி, சறோசா, வசந்தா, தம்பித்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரசீதரன், ரசீதா, அனுஜா ஆகியோரின் பாசமிகு தாயும், சுதர்மி, சடாச்சரலிங்கம், அன்பழகன் ஆகியோரின் அன்பு மாமியும், ராகுல், சேயோன், மைத்ரி, கிஜானி, அபிநயன், அதிசயன், அஸ்விக்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2015) முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கௌடுது இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். (61098)(10.6.1)

தகவல்: குடும்பத்தினர்.

### சுப்பையா தவராஜா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தவராஜா நேற்று (18.06.2015) வியாழக்கிழமை மலேசியாவில் இறைவனடிசேர்ந் தார்.

அன்னார் காலம்சென்றவர்களான சுப்பையா-தையல் நாயகி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு -செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் திருமதி தவமணியின் பாசமிகு கணவரும் மனோகரன் (சிங்கப்பூர்), மகேந்திரன்(மலேசியா), கீதா (மலேசியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் விக்கி, மலர், முரளி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்ஷினி, தேவா ணன், சஞ்சீவ், யோகராணி, அஸ்வினி, விஸ்வராஜா ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி நாகம்மா காலஞ்சென்றவர்களான பத்மாவதி, செல்வவதி, இராகவதி மற்றும் திருமதிசரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியாவில் இன்று (19.06.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை

தகவல் :-
திருமதி சரஸ்வதி பரமசிவம்
(சகோதரி)

### செல்வரத்தினம் சந்துருச்செல்வன்



யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோ நகரை (மார்க்கம்) வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சந்துருச் செல்வன் 17.06. 2015 புதன்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் செல்வரத்தினம் (வலிகிழக்குப் பிரதேசசபை உறுப்பினர், J.P)-விஜயலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வனும், இரட்ணகுபேரன்-யோகேஸ்வரி (கனடா) தம்பதியரின் மருமகனும், வதனமதியின் அன்புக் கணவரும், ஹரீஷ், ஜீவிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்துருச் செல்வி, தயானந்தன் (ஜெயப்பிரியா நகை மாடம், யாழ்ப்பாணம்), தயாநிதி (ஆசிரியை, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), அனுசியா (கூட்டுறவு கிராமிய வங்கி, கோப்பாய்), கயல்விழி (அபிவிருத்தி உத்தி யோகத்தர், நல்லூர் பிரதேச சபை), அருணா (கனடா), சுவர்ணா (குடும்பநல உத்தியோகத்தர்-சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வாண்மதி (கனடா), வளர்மதி (சுவிஸ்), மதனமோகன், இந்துமதி, வந்துறு காந்தன், மதனராஜா (யாவரும் கனடா), புவனேந்திரராசா, திலகேசன் (CTB கோண்டாவில்), சிவகுமார் (DDO பிரதேச செயலகம், கோப்பாய்), விஜியகுமார், எழில்தாஸ் (கனடா), டினேஸ் குமார் (சக்தி ஜூவெல்லறி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 021 2230954, (யாழ்ப்பாணம்)
0019056426949
வதனமதி (கனடா)

3ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
கட்டப்பிராய். (16323)(10.6.1)

### சின்னப்பொடியன் வல்லிபுரம்



வங்களாவடி மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் வல்லிபுரம் நேற்று (18.06.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன், சின்னாச்சி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சோமு-தங்கச்சி அம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பவளத்தின் கணவரும் மாணிக்கம் , சின்னாச்சி, சரவணை, சரஸ்வதி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் மனோரஞ்சிதமலர், தவமலர் (சுவிஸ்), விஜயானந்தன், ஜெயானந்தன், சிவானந்தன்(பிரதேச சபை கொடிகாமம்), ஸ்ரீமதி(ஆசிரியை நுணாவில் சரஸ்வதி வித்தியாலயம்), உமாபதி(அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம், பாலசுந்தரம்(சுவிஸ்) சசிகலா, தயானந்தி, சொர்ணமலர்(பிரதேச செயலகம் சாவகச்சேரி), ஞானச்சந்திரன் (அஞ்சல் அலுவலகம் அச்சுவேலி), சுந்தரவடிவேல் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் தனுகீர்த்தனா, தனுப்பிரியா, சுகுணரூபி, கெவின்(சுவிஸ்), கஸ்தூரி(சுவிஸ்), அபர்ணன், அபர்ணவி, அஜந்தி, தர்சிக்கா, துலக்ஷிகா, அஜேந்திரன், பவித்திரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- 077 625 7492
(விஜயானந்தன்) (c 16316)

தகவல் :-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை- பளை
## புலோப்பளை உப அலுவலக பொதுச்சந்தை, ஆட்டிறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2015

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்காணும், இறைச்சிக்கடைகள்,பொதுச் சந்தைகள் 01.07.2015 தொடக்கம் 31.12.2015 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 19.06.2015 முதல் 26.06.2015 பிற்பகல் 4.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 29.06.2015 காலை 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 29.06.2015 பி.பகல் 1.30 மணி

**நிபந்தனைகள்**

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசபை, பளை என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2015.06.29 ஆம் திகதி மு.பகல் 10.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் தமது தே.அ.அட்டை/ செல்லுபடியான கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதி, கோரிக்கைக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள் ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
5. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதி நிதியோ சமுகமளிக்கலாம்.
6. கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
7. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் கேள்வித்தொகை 300,000.00 ரூபாவுக்குட்பட்ட தொகையாயின் கேள்வித் தொகையின் 1/2 பகுதியையும் 300,000.00இற்கு மேற்பட்ட தொகையாயின் **1/3 பகுதியையும் கேள்வி திறக்கப்படும் திகதியில் செலுத்தி** சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | புலோப்பளை உபஅலுவலகம் | | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை (ஆறுமாத காலம்) | 15000.00 | 1500.00 | 1000.00 |
| 02 | பொதுச்சந்தை (ஆறுமாத காலம்) மீன்சந்தை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் உட்பட | 430,000.00 | 20,000.00 | 1000.00 |

ப. ரிஷிதாசன்
உப தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

திகதி:- 19.06.2015

(C1637)(10.6.1)

## சரத் பொன்சேகாவின் ரிட் மனுவும் தள்ளுபடி

கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதி தனக்குப் பொதுமன்னிப்பு வழங்கியதால், தனக்குரிய நாடாளுமன்ற ஆசனத்தை வழங்குமாறு கோரியும், நாடாளுமன்றச் செயலாளருக்கு அது தொடர்பில் உத்தரவொன்றைப் பிறக்குமாறு கோரியும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்துள்ளது.

அப்படியான உத்தரவொன்றை விடுக்கத் தேர்தல் சட்டத்திலோ அல்லது வேறு சட்டங்களிலோ வாய்ப்புகள் இல்லை என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட சரத் பொன்சேகா 90 ஆயிரம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து இராணுவ நீதிமன்றத்தினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்தும் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோனது.

இதேவேளை, சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஜயந்த கெட்டகொட வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (த)


**சேவை**

எலும்பு முறிவு நெரிவு (Orthopeadic) கிளினிக் வழமைபோல் நடைபெறு கின்றது .
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
08,இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 873 0129

**குத்தகைக்கு காணி தேவை**

காளான் வளர்ப்பு மற்றும் பண்ணை முயற்சியினை மேற்கொள்ள வீட்டுடன் கூடிய காணி (சுன்னாகம், கோப்பாய், புன்னாலைக் கட்டுவன்) பிரதேசங்களில் தேவை.
தொடர்புகளுக்கு: 0779831636 (61090)(10.6.1)

**தேவை**

யாழ். நகருக்குச் சமீபமாக, ஆறு பேர்கொண்ட குடும்பத்துக்கு கார் தரிப்பிட வசதியுடன் குறைந்தது மூன்று அறையாவது கொண்ட வீடு வாடகைக்கு வேண்டும். கொக்குவில் கொக்குவில் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
0776848399, 0213002147 (61087)(10.6.1)

எமது வாடிக்கையாளர்களுக்கு கடந்த 35 வருட அனுபவத்தின் பாதையில் புதிய அம்சங்கள் சிறந்த சேவைகள் வழங்கும் உங்கள் நம்பிக்கையான

# ROYAL SERVICE STATION



அதி நவீன முறையில்
- Wheel Alignment
- Wheel Balance
- Tire changing / Fitting
- Nitro gas System ($N_2$)
- Interior cleaning



உள்ளடங்கிய தொழில் நுட்பத்துடன் கூடிய சேவைகள் 01.06.2015 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

01 One vehicle service one wheel alignment free (நிபந்தனைக்கு உட்பட்டது)
02 விசேட தேர்ச்சி பெற்ற 28 வருட அனுபவம் வாய்ந்த Wheel mastert auto Tech தொழில் நுட்பவியலாளரால் / பயிற்சியாளர் Wheel Alignment பார்த்துக் கொடுக்கப்படும்.
03 அத்துடன் TATA, DIMO, FOTON, United motors, Mitsubishi (Fuso) வடமாகாண ஏக முகவர் அனுமதியை பெற்றிருக்கின்றது என்பதை பெருமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அனைத்து சகல வாகனங்களின் தரமான உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
TATA, Dimo, Maruti, Suzuki, Toyota, Fuso, Genune parts,
SAI RAAM MOTORS No-2, K.K.S. Road, Chunnakam
021 224 1503

Royal Service Station
K.K.S. Road, Chunnakam, Jaffna.
Time 7 am - 7.30p.m

பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்: 021 224 1090, 077 601 3568



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல் மாகாண முதல்வரின் பதவி பறி போகும் ஆபத்து?

கொழும்பு, ஜூன் 19

மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாகவே ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட மைத்திரி அணியினர் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி விட்டு, மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அந்த பதவிக்குக் கொண்டு வரும் சதித்திட்டம் ஒன்றை மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கொண்டு வருகிறார்.

இது சம்பந்தமாக அவர் பல்வேறு தரப்பினருடன் சுமார் மூன்று பேச்சுக்களை நடத்தியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிய கிடைத்துள்ளதாகப் பேசப்படுகிறது.

இதனடிப்படையில், அவருக்கு எதிராக துரிதமான ஒழுக்காற்று விசாரணை நடத்தக் கட்சி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரசன்ன ரணதுங்க, அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

## 41ஆம் நாள் நினைவுத் திருப்பலி

தோற்றம்
05.10.1984



மறைவு
11.05.2015



**யோன் மரியசீலன் ஜெஸ்டின் பீலிக்ஸ் (றேகன்)**

11.05.2015 அன்று அகாலமரணமடைந்து இறைவனடி சேர்ந்த யோன் மரியசீலன் ஜெஸ்டின் பீலிக்ஸ் (றேகன்) அவர்களின் நினைவுத்திருப்பலி நாளை (20.06.2015) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட உள்ளது. அத்திருப்பலியிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வலைப்பாடு,
வேரவில், பூநகரி.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தில் கடமையாற்றும் வல்லிபுரம் சிவானந்தம் அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னப்பொடியன் வல்லிபுரம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி பிரதேச சபை
ஊழியர் நலன்புரி சங்கம்.

(C/16321) (19.6.1)

Sri Lankan – German Development Cooperation

Vocational Training in the North and East of Sri Lanka (VTN)

## Vacancies for English teachers

The German International Cooperation (GIZ) supports vocational training in Sri Lanka. In order to improve training capacities at the National Vocational Qualification (NVQ) levels 1-4 and enable candidates from the region to obtain the required entrance qualification for further training, existing vocational training providers in the Northern and Eastern Province are promoted. To fulfil the requirements of the private sector and to permit the trainees to be further educated, English is an essential requirement. Therefore the VTN Project invites qualified candidates to apply as,

**ENGLISH TEACHERS for the VOCATIONAL TRAINING SECTOR**

English teachers are needed for all districts of the Northern and Eastern Provinces. Suitable applicants will get the possibility to receive a job in vocational training centres of Vocational Training Authority (VTA) and National Apprentice and Industrial Training Authority (NAITA) of Sri Lanka. To apply, the following requirements are demanded:

- Your English knowledge must be very good in speaking, reading and writing. You should have full operational command in English, and should be able to handle complex detailed argumentation.
- You must have experience or a background in teaching. You have practical experience in teaching groups in e.g. schools or universities or you have studied teaching.
- Women are given priority.

The required qualifications are:

- Bachelor's Degree (English / English Literature) CELTA or equivalent preferred. OR,
- ESOL (English for Speakers of other Languages) Trinity College London OR,
- Any other Diploma in English/ English Teaching, equivalent to the above OR,
- Very Good User in English - 7 according to scale International English Language Testing System (IELTS) OR,
- Retired, trained English teachers of Government schools or Teachers of registered schools of the Ministry of Education

If you fulfil the requirements, send us an envelope with the following documents all in English:

1. Application including the description of your English teaching experience. Please mention also where you live and whether you plan to move.
2. Curriculum Vitae
3. Copies of all relevant certificates.

*Please send your application to:*

Dr. Siddhika Senarathne,
Director - Planning, Research & Development,
VTA, Nipunatha Piyasa,
354/2, Elvitigala Mw., Colombo 05

**The deadline for the applications is June 28th**

Suitable applicants will be invited for a job interview.

National Apprentice and Industrial Training Authority · Vocational Training Authority · KFW · giz

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 12.06.1947 மறைவு: 20.05.2015

அமரர் செல்வி
**கந்தையா தனபாக்கியவதி**
(தனம் ரீச்சர்)

திதி : திருதியை

அன்பு வழியில் அரவணைத்து எமைக்காத்து
ஆருயிராய் நேசித்து ஒன்றிணைந்து
இன்பமிகு ஆசிரியத்துவம் பணிபுரிந்து
ஈடேற்றிப் பல சமூக செயல் புரிந்து - இன்று
பரிதவிக்க எமைவிட்டு சிவலோகம் சென்றதேனோ?
தடம் பதித்த இடமெல்லாம் பார்த்து மனம் ஏங்கிநிற்க
கண் பார்த்த இடமெல்லாம் உந்தன் அழகு வதனம் தெரிய
கானல் நீராய் எம்மையெல்லாம் கலங்க வைத்து
விண்ணுலகம் சென்றதேனோ? ராசாத்தி
தேற்றுவார் யாருமின்றி தேம்பி அழுகின்றோம்
தேடுகின்றோம் ஈரவிழிகளினால்
உங்கள் முகம் காணவில்லை
நாள்கள் பல ஓடி மறைந்தாலும் - எம் நெஞ்சில்
நிலைத்திருக்கும் உங்கள் பாசம்

குறிப்பு: இன்று (19.06.2015) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீளாத்துயருடன்...

[illegible] வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(61089) (10.6.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்சிப்

விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், வடக்கு முதலமைச்சர், அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளோடு கலந்தாலோசித்து இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இறுதியாக வடக்கு மாகாண சபையினால், சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட விசாரணைக் குழு இதற்காக அமைக்கப்பட்டிருந்தது. உறுப்பினர்களின் குறித்த விசாரணைக் குழு தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றது. இந்த நிலையில், வடக்கு மாகாணப் பிரதம செயலாளரினால் தற்போது நிபுணத்துவ நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற கணக்காளர், ஓய்வுபெற்ற கணக்காய்வாளர், ஓய்வுபெற்ற சிவில் பொறியியலாளர் ஆகியோரைக் கொண்ட குழுவே தற்போது விசாரணைகளுக்காக நியமிக்க பட்டுள்ளது. இந்தக் குழுவினர் தற்போது, நெல்சிப் திட்டத்தின் கணக்காய் வுகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-5)

## மாணவி

கப்பட்ட – அவர்கள் மீது அநீதியான வகையில் கொடூரமான விதத்தில், தென்னிலங்கை ஆட்சியாளர்களால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டு, இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் மீது 37 ஆண்டுகளுக்கு மேலாக ஏவிவிடப்பட்டிருக்கும் – பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு இந்த வழக்கில் கையில் எடுப்பதைப் பார்த்திருப்பதா? என்ற கேள்வி நம் மத்தியில் எழுந்திருக் கின்றது.

இந்தச் சட்டத்தை இந்த விடயத்தில் அரசு கையில் எடுப்பதைப் பார்த்திருப்பது – அனுமதித்து வாளாவிருப்பது – எதிர்காலத்தில் பல தவறான விடயங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முன்மாதிரியாக இது மாறிவிடும் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

அத்தோடு கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக தமிழர்கள் மீது கோரமான – கொடூரமான – மனிதாபிமானமற்ற – வகையிலும், நீதியின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மாறாகவும் ஏவி விடப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தமிழ்ச் சமூகம் இன்று ஏற்று, அங்கீகரிப்பதாகவும் இந்த மௌனம் அர்த்தப்படுத்தி விடக்கூடும்.

புலன் விசாரணைகள் பூர்த்தியாகாத விடயத்தில் விசேட ஏற்பாடுகளின் கீழ் சந்தேக நபர்களை பொலிஸார் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரிக்கும் விசேட உத்தரவுகளை நீதிமன்றங்கள் வழங்க முடியும். அதற்குச் சாதாரண சட்டத்தில் இடமுண்டு. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம்தான் அதனை முன்னெடுக்க வேண்டும் என்பதல்ல.

தென்னிலங்கையை ஆட்டிப்படைக்கும் 'பாதாள உலகத்தின்' நடவடிக்கைகளைப் பயங்கரவா தச் சட்டம் மூலம் கையாள முன்வராத நிலையில் இந்த விடயத்தில் மட்டும் அதனை அரசு கையில் எடுப்பது அரசியல் ரீதியில் நமக்கு ஒலிக்கப்படும் அபாயச் சங்காகும்.

கொக்கரிக்கும் பேரினவாதக் கும்பல்களை அடக்கவும், சிறுபான்மையினரின் மதங்களையும் மத நம்பிக்கைகளையும் கேவலப்ப டுத்தி, சிறுமைப்படுத்தும் திட்டமிடப்பட்ட மேலாதிக்க நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்கவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நாடாத அரசு, வடக்கில் நடந்த இந்தச் சம்பவத்துக்கு மட்டும் இந்த வகையில் நடந்து கொள்வது பலத்த சந்தேகத்தை தருவதாகவும் இருக்கின்றது.

வெறுமனே, சட்ட முரணான – சமூகப் பிறழ்வான – அநீதி மற்றும் அநாகரிகச் செயலாக – மட்டும் புங்குடுதீவு மாணவி வித்தியா மீதான வன்புணர்வு மற்றும் படுகொலைக் கொடூரத்தையும் அது தொடர்பான வழக்கு விசாரணையும் நோக்குவதுடன் நாம் நின்று விட முடியாது. அதற்கு அப்பாலும் இவ்வழக்கின் விசாரணைப் போக்கில் தொடர்புபட்டுள்ள நீதி, நியாயம், சமூகப் பார்வை, அரசியல் பரிமாணம் ஆகியவற்றையும் நாம் நோக்க வேண்டும்.

எனவே, இந்த வழக்கின் விடயத்தில், சம்பந்தப்பட்டுள்ள சட்டப் போக்குக் குறித்து தமிழர்களின் அரசியல் தலைமை நுணுக்கமாக நோக்கி, கூடி ஆராய்ந்து, சில வெளிப் படுத்தல்களை செய்ய வேண்டிய தேவை எழுந்திருப்பதாக நாம் கருதுகிறோம் – என்று உள்ளது. (5)

## சர்ச்சைக்குரிய

தெரி வித்திருந்த நிலையில், முதலமைச்சர் மாவை.சேனாதி ராசாவுக்கு அனுப்பிய கடிதத் தின் பிரதியை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் முத லமைச்சர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா 11 ஆம் திகதி அனுப்பிய கடி தத்தை, 17 ஆம் திகதியே தான் பார்த் தாகவும், அந்தக் கடிதத்தின் எழுத்துரு தன்னால் வாசிக்க முடியாமல் இருந் ததால், கடிதத்தை அனுப்பிய வருக்கே திருப்பி அனுப்பிய தாக வும் முதலமைச்சர் குறிப்பிட்டுள் ளார்.

இணையத் தளங்களில் வெளி வந்த செய்திகளுக்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு தனக்கு இல்லை என்று குறிப்பிடும் முதலமைச்சர், ஆனால் ஜனாதிபதியிடம் தான் தெரிவித்த முறைப்பாடு தொடர்பில் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு தனக்கு இருப்பதாகவும் கூறினார்.

'எமது மக்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளும் விடயங்களையே, நம்பிக்கையானவையாகத் தென்பட்டால் நாம் மக்கள் நலம் கருதி வெளியிடுகின்றோம். அவற்றோடு சம்பந்தப்பட்டவர்கள் பிழையேதும் செய்யவில்லை என்று நினைத்தால் அதைப் பகிரங்கமாகக் கூறலாம்' என்று குறிப்பிட்ட முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'நிதி ஒதுக்கீட்டினையும் கேட்டிருந்தோம். அந்த நிதி ஒதுக்கீடுகள் மீள் குடியேற்ற அமைச்சினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்றிட்டங்களைக் கொடுத்தார்களா? வாகனங்களைப் பெற்றார்களா? என்பதை அந்தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையே கேட்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தார்' என்ற சுரேஷ் பிரேமச்சந்திரனின் கருத்துக்களை எடுகோள் காட்டியுள்ள முதலமைச்சர், தான் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் வகையிலேயே அவரின் கருத்துக்கள் இருந்ததைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வப் பேச்சாளரது பத்திரிகையாளர் சந்திப்பின் மூலமான ஆதாரங்களுக்கு மேலதிகமான ஆதாரங்கள் எதனையும் என்னிடம் பெறவேண்டிய தேவை இருக்காது. வடக்கு மாகாண சபையைப் புறக்கணித்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்ட தென்பதையும் பணம் தென்னிலங்கையில் இருந்தே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை' என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தும் சபையாக வடக்கு மாகாண சபை அலுவலர்கள் இருந்து வரும் நிலையில், மாகாண சபையுடன் கலந்தாலோசிக்காமல் திட்டங்களை செயற்படுத்துவது ஒரே விடயம் சம்பந்தமாக இரட்டையான நடைமுறைப்படுத்தலுக்கு இடமளிக்கும் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுரேஷ் பிரேமச்சந்திரனைப் போல் தமது நிலைப்பாட்டை மக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் முதலமைச்சர்.

'தமிழ்த் தேசியத்துக்காக உழைக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை உணர்வும் அர்ப்பணிப்புத் தன்மையும் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாமல் என்றும் நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்' என்று குறிப்பிட்டு தனது கடிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவுக்கு அனுப்பி வைத்துள்ளார். (த-5)

## 12 வயது

கரணங்கள், போதையூட்டி என் பனவும் பொலிஸாரால் நேற் றுக் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் 12 வயது மாணவர்கள் 4 பேருக்கு, 'மாவா' பாக்கு பக்கெட்டுக்கள் பாடசாலைக்கு அயலிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவர்களிடம் சந்தேகத்துக்கு இடமான பாக்குப் பக்கெட்டுக்கள் இருப்பதை அவதானித்த ஆசிரியர் அதிபர் ஊடாக, மாவட்ட செயலகத்துக்கும், பொலிஸாருக்கும் தெரியப்படுத் தியுள்ளார்.

இதன் பின்னர், பொலிஸாரும் – மாவட்ட செயலக அதி காரிகளும் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். பொலி ஸாருக்கு இதன்போது கிடைக் கப்பெற்ற தகவல்களின் அடிப் படையில் தேடுதல் வேட்டையில் இறங்கினர். குறித்த 12 வயது [illegible] சந்தேகத் தின் பேரில் பாடசாலையின் அயற் சுற்றாடலிலிருந்து இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இரண்டு பேரிடமும் பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையைத் தொடர்ந்து, பாடசாலை மாணவர்களுக்குப் போதையூட்டிய 'மாவா' பாக்குகளைத் தயாரித்து விநியோகிக்கும் நபர் ஒருவரை அவர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். இதனடிப்படையில் பொலிஸார் குறித்த நபரைத் தேடுதல் நடத்திக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிடமிருந்து, பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப் பொருள் மற்றும் அதனை கலப்பதற்குரிய உபகரணங்கள் என்பன உள்ளிட்ட பொருள்கள் குறித்த சந்தேக நபரிடமிருந்து பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளன. (த-5)

## வீடு

இவ்வாறு மக் களால் வழங்கப் பட்ட ஆணை மீறப்படுமானால் ஆட் சியாளர்கள் வீட்டுக்குச் செல் லத் தயா ராக வேண்டும்.

இவ்வாறு கூட்டரசுக்கு நேற்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத் தது ஜே.வி.பி.

ஜனாதிபதித்தேர்தலின்போது மைத்திரி கூட்டணிக்கு ஜே.வி.பி. மறைமுக ஆதரவைத்தெரிவித்திருந்தது. அத்துடன், மைத்திரி அமைத்த தேசிய நிறை வேற்றுச் சபையிலும் ஜே.வி.பி. அங்கம் வகித்தது.

இந்நிலையில்,புதிய அரசுக்கு எதிராக ஜே.வி.பி. நடத்திய முதல் போராட்டமாக இது அமைவதுடன்,தென்னிலங்கை அரசியல் களத்தில் ஒரு புதிய திருப்பமாக கருதப்படுகிறது.

மக்கள் ஆணைக்கு மதிப்பளி' என்ற தொனிப்பொருளியல் ஜே.வி.பியால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் கொழும்பு புகையிரத நிலையத் துக்கு முன்னால் நடைபெற்றது.

இதற்கு முன்னதாக பொரளை யிலிருந்து கோட்டைவரை ஆர்ப்பாட்டப் பேரணியையும் ஜே.வி.பி. நடத்தியது. இதில் ஜே.வி.பிக்கு சார்பான தொழிற்சங்கங்களும் சிவில் அமைப்புகளும் ஆதரவாளர்களும் என பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தனர். இதன் போதே ஜே.வி.பி. உறுப்பினர்கள் அரசுக்கு மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தனர்.

சுயாதீன ஆணைக்குழுக்களை உடன் அமைக்கவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க கோவையை கொண் டுவரவும், தகவல் அறியும் சட்ட வரைவு உடன் அவசியம், தனியார் துறையினருக்கு வழங்கப்படும் என்று கூறிய 2500 ரூபா சம்பள விடயம் என்ன நடந்தது, விவசாயி களுக்கு நிவாரணம் தேவை, மக்களாணையின்றி இயங்கும் நாடாளுமன்றத்தை உடன் கலைக் கவும் என்பது உட்பட மேலும் பல கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர் கள் எழுப்பியிருந்தனர். (த)

## மஹிந்தவுக்கு

தேர்தலில் பிரதமர் வேட்பாளராக நிறுத்த மைத்திரிபால பச்சைக் கொடி காட்டியுள்ளதாக ஊடகங்களில் ஏற்கனவே செய்திகள் வெளிவந்திருந்த நிலையிலேயே, அமைச்சரவைப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## கட்டுப்பாடிழந்தது

ஆவரங்கால் பகுதி ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந் தபோதே இந்த விபத்து நடந் துள்ளதுவல்லைச் சந்தியில் இராணுவ முகாமுக்கு முன்பாக உள்ள வளைவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்துக்குள்ளான மூன்று இளைஞர்களும் தொண்டமானாறு கெருடாவில் பகுதியைச் சேர்ந்தவர்கள். மூவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மேலும் இரு மோட்டார் சைக்கிள்களும் பயணித் துள்ளன.

வீதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த வீதி வளைவை அவதானிக்காத மோட்டார் சைக்கிள் ஓட்டி அதனைக் கட்டுப்ப டுத்த முடியாமல் வீதியருகே காணப்பட்ட பூச்சாடியை மோதித் தள்ளினார். மூவரும் மோட்டார் சைக்கிளுடன் வீதியைவிட்டு விலகிப் பள்ளத்தில் விழுந்துள்ளனர்.

இவர்களில் மோட்டார் சைக் கிளை ஓட்டி வந்த வேதநாயகம் சிவரூபன் (வயது–26) நெஞ்சு மற்றும் கால் பகுதியில் காயங்களுக்கு உள்ளாகி மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளின் நடுவில் இருந்து பயணித்த செந்தில்வேல் திவாகர் (வயது–18) தலைப்பகுதி மற்றும் வயிற்றுப் பகுதியில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளமை தெரியவந்தது. வீதியோரத்தில் பள்ளத்தில் தறித்து விழுத்தப்பட்டிருந்த பனங் குற்றியுடன் இவரது வயிற்றுப் பகுதி மோதுண்டதுடன் பனங்குற்றியில் காணப்பட்ட மட்டை வயிற்றுப் பகுதியில் ஆழமாகக் குத்தியிருந்ததாகக் கூறப்பட்டது.

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த அருந்தவராசா அனோஜன் (வயது–15) தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவர்களுக்குப் பின்னால் மோட்டார் சைக்கிள்களில் வந்த நண்பர்கள் இவர்களை மீட்டு மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்

உயிரிழந்தவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் உடற்கூற்றுப் பிரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-ரி-109)

## வாகன

வழங்கப் பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் யாழ். மாவட்டத்தின் சிவில் நிர்வாகத்தை அரசு பொறுப்பேற்ற போதும் வாகனங்களின் வேகக் கட்டுப்பட்டை அறியும் கருவி இன்றியே யாழ். பொலிஸார் கடமைகளை மேற்கொண்டனர்.நேற்றுப் புதன் கிழமை முதல் போக்குவரத்துப் பொலிஸார் வேகக்கட்டுப்பாட்டை அறியும் கருவியுடன் பிரதான வீதிகளில் தமது கடமைகளை மேற் கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

பிரதான வீதிகளில் வாகனச் சாரதிகள் எந்த வகையான கட்டுப் பாடுகளும் இன்றித் தாம் நினைத் தவாறு வேகமாக வாகனங்களைச் செலுத்துவதும், இதனால் விபத்துக் கள் ஏற்பட்டுப் பொது மக்கள் கடுமையாகப் பாதிப்படைவதும் அதிகரித்து வந்தது.

குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் வேக கட்டுப் பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் யாழ்ப் பாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்திருந்தன. இந் நிலையில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி போக்குவரத்துப் பொலிஸாருக்குப் பொலிஸ் திணைக் களத் தினால் வழங்கப்பட்டுள்ளது. நேற்று முதல் இந்தக் கருவி பயன் படுத்தப்பட்டு வருகின்றது. (த-86)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



பதுளை பல்கலைக்கழகத்தில்
இன்று (19.06.2015) நடைபெறும்
5ஆவது பட்டமளிப்பு விழாவில்
B,Tech (Mechatronics) பட்டம் பெறும்
செல்வன்
வடிவேல் ஹிரோசான்
அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள்
பெற்று சீரும் சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.
பாராட்டி வாழ்த்துவோர்:
அப்பம்மா, சித்தப்பா குடும்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுக்கு எதிரான பிரேரணை குறித்து அடுத்த வாரம் முடிவு

கொழும்பு, ஜூன் 19

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்கான திகதி எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஜூலை மாதம் மூன்றாம் வாரத்துக்கு முன்னதாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு தாம் அழுத்தம் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.


கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:–

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்த மாதம் 6ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 7ஆம் திகதி தான் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும். ஆனால், 6ஆம் திகதியை விசேட தினமாகக் கோரி, காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை விவாதம் நடத்தி, வாக்கெடுப்பை நடத்த இணக்கம் ஏற்படுத்தியுள்ளோம்.

அதுபோல பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் திகதி அடுத்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் – என்றார். (த)

# 20 க்கு ஐ.தே.க முட்டுக்கட்டையா?

## ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் விக்கிரமபாகு



கொழும்பு, ஜூன் 19

20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் எதிரானவர்கள் என்பது வேடிக்கையான விடயம். இந்தக் குற்றச் சாட்டை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஐ.தே.க. தொடர்பில் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்திருக்கும் கருத்து வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

–இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்து வோம் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றமுடியாமல் முட்டுக்கட்டை போடுவது ஐக்கிய தேசியக் கட்சியினர் எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் செய்வார்களேயானால் எதற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் 20ஆவது திருத்தச் சட்ட அங்கீகாரத்தை வெளியிடுகின்றனர்.

இந்த அரசை நடத்திச் செல்வதற்கு ரணில் தடையாக இருந்தால் அவரை மாற்றிவிட்டுப் புதிய பிரதமரின் கீழ் அரசொன்றை அமைப்போம் என அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளார். இந்தக் கருத்தைக் கடுமையாக நாம் எதிர்க்கின்றோம். மதத் தலைவர்கள் இவ்வாறு தெரிவிக்கின்றமையானது நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. எனவே, அவர் இவ்வாறு தெரிவிப்பதை நிறுத்தவேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவின் கொள்ளைக்காரர்கள் நிறைந்துள்ள நாடாளுமன்றம் காரணமாக ஜனநாயகத்துக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. இது தொடருமானால் மீண்டும் ஊழல்கள் தலைவிரித்தாடும். எனவே, உடனடியாக நாடாளுமன் றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

அண்மைய நாள்களாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்தப்போவதாக ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர். அதற்கு ஆறு பேர் கொண்ட குழுவையும் நியமித்துள்ளனர். இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் தலை சாய்க்கக்கூடாது.

சர்வாதிகார ஆட்சியில் காணப்பட்ட இலங்கையை மீட்டு ஜனநாயகப் பாதைக்கு வித்திட்டுள்ளோம். எனவே, மீண்டும் மஹிந்தவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைத்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் முயற்சி நடைபெறுமானால் அது ஜனநாயகத்துக்கும், மக்களாட்சிக்கு விளைவிக்கும் பாரிய அநீதியாகும் – என்றார். (த)

## புறொய்லர் கோழி போன்று 100 நாள் திட்டம் காலாவதி

### சுதந்திரக் கட்சி கூறுகின்றது



கொழும்பு, ஜூன் 19

முறையற்ற வெளியுறவுக் கொள்கையின் காரணமாக சீனாவைப் பகைத்துக்கொண்டு செயற்படுவதனாலேயே நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட ஏனைய அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன எனத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, புறொய்லர் கோழி போன்று 100 நாள் அரசு காலா வதியாகிவிட்டது. ஆட்சியை எம்மிடம் கையளியுங்கள். ஒரு மாதத்திற்குள் அனைத்தையும் மீளக் கட்டியெழுப்பி மாற்றிக் காட்டுவோம் என்றும் ஐ.தே.கவுக்கு சவால் விடுத்தது.

கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்து சவால் விடுத்தது.

இதன்போது கருத்து வெளியிட்ட கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா,

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் 2016 ஏப்ரல் மாதம் வரை உள்ளது. இந்நிலையில், நாடாளுமன்றம் காலாவதியாகிவிட்டது என ஐ.தே.கவின் லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகின்றார். காலாவதியான பொருள் உள்ளது. ஆனால், காலாவதியான நாடாளுமன் றம் இல்லை. ஐ.தே.க.தான் காலாவதியாகிவிட்டது. காலாவதியான பொருள் ஒன்று தற்போது இருக்கின்றது. 100 நாள் அரசு என்பது புறொய்லர் கோழி போன்றது. காலாவதியாகிவிட்டது.

தற்போது நாட்டின் அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்து விட்டன. சுற்றுலாத்துறை, சந்தை, ஏற்றுமதி, கிராம பொருளாதாரம், பெருந்தோட்டத்துறை என்பன முழுமையாக வீழ்ச்சியடைந்து விட்டன.

உலகில் நிலையான பொருளாதார வளத்தைக் கொண்ட நாடாகச் சீனா தற்போது இருக்கின்றது. எமது நாட்டுக்குச் சீனாவிலிருந்துதான் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர். ஆனால், சீனாவுடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட இந்த அரசால் முடியவில்லை. சீனாவைத் தூரமாக்கி வைத்துள்ளது. சீனாவால்தான் ஏனைய நாடுகளுக்குப் பொருளாதார ரீதியில் உதவ முடியும். சீனாவை ஒதுக்கிவைத்து விட்டுச் செயற்படுவோமேயானால், எமது பொருளாதாரம் வீழ்ச்சியடையும். இந்த அரசிடம் சரியான வெளிவிவகாரக் கொள்கை இல்லை. ஆட்சியை எம்மிடம் கையளித்தால் ஒரு மாதத்தில் அனைத்தையும் மறுபக்கம் மாற்றிக் காட்டுவோம்– என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்றிணைப்பதற்காக குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு அடுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும். பழையதை மறப்போம்.அனைத்து நடவடிக்கைகளையும் பொறுத்திருந்து பார்ப்போம்–என்றார். (த)

## லசந்த கொலை குறித்து பல முக்கிய தகவல்கள்

### விசேட விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 19

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறைக் கைதியொருவர் அளித்த வாக்குமூலத்தில் பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

வேறொரு குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டு தற்போது சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதியொருவர் அளித்த வாக்குமூலத்தில் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும், அத்தகவல்களின் அடிப்படையில் புலனாய்வுப் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவும் பல தகவல்களை வழங்கியுள்ளார் எனவும், அந்தத் தகவல்களின் அடிப்படையிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இரு சந்தேகநபர்கள் கைதாகியிருந்தமையும், அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்துவிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## திருமண பதிவுக்கான கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஜூன் 19

திருமணப் பதிவுக் கட்டணத்தைக் குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது திருமண பதிவு கட்டணமாக அறவிடப்படும் 5,000 ரூபா[illegible] 1,000 ரூபாயாக குறைப்பத[illegible] அமைச்சரவை அனுமதி வழ[illegible]யுள்ளது.

நேற்று வியாழக்கிழமை நடை[illegible] அமைச்சரவைத் தீர்மானங்க[illegible] வெளியிடும் ஊடகவியலாளர் ச[illegible]பின்போது திருமண பதிவுக் கட்ட[illegible] குறைக்கப்பட்டமை அறிவி[illegible]பட்டுள்ளது.

அதன்படி இந்தக் கட்டணக் குறை[illegible] 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16[illegible] திகதிமுதல் நடைமுறைப்படு[illegible] பட்டுள்ளதாகவும் இதன்போது [illegible] விக்கப்பட்டுள்ளது.

# நாட்டை மஹிந்தவுக்கு வழங்க அனுமதியோம்

## அஸாத் சாலி சூளுரை



கொழும்பு, ஜூன் 19

சிறிய கட்சிகளின் மூலம் இனவாதத்திலிருந்தும், சர்வாதிகாரத்திலிருந்தும் மீட்டெடுத்த இந்த நாட்டை மீண்டும் கொள்ளைக்காரக் கும்பலிடம் ஒப்படைக்க ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டோம் என ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத் ஸாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத் துவோம் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

பெரும் போராட்டங்களுக்கு மத்தியிலும் சவால்களுக்கு மத்தியிலும் கடந்த ஜனவரி 8ஆம் திகதி சிறுபான்மைக் கட்சிகளினாலும், சிறிய கட்சிகளினாலும் இந்த நாட்டை சர்வாதிகாரத்திலிருந்தும் இனவாதத்திலிருந்தும் மீட்டெடுக்க முடிந்துள்ளது. ஆனால், இன்று சிறுபான்மைச் சமூகத்தினர் மீண்டும் அச்சமடையும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டைச் சூறையாடி – சிறுபான்மைச் சமூகத்திற்கு எதிராக இனவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட மஹிந்த ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைத்துக் கொண்டு அரசியல் நடத்த நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

தேர்தல் முடிந்தவுடனே இந்தக் கொள்ளைக்காரர்களை கைது செய்திருந்தால் இன்று இந்நிலை வந்திருக்காது.

அண்மையில் பொரளைப் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அத்துடன், மேலும் மூன்று சந்தேகநபர்களை பொரளை பொலிஸார் எதிர்வரும் நாள்களில் கைதுசெய்யவுள்ளனர்.

நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டுள்[illegible] இதற்கு முக்கிய காரணம் சி[illegible] சிறுபான்மைக் கட்சிகள்தான். எ[illegible] ஜனாதிபதி எங்களுக்குக் கொ[illegible] வாக்குறுதிபோல் 20ஆவது [illegible]தச் சட்டத்தில் சிறுபான்மை, [illegible] கட்சிகளின் பிரதிநிதித்துவம் [illegible]காதவாறு திருத்தங்கள் மேற்[illegible]ளப்பட்டு நாடாளுமன்றத்தில் [illegible] வேற்றவேண்டும். ஆனால், பான்மைச் சமூகத்துக்கு எதி[illegible] ஏதும் மாற்றம் ஏற்படும் பட்ச[illegible] அரசை எதிர்க் கவும் நாம் தயா[illegible] உள்ளோம்– என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரி




யாழ்.இந்து மகளிர் கல்லூரி




# வடமாகாண கரம் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன், 19
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கரம் தொடரில் 15வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் 19வயதுப் பிரிவில் யாழ்.இந்து மகளிர் அணியும் சம்பியன் ஆகின.

**15வயதுப் பிரிவு பெண்கள்**

கடந்த புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற 15வயதுப் பிரிவு பெண்களுக்கான. இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ்.இந்து மகளிர் அணியும் மோதின. இரண்டு தனி நபர் ஆட்டங்களையும், ஓர் இரட்டையர் ஆட்டத்தையும் கொண்ட இறுதியாட்டத்தின் முதலாவது தனி நபர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக டிசாந்தியும் யாழ்.இந்து மகளிர் சார்பாக லூசியாவும் மோதினர். இதில் டிசாந்தி 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக முதலாவது வெற்றியைப் பதிவு செய்தார்.

இரண்டவது தனிநபர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சார்பாக துசாயானியும், யாழ். இந்து மகளிர் சார்பாக துஜின்தாவும் மோதினர். இந்த ஆட்டத்தில் துசாயானி 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற மூன்றாவது செற்றின் தேவை இல்லாமலே சம்பியனானது கொக்குவில் இந்துக்கல்லூரி.

**19வயதுப் பிரிவு பெண்கள்**

19வயதுப் பிரிவு பெண்கள்க்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ்.இந்து மகளிர் அணியும் மோதின. இரண்டு தனிநபர் ஆட்டங்களையும், ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்ட இறுதியாட்டத்தின் முதலாவது தனி நபர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக அபித்திராவும், யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சார்பாக கிருஸ்ணப் பிரியாவும் மோதிக்கொண்டனர். இதில் 25:0 என்ற புள்ளிகளின் அடிப் படையில்அபித்திரா வெற்றிபெற்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் முதலாவது வெற்றியை பதிவு செய்தார்.

இரண்டவது தனிநபர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பாக பவானியும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி சார்பாக வினோவாவும் பலப்பரீட்சை நடத்தினர். இந்த ஆட்டத்தில் வினோவா 24:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற தனிநபர் ஆட்டங்கள் 1–1 என்ற அடிப்படையில் சமநிலையானது. இதனால் வெற்றியாளரை தீர்மானிக்கும் ஆட்டமாக இரட்டையர் ஆட்டம் நடைபெற்றது. இரட்டையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக கீர்த்திகாகவும், சிவானியும், யாழ்.இந்து மக ளிர் கல்லூரி சார்பாக நுஸ்காவும், மேரி மோனகாவும் மோதிக் கொண்டனர். கொக்குவில் அணியின் பக்கம் சற்று எதிர்ப்பிருந்தாலும் யாழ். இந்து மகளிர் கல்லூரி இணை 22:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணத்தைக் கைப் பற்றிது. (ம–23)

## இன்றைய மோதல்கள்

யாழ்மாவட்டத் தாச்சித்தொடர்

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடந்தும் தாச் சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. அதில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டா வில்மறுமலர்ச்சி அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி அணி மோதவுள்ளது. (ம–23)

தங்கராசா ஞாபகார்த்த தொடர்

வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் அமரர் தங்கராசா வின் ஞாபகார்த்த உதைபந்தாட்டத் தொடர், குறித்த கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களாக பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னாகண்டல் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது (ம–102)

# இ.தங்கராசா ஞாபகார்த்த உதைபந்தாட்டத்தொடர் உதயசூரியன், விக்னேஸ்வரா அடுத்த சுற்றுக்குள்

முல்லைத்தீவு, ஜூன் 19
அமரர் இ.தங்கராசா ஞாபகார்த்த உதைபந்தாட்டத்தொடரில் உதய சூரியன், விக்னேஸ்வரா அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளன.

**உதயசூரியன் எதிர் யங்கர்ஸ்**

வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் அமரர் இ.தங்கராசாவின் நினைவாக உதைபந் தாட்டத் தொடரொன்றினை குறித்த கல்லூரியின் பழையமாணவர்கள் அமைப்பு நடத்தி வருகிறது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் செம்மலை உதய சூரியன் அணியை எதிர்த்து முல்லைத் தீவு யங்கர்ஸ் அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பமாகி 22ஆவது நிமிடத்தில் உதயசூரியன் வீரர் கேதீஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி கோலாக மாற்ற உதயசூரியன் சார்பாக ஆட்டத்தில் முதலாவது கோலும் தொடரின் முதலாவது கோலும் பதிவானது. யங்கர்ஸ் அணிக்கு வாய்ப்புக்கள் கிடைக்காமலும் இல்லை. கிடைத்த வாய்ப்புக்கள் அந்த அணியால் வீணடிக்கப்பட ஆட்டத்தின் முதல்பாதிவரை 1–0 என்ற அடிப்படையில் உதயசூரியனின் ஆதிக்கம் தொடர்ந்தும் நிலைபெற்றிருந்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் 4ஆவது நிமிடத்தில் உதயசூரியன் அணியின் மதுசன் தமது அணிக்கான இரண்டாவது கோலினை பதிவுசெய்ய சூரியனின் பிரகாசம் அதிகரிக்க ஆரம்பித்தது. ஆனால் சூரியனை அஸ்தமிக்கச் செய்வது என்ற முனைப்புடன் செயற்பட்டனர் யங்கர்ஸ் வீரர்கள். முயற்சிக்குப் பயனாக இரண்டாம் பாதியின் எட்டாவது நிமிடத்தில் யங்கர்ஸ் சார்பாக ஒருகோல் பதிவாக உதய சூரியனின் ஆட்டம், ஆட்டம் கண்டது. இருப்பினும் யங்கர்ஸ் வீரர்களால் சூரியனுக்கு எதிராக போராட முடிந்ததே தவிர மாறாக உதய சூரியனை அஸ்தமிக்கச் செய்ய முடியவில்லை. முடிவில் 2–1 என்ற கோல் கணக்கில் உதயசூரியனின் வெற்றி உதய மாகியது.

**ஒற்றுமை எதிர் விக்னேஸ்வரா**

தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் மாத்தளன் ஒற்றுமை அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமானது முதல் முடிவு வரை வீரர்களின் செய்த தவறுகள், கவனவீனங்களைத் தவிர மைதானத்தில் மற்றொன்றும் நிகழவில்லை. ஒவ்வொருவரும் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை தொடர்ச்சியாக வீணடித்துக்கொண்டிருந்த காரணத்தினால் கோலெதுவும் பதியப்படாமல் ஆட்டம் நிறைவடைந்தது. இதனால் ஆட்டத்தின் வெற்றி தோல்விகள் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் தஞ்சமாகியது. கடைசி வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்திய விக்னேஸ்வரா அணி 4–1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது. (ம–102)

# யாழ்.மத்தி, மானிப்பாய் ஏஞ்சல் அபாரம்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந் தாட்டத் தொடரின் ஆட்டங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

**13வயதுப்பிரிவு ஆண்கள்**

யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற 13 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திகல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 43:24 புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.


**17வயதுப்பிரிவு ஆண்கள்**

பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப்பந்தாட்டதிடலில் இடம்பெற்ற



17வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலைஅணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 99:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. நடப்புத் தொடரில் இது வரை விளையாடிய அணிகளுள்ளே மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை பெற்ற புள்ளிகள்தான் அதி கூடிய புள்ளிகளாகப் பதிவாகியுள்ளன. (ம–23)



வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான மாகாணமட்ட கராத்தே தொடரின் 15வயதின் குமித்தே பிரிவில் யாழ்ப்பாணம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய மாணவி மணிவண்ணன் தியாகரிஷி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ம–7)

## சிந்து எதிர் சாந்தை ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடந்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 5 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. (ம–23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதத்தை நோக்கி சில்வா இலங்கை நிதான ஆரம்பம்


இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் இலங்கையணி 178–3 என்று பாதுகாப்பான நிலையில் உள்ளது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் நாள் ஆட்டம் மழை குறிக்கிட்ட காரணத்தினால் நாணயச்சுழற்சிகூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது. ஆட்டத்தின் இரண்டாம் நாளில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய களத்தில் கருணாரத்னவுடன் சில்வா. சில்வாவின் ஆட்டத்தில் நிதானம் தெரிந்த அதேநேரம் கருணாரத்ன ஆரம்பம் முதல் சற்று தடுமாற்றமாகவே எதிர்கொண்டார். பிரதிபலிப்பாக 21 ஓட்டங்களுடன் பவிலியனை நோக்கி நடந்தார். இலங்கையின் ஆட்டம் ஆட்டம் கண்டது. களத்தில் சர்ரேயில் கலக்கிய சங்கா. டெஸ்ட்டில் தனக்கே உரித்தான பாணியில் நிதானிக்கத் தொடங்கினார். ஒரு முனையில் சங்கா நிதானிக்க மறுமுனையில் சில்வா நிதானிக்க இலங்கையின் அடுத்த இலக்கு விழுவதாக இல்லை. நேரமும் பந்துப்பரிமாற்றமும் உருண்டோட இலங்கை பலம்பெற ஆரம்பித்தது. ஆளுக்கொரு அரைச்சதத்தை விளாசி இணைப்பாட்டமாக 112 ஓட்டங்கள் பகிர்ந்திருந்த வேளையில் சங்கா அரைச்சதத்துடன் ஆட்டமிழந்தார். வந்த வேகத்தில் விடைபெற்றார் திரிமன்னே. இலங்கை 154–3. தலைமை இன்னிங்ஸிற்காக களத்தில் மத்தியூஸ். மறுமுனையில் நங்கூரம் பாய்ச்சியதுபோல் நிலைத்துநின்றார் சில்வா. இரண்டாம் நாளின் முடிவுவரை நிதானத்தை தொடர முடிவில் இலங்கை 178–3. சில்வா 80 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் பத்து ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரியாஷ்; 2 இலக்குகளையும் ஹபீஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். (ம)



# ரூட், மோர்கன் மிரட்டலில் பழிதீர்த்தது இங்கிலாந்து




இங்கிலாந்து எதிர் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் ஆட்டங்களைக்கொண்ட தொடரின் நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் குப்திலுடன் மக்கலம். நடப்புத்தொடரில் நியூஸிலாந்தின் சிறந்த ஆரம்ப இணைப்பாட்டம் இதுதான் என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு பலமான அடித்தளம் நியூஸிலாந்துக்குச் சார்பாக அமைக்கப்பட்டது. பந்துப்பரிமாற்றத்துக்கு 6 ஓட்டங்கள் என்ற சீரான சராசரியில் ஓட்டங்கள் குவிக்கப்பட்டது. அணியின் ஓட்டம் 88ஆக இருந்தபொழுது சற்று அவசரப்பட்டுவிட்டார் மக்கலம். இடத்தை நிரப்பினார் வில்லியம்சன். வழக்கம்போல் நிதான ஆட்டம். வில்லியம்சன் வந்ததுதான் தாமதம் விடைபெற்றார் குப்தில். தற்பொழுது களத்தில் வில்லியம்சன் மற்றும் ரெய்லர். கடந்த ஆட்டங்களில் தமது அபார இணைப்பாட்டத்தால் கிரிக்கெட்டின் தாயகத்தை கிலிகொள்ள வைத்தவர் இந்த ஆட்டத்திலும் தமது நிலையைக் காட்டத்தவறவில்லை. இணைப்பாட்டமாக 101 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அரைச்சதத்தை பதிவுசெய்து விட்டார் வில்லியம்சன். அரைச்சதத்தை நூலிழையில் தவறவிட்டு பவிலியன் திரும்பினார் ரெய்லர். எலியாட்டும் சீரான பங்களிப்பை கொடுக்க சதத்தை நோக்கிப் பயணித்தார் வில்லியம்சன். அனுமதிக்கவில்லை கிரிக்கெட்டின் தாயகம். 10 ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார் வில்லியம்சன். பின்வரிசை வீரர்கள் அதிரடிகாட்ட முடிவில் நியூஸிலாந்து 349–7.

பந்துப்பரிமாற்றத்துக்கு 7ஓட்டங்கள் என்ற சராசரியில் பயணித்தால் இலக்கை எட்டிவிடலாம் என்ற நிலையில் இங்கிலாந்து. நம்பிக்கையுடன் களத்தில் றோய் மற்றும் ஹேல்ஸ். நியூஸிலாந்தின் இணைப்பாட்டத்தை விட பலமாக அமைந்தது இங்கிலாந்தின் இணைப்பாட்டம். றோய் ஓரளவு நிதானித்தாலும் அதிரடியில் மிரட்டினார் ஹேல்ஸ். 32 பந்துகளில் அரைச்சதத்தை எட்டிப்பிடித்தார். இணைப்பாட்டம் நூறாக இருந்தபொழுது ஆட்டமிழக்கவும் செய்தார். ஹேல்ஸின் இடத்தை பக்காவாக நிரப்பினார் ரூட். ரூட் இறங்கியதும் றோய் வெளியேறினார். தற்பொழுது களத்தில் மோர்கன். தலைவரும் உபதலைவருமாக இணைந்து அற்புதமான இன்னிங்ஸை அரங்கேற்றினார்கள். ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்துவிட்டார்கள் இலக்கு மட்டும் விழுந்தபாடில்லை. நேரம் செல்லச் செல்ல இணைப்பாட்டம் வலுப்பெற்றது. நியூசிலாந்துக்கு எமனாகவும் மாறியது. ஆளுக்கொரு சதம் கடந்து இணைப்பாட்டமாக 198 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்தின் வெற்றிக்கு வித்திட்டனர். ஆட்டநாயகனாக மோர்கன் தெரிவானார்.

5 ஆட்டங்கள் கொண்டதொடர் தற்பொழுத 2–2 என்று சமநிலையில் உள்ளது. (ம)

## ஆசிய சதுரங்கத் தொடரில் தமிழ் மாணவி



யாழ்ப்பாணம், ஜூன் 19

சிங்கப்பூரில் கடந்த மாதம் 30ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 8ஆம் திகதிவரை இடம்பெற்ற ஆசிய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடரில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி செ.அனனியா பங்கு பற்றியுள்ளார்.

இவர் இலங்கை பாடசாலை சதுரங்க சங்கத்தால் நடத்தப்பட்ட தேசிய சதுரங்கத் தொடரில் 7வய துப் பெண்களுக்கான பிரிவில் 3ஆம் இடத்தைப் பெற்றமையாலேயே ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான தொடருக்கு கலந்துகொண்டார். இருப்பினும் ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான தொடரில் அனனியா முதல் மூன்று இடங்களுக்குள்ளும் இடம்பிடிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (23)

## ஞான பாஸ்க்ரோதய சங்கத்தின் துடுப்பாட்டத் தொடர் இன்று ஆரம்பம்

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் திறந்த (அனைவருக்குமான) துடுப்பாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

காலை 9 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் ஆரம்பமாகும் இந்தத் தொடரில் புதிதாக இணையவிரும்பும் கழகங்களும் இணைந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ம)

# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வலுவான ஆதிக்கம்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கி சங்கத்தின் அனுமதியுடன் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி நடத்திய 17வயதுப்பிரிவு இருபாலருக்குமான ஹொக்கி தொடரில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாவும் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.

**ஆண்களுக்கான இறுதியாட்டம்**

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் முதல்பாதிவரை எந்த அணியாலும் ஒரு கோலையேனும் பதிவுசெய்துகொள்ள முடியவில்லை. ஆட்டத்தின் இரண்டாம் பாதியிலும் இதே நிலைமை நீடிக்க ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் வெற்றி தோல்வி முடிவு சமநிலை தகர்ப்பு உதைகளிடம் தஞ்சமானது. இறுதிவாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லுரரி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை அதன் சொந்த மைதானத்தில் 4–0 என்ற கோல் கணக்கில் ஊதித்தள்ளி மூன்றாமிடத்தை தனதாக்கியது தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

**பெண்களுக்கான இறுதியாட்டம்**

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. வாய்ப்புக்களைத் தவறவிடுவதென்பது இரு அணிகளதும் ஆட்டத்தில் தவிர்க்க முடியாத அங்கமாக மாற்றம் பெற்றது. இதனால் முதல்கோல் பதிவாவதற்கு நேரங்கள் இழுத்தடித்துக்கொண்டே சென்றது. இதே நிலைமை நீடிக்க 0–0 என்ற நிலையிலேயே முதல்பாதி நிறைவுக்கு வந்தது.

முதல்கோலைப் பதிவுசெய்வது யார்? என்ற விடைதெரியாத கேள்வியுடனும் பதட்டத்துடனும் இரண்டாம் பாதி ஆரம்பமானது. கோல்கள் எதுவும் பதியப்படாத நிலைமை நீடித்தாலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணியின் வீரங்கனை அஞ்சலினா [illegible] அணிக்கான [illegible] பதிவுசெய்தார். பழிதீர்ப்பதுக்காக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி படாத பாடுபட்டபோதிலும் எதுவும் பலனளிக்காது போக முடிவில்





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி 1:0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)

வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள்
ஆரம்பம்
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

G.A.Q B.A

நீங்கள் நன்கு அறிந்த
பிரபலம்மிக்க ஆசிரியர் குழாம்
* தமிழ் -தர்மராஜா, முகுந்தன்
* புவியியல் - செந்தூரன்
* வரலாறு - விக்கி
* அரசியல் - பொன். சந்துரு
* இந்து நாகரிகம் - திருமதி சுதாமதி
* பொருளியல் - சுதாகரன்
விஜேந்திரன்

ஆரம்பம்: 20.06.2015 சனி - 10 மணி
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
அனுமதிகளையும் விவரங்களையும்
அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## விசேட வகுப்புகள்

வடமாகாண சாரதி தெரிவு
சனி 1.00- 4.00வரை

வடமாகாண கலாசார உத்தியோகத்தர்
சனி 2.00- 5.00வரை

அதிபர் சேவை தரம் 3
ஞாயிறு
1.00- 5.00வரை

பதிவாளர் சட்டமாணி வங்கி
பரீட்சைகளுக்கு
ஞாயிறு
2.00- 5.00வரை

T.P: 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கோமர்ஷல் வங்கியருகில்)

# அங்கே பாருங்க அதுதான் ரொனால்டோ





உதைபந்தாட்டத்தில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வரும் ரொனால்டோவை கௌரவப்படுத்தும் வகையில் வான்வெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய நட்சத்திரக் கூட்டத்துக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.
சுமார் 800 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவான இந்த நட்சத்திர கூட்டத்தை போர்த்துக்கல்லை சேர்ந்த விண்வெளி ஆய்வுக்குழு கண்டுபிடித்து சிஆர்– 7 என்று அதற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.
சி.ஆர். என்பது கிறிஸ்டியானோ ரொனால்டோ என்பதை குறிக்கும். 7 என்பது ரொனால்டோ அணிந்து விளையாடும் 'ஜெர்சி' எண் ஆகும். இதே வயதை ஒத்த நட்சத்திரங்களுடன் ஒப்பிடுகையில் இது 3 மடங்கு அதிகமாக ஒளிரும் தன்மையுடயது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# அனா இவானோவிச் அதிர்ச்சி தோல்வி



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஏகான் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், முன்னணி வீராங்கனை அனா இவானோவிச் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.
இரண்டாவது சுற்றில் தகுதிநிலை வீராங்கனையான போர்த்துக் கல்லைச் சேர்ந்த மிஜஷல் லார்ச்சர் டி பிரிட்டோவுடன் நேற்று மோதிய இவானோவிச் 4–6, 6–3, 6–7 என்ற செட் கணக்கில் போரா டித் தோற்றார். இந்த ஆட்டம் கிட்டத்தட்ட 1 மணி, 48 நிமிடம் வரை நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்கள்

### அருந்தவநாதன் மகிந்தன்



நீர்வேலி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் பிரான்ஸ்-பாரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருந்தவநாதன் மகிந்தன் (17.06.2015) புதன்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
தொடர்பு :- 077 109 3753
தகவல் :-
குடும்பத்தினர்.


### ஆதர் இராஜரட்ணம் தேவசகாயம்



சாவகச்சேரியைப்பிறப்பிடமாகவும் அராலி வடக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆதர் இராஜ ரட்ணம் தேவசகாயம்(Rasa/Deva) 17.06.2015 அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.
இவர் காலஞ்சென்றவர்களான டானியல் ஜெபரட்ணம், றோஸ் ராசம்மா தேவசகாயம் அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலா பரம்சோதி(Nee welch) அவர்களின் பாசமிகு கணவரும் றஞ்சித், நிம்மி, றோஹான், சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் றோஸ், பியர், றொக்கி, பொசொன் ஆகியோரின் மாமனாரும் றொஷான், நிஷான், போல், நிரோஷா, கவிதா, றொஷேல், றெஜி, திபோஸ், ஜூலியன் ஆகியோரின் அன்புக்குரிய பேரனாரும் டானியல், எலிஷா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.06.2015) சனிக்கிழமையன்று காலை 9.00 மணிக்கு செட்டியார் மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டையில் உள்ள இவரது வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் 10.30 மணியளவில் வட்டுக்கோட்டை தென்னிந்தியத்திருச்சபைக்குரிய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உஉறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டியார் மடம், அராலி வடக்கு
வட்டுக்கோட்டை.
தகவல் :-
றொஹான் பிறேம்நாத் தேவசகாயம்
தொடர்பு :- 077 150 1002

### கந்தையா வரதராஜா(குட்டி)



பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வரதராஜா 17.06.2015 புதன் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பராணியின் அன்பு கணவரும் விஜிதா, ஆஷா, சோபா, சாந்தி ஆகியோரின் தகப்பனாரும் சுஜீவன், சுரேஸ், சதிஸ், அஜந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜேர்மனித் தொடர்புகளுக்கு :-
004915213474267
14, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தகவல் :-
மைத்துனர்-ஜெயராஜ்
மைத்துனி-செல்வராணி
077 949 4419

**வேலை வாய்ப்பு**

பாதுகாப்பு கமரா (CCTV CAMERA) பொருத்தும் நிறுவனத்திற்கு பாதுகாப்பு கமரா பொருத்தும் வேலைக்கு ஆள்கள் தேவை.
உங்கள் சுயவிவரக்கோவையினை 25.06.2015 இற்கு முதல் கிடைக்க கூடியவாறு தபாலிலோ அல்லது நேரடியாகவோ கீழ்க் கண்ட முகவரியில் ஒப்படைக்கவும்.
AJ SYSTEMS I PVT LTD,
315,1/2 Palaly Road, Parameswara Junction, Jaffna
021 567 6767

**Maths - Gr 6-O/L**
Group and personal classes
திரு.C.K.B.தயாளன்
(077 749 2794)
இடம் : 85, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
(Pizza கடைக்கு அருகில்)

**Hurry! Register now for intake**
Offer : Spoken English Course Fee Free
1. NVQ Level - MS Office(CAA)
2. Engineering-MCSE_USA
3. Diploma in Marketing / Auditing
4. Diploma in Information Technology
குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யலாம்
8.30am-5.30pmவரை விரும்பிய நேரத்தில் தனியாகவோ, குழுவாகவோ விரிவுரைகளை தெரிவு செய்யலாம்.
யார் கற்கலாம்? பாடசாலை மாணவர்கள், பெரியோர்கள், வங்கி ஊழியர்கள்
Registration & Inquires, கல்வியங்காட்டில் MCAI CAMPUS
243, Adiyapatham Road (Near Kalviyankadu Junction)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.
இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
20.06.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

Batches Starts On
20.06.2015@10.00am
22.06.2015@ 9.00am
27.06.2015@ 9.00am
29.06.2015@ 9.00am
01.07.2015@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S)
0777585913, 0777222422
0776555677

# நடால் மீண்டும் சொதப்பல்



இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச ரென்னிஸ் தொடரில் நடால் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித்தோல்வியடைந்து வெளியேறினார்.
தரப்படுத்தலில் பத்தாவது இடத்திலுள்ள நடால் 79ஆவது இடத்திலுள்ள அலெக்சாண்டர் டோல் கோபோலவ்விடம் 6–3, 6–7, 6–4 என்ற செற் கணக்கில் வீழ்ந்தார்.
தரப்படுத்தலில் இவ்வாறு பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு வீரரிடம் நடால் இவ்வாறு தோல்வியடைவது இதுவே முதல் தடவை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org